


...லை - என்று புதிதாய் பிறப்போம் - இந்துமதி

# என்று புதிதாய் பிறப்போம்...

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAR 2004
CHENNAI-600 008

## இந்துமதி

குறிப்புதவி நூல்

பூஞ்சோலைப் பதிப்பகம்
11, சிவப்பிரகாசம் தெரு
பாண்டி பஜார் : : தி. நகர்
சென்னை - 600 017

**என்று புதிதாய் பிறப்போம்...**
முதற்பதிப்பு : டிசம்பர், 1985
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 1994

578257

**விலை ரூ. 21-00**

894.8113
IND

குறிப்புதவிநூல்

YENDRU PUTHITHAI PIRAPPOM
tamil social novel
by INDUMATHI
© INDUMATHI
Second edition : december, 1994
148 pages
10 pt. letters
box board binding
POONCHOLAI PATHIPPAGAM
11, Sivaprakasam Street
Pondy Bazaar
T. Nagar, Madras-17

அச்சிட்டோர் :

இராசகிளி பிரிண்டர்ஸ்
25, அருணாசலபுரம் பிரதான சாலை
அடையாறு, சென்னை-600 020

CONNEMARA PUBLIC LIBRARY
31 MAR 2004
CHENNAI-600 008

## இந்தப் புத்தகம்

நகர வாழ்க்கையில் உயர் மத்திய தர வர்க்கச் சூழலில் கணவன்-மனைவி எனும் உறவு போலித்தனமாகிப் போகையில் பிஞ்சு உள்ளங்கள் பொசுங்கிப் போகும் அவலத்தை இந்நாவலில் ஆழமாகச் சித்தரிக்கிறார் இந்துமதி.

உள்ளார்ந்த அன்பு கிட்டாமல் அனாதையாகி விட்ட சாயிராம் நமது அடிமனதில் ஆழமாகப் பதிந்துவிட்ட துன்ப ஓவியமாகிறான்.

முன் நாவலில் நகர வாழ்வின் உறவுச் சிதறலைப் படம் பிடிக்கும் அதே ஆசிரியை கிராமப்புறத்துக் காட்டுத் தனமான மனிதனாக செந்திலைப் படம் பிடித்துக் காட்டுகிறார் இரண்டாவது நாவலில். படித்தவனின் வேஷம் கலைந்து தனது காதல் தோல்வியையும் உணர்ந்து - அதே சமயம் காட்டிக் கொடுக்காமல் சுய அழிவுப் போக்கை மேற்கொள்ளும் காட்டானாக செந்திலை முதற் பார்வைக்குப் படும்படி செய்து நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறார் ஆசிரியை.

காதல், கல்யாணம், படிப்பு, அன்பு, என்பதெல்லாம் கிராம, நகர்ப்புற நாகரிகத்தில் எப்படிப் பிரதிபலிக்கின்றன என்பதை இரு வேறு கோணங்களிலிருந்து ஆழமாகச் சித்தரித்துள்ளார்.

தொடர்ந்து தம் படைப்புக்களை வெளியிடும் வாய்ப்பினை எமக்கு அளித்து வரும் ஆசிரியை இந்துமதிக்கு எமது நன்றி.

**அ. கண்ணன்**
பூஞ்சோலை

குறிப்புதவிநூல்

உள்ளே

என்று புதிதாய் பிறப்போம்... — 5

விஷம் — 87

# என்று புதிதாய் பிறப்போம்...

## 1

கண்களைத் திறந்து பார்த்தபோது, அறை சுத்தமான இருட்டில் கிடப்பதை உணர்ந்தான் சாயிராம். மின்சாரம் முழுதுமாகத் தடைப்பட்டுப் போயிருக்க வேண்டும். தலைக்கு மேல் சுழலும் விசிறியும் நின்றிருக்க வேண்டும். ஒரே புழுக்கமாக இருந்தது. கழுத்தடியும், முதுகும் தெப்பமாக நனைந்து போயிருந்தது. எழுந்து உட்கார்ந்து துடைத்துக் கொள்ளக்கூட சாயிராமிற்குப் பயமாக இருந்தது இருட்டு அவனைப் பொறுத்த வரை மருட்டுகிற விஷயம்! ஒருவினாடி விளக்கு போனால்கூட, 'அம்மா...' என்று அலறுவான். மூச்சை யாரோ நிறுத்தி விட்டதாக உணருவான். குரல் வளையை இறுக்குவதாகப் பிரமைப்படுவான்.

விளக்குகள் அணைந்து மின்சாரம் தடைப்பட்ட உடனே உமா எங்கிருந்தாலும் குரல் கொடுப்பாள் :

'பயப்படாதே சாயிராம்! இதோ அம்மா வந்துட்டேன்... லாந்தர் விளக்கை ஏற்றி எடுத்துண்டு வரேன்...'

'சீக்கிரம் வாம்மா! ரொம்ப ரொம்ப பயமா இருக்கும்மா...'

'வந்துண்டே இருக்கேன்...' என்னும் போதே லாந்தர் வெளிச்சம் அம்மாவின் உருவில் அசைந்து அருகில் வரும்.

அந்த முழு இருட்டில் சின்ன பிரகாசம் அதீத அழகாய்த் தெரியும். இருட்டில் அத்தனை நிமிடங்களும் கை கையாய் நீண்டு பயமுறுத்தின பிசாசு ரூபங்கள் மறைந்து, தேவதை தோன்றின மாதிரி அம்மா தோன்றுவதாய் இவன் நினைத்துக் கொள்வான். பயம் முற்றிலும் அகலாத நிலையில் அம்மாவின் கை லாந்தரைப் பிடுங்கிக் கீழே வைத்துவிட்டு, அவளை இறுக அணைத்துக் கொள்வான். நெஞ்சு படபடக்கும்; மூச்சு பெரிதாய் வரும்; வார்த்தைகள் தடுமாறும். அம்மாவை இறுக்கின இறுக்கத்தில் எதிலிருந்தோ மெல்ல மெல்ல விடுபட்ட விடுதலை உணர்வில் - சாவின் விளிம்பிலிருந்து அம்மா தன்னைக் காப்பாற்றி விட்ட சந்தோஷத்தில் பேசுவான் :

''ஏம்மா இந்த விளக்கு இப்படி அணைஞ்சு அணைஞ்சு போறது?''

உமா அவனை இன்னமும் தன்னோடு சேர்த்து, தலையை வருடி கன்னங்களில் முத்தமிடுவாள்.

''அதுக்காகத்தானே நானே ஓடி வந்தேன். ஏன் ராம்... விளக்குன்னு இருந்தால் அணையாதா? இருட்டுக்கு இப்படிப் பயந்தியானால், நீ எப்படிப் பெரியவனாறது? அம்மா - அப்பாவைக் காப்பாத்தறது? ம்...''

''அப்போ பயமாயிருக்காதும்மா... பெரியவனானதும் விளக்கு அணைஞ்சால் நானே போய் லாந்தரை ஏற்றிவிட்டு வருவேன். உன்னை மாதிரி வெளிச்சமா - பிரகாசமா இருப்பேன்...''

அவன் குரலில் தெரிகிற பெருமையும், அழுத்தமும் அவளைப் பரவசப்படுத்தும். உள்ளுக்குள் சிலிர்ப்பாக ஓடும். முதுகுத்தண்டில் சந்தோஷம் சொடுக்கும்.

''நான் என்ன பிரகாசமாகவா இருக்கேன்—?'' - வேண்டுமென்றே கேட்பாள் அவள்.

''பின்னே, உன்னை மாதிரி வெள்ளையா, உயரமா, பளபளன்னு யாரு இருக்காம்மா? எங்க ஸ்கூல் டீச்சர்கூட



கூட இல்லை. வேணும்னால் பத்மா மிஸ்ஸைச் சொல்லலாம். அவங்ககூட உன்னை மாதிரி அழகில்லேம்மா... நீ ஸ்கூலுக்கு ஃபீஸ் கட்ட வருவே இல்லியம்மா... அப்பே என் பிரெண்ட்ஸ் எல்லாரும், 'ஏய் சாயிராம், யுவர் மதர் ஈஸ் வெரி ப்யூட்டிஃபுல்டா!'ன்னு சொல்லுவாங்க, எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா!''

''அப்படியா?''

''ஆமாம்மா... ஆனால், அப்பா வந்தால் அப்படிச் சொல்ல மாட்டாங்க. 'யார்றா சாயி அது?'ன்னு கேட்பாங்க.

'எங்க அப்பாடா...'

'இதுவா உங்க அப்பா? இவ்வளவு கறுப்பாவா உங்கப்பா இருப்பாங்க? பொய் சொல்றேடா...'

'ம்ஹூம்... இல்லேடா, நிஜமாகவே இவர்தான் எங்க அப்பா.'

'ப்ராமிஸா?'

'பிராமிஸாடா...'

'உங்கம்மா அவ்வளவு வெள்ளையா அழகா இருக்காங்க; அப்பா கன்னங்கறேல்னு அசிங்கமா இருக்காரேடா... இவரையா உங்கம்மா கல்யாணம் பண்ணிட்டிருக்காங்கன்னு?' கேட்பாங்கம்மா...''

''நீ என்ன சொல்லுவே?''

''ஆமாம்னு சொல்லுவேன். எங்கப்பா ரொம்ப நல்லவர்டான்னுவேன்... கறுப்பானால் என்னடான்னு சண்டைக்குப் போவேன்...''

''ஏம்ப்பா, வீணா அவங்ககூடல்லாம் சண்டைக்குப் போறே?''

''நானா போக மாட்டேம்மா... அவங்களா சண்டைக்கு வந்தாலும் விட மாட்டேன்!''

''இனிமேல் அவங்க உன்கூட சண்டைக்கு வந்தால் - அப்பாவைக் கறுப்புன்னு சொன்னால் - நீ 'ஒத்தெல்லோ கதை தெரியுமாடா உங்களுக்கு'ன்னு திருப்பிக் கேளு...''

சாயிராம் அத்துடன் தன் நண்பர்களையும், அவர்கள் போட்ட சண்டையையும் விட்டு விட்டு, உமா சொன்ன கதையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வான்.

''அது என்ன 'ஒத்தெல்லோ' கதைம்மா?''

''ஒத்தெல்லோன்னு ஒருத்தன் இருந்தான்...''

''நிஜமாகவே இருந்தானா?''

''அது தெரியாதப்பா எனக்கு... ஷேக்ஸ்பியர் எழுதினதைத்தான் நான் படிச்சிருக்கேன். நிஜமா, பொய்யான்றதையெல்லாம் ஆராய்ச்சி பண்ணினதில்லை.''

''சரி... நீ கதையைச் சொல்லும்மா!''

''அந்த ஒத்தெல்லோன்றவன் ரொம்ப ரொம்ப கறுப்பா இருப்பான்...''

''அப்பா மாதிரியம்மா?''

''உஷ்...! உன் பிரெண்ட்ஸ் அப்பாவைக் கறுப்புன்னு சொன்னால் உனக்குக் கோபம் வர்றதே... இப்போ நீயே சொல்லலாமா?''

''நம்ப அப்பா... நான் சொல்றேன்.''

''ம்ஹூம். எனக்குக் கோபம் வரும்.''

''அப்போ சொல்லலைம்மா...சாரிம்மா! நீ கதையைச் சொல்லும்மா...''

உமா அவனை மடியில போட்டுக் கொண்டு-கல்லூரியில் மிஸ் வில்லியம்ஸ் எடுத்த ஷேக்ஸ்பியரை ஞாபகத்துக்குக் கொண்டுவந்து - அதே உணர்ச்சி பாவங்களோடு, எட்டு வயதுச் சிறுவனிடம எதைச் சொல்லலாமோ, அதை மட்டும் சொல்லி முடிப்பாள். குறுக்கிட்டுக் கேள்வி ஒன்றும்



கேட்காமல், 'உம்' கொட்டி கதையில் லயித்துப் போயிருந்த சாயிராம் முடிவில் ஏதோ யோசித்து, தன் மனதைத் தாக்கின, அழுத்தமாய் பாதிப்பை ஏற்படுத்தின அந்தக் கேள்வியைச் சட்டென்று அவளிடம் கேட்டே விட்டான்:

''ஏம்மா...அந்த ஒத்தெல்லோ...அவ பேரு என்ன சொன்னே? அவன் ஒய்ஃப் பேரு...என்னவோ மோனான்னு சொன்னியேம்மா?''

''டெஸ்டிமோனா!''

''ம்...அவளைச் சந்தேகப்பட்ட மாதிரி அப்பா உன் மேலேயும் சந்தேகப்பட்டு, தலைகாணியால் மூஞ்சியை அழுத்திக் கொன்னுடுவாராம்மா?''

''சீ, சீ...பைத்தியம்!''–சரேலென்று அவனை இழுத்துத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு, நெஞ்சு பதறச் சொன்னாள் உமா:

''அப்பா ரொம்ப நல்லவர்டா...அந்தமாதிரி சந்தேகமெல்லாம் படமாட்டார்...''

அம்மாவின் அந்தக் குரல் காதருகில் ஒலிக்கிற உணர்வில் பயத்தையும் பொருட்படுத்தாமல் சரேலென்று எழுந்து உட்கார்ந்தான் சாயிராம்.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. அந்த இருட்டில் கரிக் கறுப்பில் கைகையாக நீண்டு முகத்தை நெருங்க–

''ஐயோ அம்மா...'' என்ற அலறலில் தன் கைகளால் முகத்தை மூடிக் கொண்டபோது–

'பயப்படாதே சாயிராம்!' என்ற குரல் சமையற்கட்டிலிருந்து வரவில்லை...

லாந்தர் வெளிச்சம் அசைந்து அசைந்து அருகில் நெருங்கவில்லை...

அவனை இழுத்து அணைத்து ஆறுதல் சொல்லவில்லை...

சொல்ல அந்த அம்மா இப்போது இல்லை.

## 2

சாயிராமின் கத்தலைக் கேட்டு பக்கத்து அறையில் படுத்துக் கொண்டிருந்த ரமணன் எழுந்து ஓடி வந்தான். இருட்டில் ஒன்றும் புரியாததால், தடவிக் கொண்டே போய் தன் கட்டிலின் தலையணை அடியிலிருந்து டார்ச் விளக்கை எடுத்து வந்து அறை வாசலில் நின்றபடி கேட்டான்:

''சாயிராம், எங்கே இருக்கே நீ?''

''இதோ இங்கே இருக்கேனப்பா...கட்டில்ல உட்கார்ந்துட்டிருக்கேன்...''

டார்ச் வெளிச்சம் வட்டமாய்-கொள்ளிக் கண்ணாய் நெருங்கி வர, சாயிராம் அசைந்து அசைந்து அருகில் வரும் லாந்தர் வெளிச்சத்தை நினைத்துக் கொண்டான். அந்த மென்மைக்கும் இதந்திற்கும் ஏங்கின மனதை சிரமப்பட்டுக் கட்டுப்படுத்த முயன்றான். அதைச் சொன்னால் அப்பாவிற்குப் பிடிக்காது. அவரை அது கோபப்படுத்தும். அனாவஸ்யமாய் இரைந்து கத்த வைக்கும். அல்லது கை நீட்டி அடிக்க வைக்கும். இவை அத்தனையையும் தவிர்க்க வேண்டுமானால் மனத்தில் ஏற்படும் ஆதங்கத்தையும், ஏக்கத்தையும் அடக்கிக் கொள்வதுதான் நல்லது. ஆசையை விவேகம் வெல்ல-அவன் அமைதியாக உட்கார்ந்திருக்க, டார்ச் வெளிச்சம் அவனை நெருங்கிற்று. அருகில் வந்த ரமணன் வெளிச்சத்தை அவனது முகத்திற்கு உயர்த்தின போது கண்கள் கூசினதில் சாயிராம் லேசாய் முகத்தைப் பக்கவாட்டில் திருப்பி, வலது கையை உயர்த்தித் தடுத்துக் கொள்ள முயன்றபோது, ரமணன் கேட்டான் :

''எதுக்கு அப்படிக் கத்தினே?''

''லைட் போயிடுத்து...''

''லைட் போனால் என்ன?''



''ஒரே இருட்டாயிருந்ததப்பா... இருட்டுன்னால் எனக்குப் பயம்!''

''இருட்டுக்கு என்ன பயம்? அது உன்னைக் கடிச்சா முழுங்கிவிடும்...வயசு ஒன்பது முடியப் போறது. இன்னும் பயம்னா வெட்கமாக இல்லை?''

சாயிராம் உமிழ்நீரை விழுங்கி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மெதுவாகச் சொன்னான் :

''அதில்லேப்பா... எப்பவுமே எனக்கு இருட்டுன்னால் பயம் தாம்—ன-ப்பா... லைட் போயிடுத்துன்னால், அம்மா உடனே...'' —சட்டென்று கீழ் உதட்டைக் கடித்து அதோடு நிறுத்திக் கொண்டு, ரமணனைப் பார்க்கப் பயந்து தலைகுனிந்திருந்தான்.

ஆனால், அந்தச் சின்ன தூண்டுகோலே ரமணனுக்குப் போதுமானதாக இருந்தது. உடம்பின் ரத்தம் முழுவதும் தலைக்கு ஏறின உணர்வு ஏற்பட்டது. கன்னச் சதைகள் இறுக்கம் கண்டு உதடுகள் துடித்தன அடிக்குரலில்,

''என்னடா சொன்னே...?'' என்று ஓர் அதட்டல் போட்டதில், சாயிராம் உடம்பாலும் — மனதாலும் ஒடுங்கிப் போனான்.

''இல்லேப்பா... தப்புப்பா...தவறிப் போய் வாயில் வந்துடுத்துப்பா...இனிமேல சொல்ல மாட்டேம்பா!''

''தினமும் சொல்லிட்டு சொல்லிட்டு இப்படித்தான் மன்னிப்பு கேட்டுக்கறே? அதுல என்ன அர்த்தம் இருக்கு?''

இந்த முறை ரமணனின் குரலில் கோபத்தைவிட வருத்தமே அதிகம் எட்டிப் பார்த்தது. கழிவிரக்கம் வெளிப்பட்டது. இம்மாதிரி பாவனையில் அவன் பேசத் தொடங்கினால் சட்டென்று சாயிராம் இறங்கிப் போய் விடுவான். அந்த சமயத்தில் அவரைப் பார்க்கிறபோது பரிதாப உணர்ச்சிதான் மேலிடும். அத்தனை நாள் கோபமும் அடங்கி, 'ஒருவேளை அப்பா சொன்னதில் நிஜ

மிருக்குமோ?" என்றுகூட நினைக்க ஆரம்பித்து விடுவான். இந்த ஒரு வருடமாக— அதுவும் கடந்துபோன மூன்று மாதங்களாக எது உண்மை, எது பொய் என்பது புரியாமல், யார் பக்கம் நியாயம் இருக்கிறது என்று தெரியாமல் தவியாய் தவித்திருக்கிறான். தன் வயதில் மற்ற சிறுவர்கள் எல்லோரும் சந்தோஷமாய் இருக்கிறபோது, தனக்கு மட்டும் ஏன் இத்தனை மனக் கஷ்டமும், சங்கடங்களும் என்று கேட்டு பதில் தெரியாத காரணத்தினால் அழுகிருக்கிறான். அப்பா வீட்டில் இல்லை என்றால் சமையல் கட்டில் போய் அம்மா வழக்கமாய் நின்று சமைக்கிற இடத்தைப் பார்ப்பான். வெள்ளை வெளேரென்று நந்தமாய் நீளும் கைகளும், எப்போதும் புன்னகைக்கும் முகமும் அப்போதும் புன்னகைக்கிற மாதிரி தெரியும்.

'என்ன ராம், பசிக்கிறதா? சாப்பிட வரியா?' என்று கேட்கும் கண்கள் வாஞ்சையாகப் பார்க்கும்.

'ஏன் குழந்தை...ஸ்கூலுக்கு நேரமாகலே?'

'எண்ணெய் தேய்ச்சுண்டு எத்தனை நாளாகிறது. வா... வந்து உட்கார். ஒரு கை வைத்து சூடு பறக்கத் தேய்த்து விடறேன்...'

'என்ன ராம் என்னவோ மாதிரி இருக்கே? உடம்பு சரியில்லையா?'

நெற்றியைத் தொட்டுப் பார்த்த, சட்டையின் முதல் பொத்தானைக் கழற்றி, மார்பில் கைவைத்து, 'லேசாய் சுடற மாதிரிதான் இருக்கு. கிளம்பு, டாக்டர் வீட்டுக்குப் போகலாம்...'

டாக்டர்...

அந்த டாக்டரால் வந்ததுதான் அத்தனையும்! இல்லாவிட்டால் அம்மா இருந்திருப்பாள்...அவனோடு அதே வீட்டில்—அதே பிரியமான அம்மாவாக—

அம்மா...அம்மா...ஐ மிஸ் யூ...நீ இல்லாமல் வீடு வீடு மாதிரி இல்லேம்மா...தினமும் காலையில் ரொட்டியில்



வெண்ணெய் தடவி சாப்பிட்டு போரடிக்கிறதும்மா... அதிலேயே இரண்டு துண்டங்களை டிபன் டப்பாவில் போட்டுக் கொண்டு, நானே குளித்து, நானே தலைவாரிக் கொண்டு, நானே ஷூ போட்டுக் கொண்டு, அப்பா போனதும் வீட்டைப் பூட்டிக் கொண்டு தோளில் பையை மாட்டிக் கொண்டு ஓடினால், சாயந்திரம் நானே வந்து நானே கதவைத் திறக்க வேண்டும்...பக்கத்து வீட்டிலிருந்து பால் கவரை வாங்கி வந்து ஜாக்கிரதையாக கியாஸ் அடுப்பைப் பற்ற வைத்துக் காய்ச்சி ஒரு தம்ளர் எடுத்து சர்க்கரை போட்டுக் குடித்து விட்டு ஜன்னலடியில் உட்கார்ந்தால், அப்பா வருகிறவரை காத்திருக்க வேண்டும். அப்பா நிதானம் தவறாமல் வந்தால், ராத்திரி சாப்பாட்டிற்கு ஏதாவது வரும். இல்லையென்றால்?

'டேய்... கதவைத் திறடா...'

திறந்து, அவர் அறைக்குப் போய் கட்டிலில் தடாலென்று விழுவதைப் பார்த்துவிட்டு, மீண்டும் கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு, பசிக்கு இதமாகத் தண்ணீர் குடித்து விட்டுப் படுத்து...

அம்மா... அம்மா... வேணாம்மா! இப்படி வாழறது எனக்கு பிடிக்கலே. உன்னைப் பார்க்கணும்போல இருக்கு. உன் கையால் சாப்பிடணும். எண்ணெய் தேய்ச்சுக்கணும். மடியில் படுத்துக் கொண்டே கதை கேட்கணும்... ஒத்தொல்லோ கதை...?

அந்தக் கதையே வேணாம்... அந்தக் கதையாலும், டாக்டராலும் வந்தது தான் எல்லாம்...

கதை என்ன செய்யும்...?

டாக்டர்தான் என்ன செய்வார்?

'அதெல்லாம் போகட்டும்...அம்மா மீண்டும் வருவாளா?'

—அந்தக் கேள்வியின் முட்டாள் தனத்தையும், குழந்தைத் தனத்தையும் உணர்ந்து ஓர் ஆழமான

பெருமூச்சுடன் தலை நிமிர்ந்தபோது, எதிரில் இன்னமும், அப்பா நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தான். தடைப்பட்ட மின்சாரத் தொடர்பு வந்து விளக்கு எரிந்தது. மின் விசிறி சுழலத் தொடங்கியிருந்தது.

"எப்போ லைட் வந்தது?"

அந்தக் கேள்விக்குப் பதில் மாதிரி ரமணன் ஆரம்பித்தான்.

"ஏண்டா, லைட் வந்ததுகூடத் தெரியாமல் அப்படி என்ன யோசனை? நான் கேட்டது காதுல விழலை...?"

மின்சாரத் தொடர்பு மாதிரி சட்டென்று அவருடன் பேசின கடைசிப் பேச்சும, கேள்வியும் ஞாபகத்திறகு வர—

"விழுந்ததுப்பா..." என்றான்.

"பதில் என்ன?"

'ஸாரிப்பா! இனிமேல நிஜமாகவே செய்யமாட்டேன்."

"நம்பறேன்; போ. விளக்கு வந்துடுக்தே...இனிமேல பயமில்லையே? தூங்கறியா?"

"சரி."

"நான் போகட்டுமா?"

"ம்..."

அப்பாவிடம் சொன்னதற்கு மாறான செய்கை ஒன்றைச் செய்யவேண்டுமென்ற தீர்மான முடிவுடன் படுத்துப் போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டான்.

மூடிய விழிகளின் இருட்டிற்கு நடுவே லாந்தர் விளக்கின் மென்மையான வெளிச்சம் தெரிந்து—அவனது முடிவை இன்னமும் திடப்படுத்தியது...



# 3

அம்மா இருக்கிற இடம் தனக்குத் தெரியும் என்று கிருஷ்ணசாமி மாமா சொல்லியிருந்தார்.

"தனியா, சின்னதா ரெண்டு ரூம் வீடு ஒண்ணு எடுத்துண்டு தங்கிண்டிருக்காடா சாயி உங்கம்மா... வேணாம்னால் அழைச்சுண்டு போறேன்..."

அதைக் கேட்டதும் சாயிராம் உள்ளுக்குள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தான். 'அம்மா இருக்கிற இடம் தெரியுமா... நிஜமாகவா... ஓ... எத்தனை நாளாயிற்று அம்மாவைப் பார்த்து? கடைசியாய் கோர்ட் வாசல் வரை ஓடி வந்தாளே...ஒரு முத்தத்திற்குக் கெஞ்சினாளே... அப்பாதானே தரதரவென்று பிடித்து இழுத்துக் கொண்டு போய் விட்டார்...

இவனுக்குக் கண்கள் கலங்கி கன்னங்களில் கோடு கோடாக வழிய...

"பாவம்ப்பா அம்மா..."

சடாரென்று வண்டியைக் கிளப்புவதை நிறுத்திவிட்டு அவர் திரும்பின திரும்பல், அந்தப் பார்வையின் ஜ்வலிப்பு. அழுத்தமாய் வெளிப்பட்ட வார்த்தைகளின் காந்தல்...

"பாவம்...அவளுக்கா பாவம் பார்க்கறே? பாவம்கிறதுக்குப் பதிலாகப் பாவின்னு சொல்லு—ஒத்துக்கறேன். இனி இன்னொருதரம் நீ அவளுடை பேச்சை எடுத்தே, அப்படியே கழுத்தை முறிச்சுப் போட்டுடுவேன். ஜாக்கிரதை இன்னியோட அவளுக்கும் நமக்கும இருந்த அத்தனை பந்தமும் விட்டுப்போயாச்சு...கடைசியாக ஒட்டிண்டு இருந்த கொஞ்சநஞ்ச பந்தத்தையும் இன்னிக்கு நம்ப லாயர் ரொம்ப சாமார்த்தியமா அறுத்து எறிஞ்சுட்டார். பணத்தை விசிறி எறியச் சொல்லி தீர்மானமாக முடிச்சுட்டார். வீட்டுக்குப் போய் தலைமுழு

கிட்டா எல்லாம் சரியாகப் போய்விடும். என்ன புரிகிறதா...? இனி அம்மான்ற பேச்சோ, வார்த்தையோ என் காதுல விழக்கூடாது! அவளைப்பற்றி எந்த நினைப்பும் இருக்கக் கூடாது. அவளோட ஒரு தொடர்பும் வச்சிக்கக் கூடாது. சரியா சாயி?''

''சரிப்...பா!''

ஞாபகம் வந்ததும் சட்டென்று உள்ளுக்குள் படபடத்து விரிந்த சிறகுகள் முறிந்தன. பயம் நெஞ்சை அழுத்தியது. தயக்கம் தலைதூக்க லேசாய் தலையை ஆட்டினான்.

''வேணாம் மாமா...அப்பாவுக்குத் தெரிஞ்சால் திட்டுவார். வெறும் திட்டு மட்டுமில்லே...அடிச்சுக் கொன்னுடுவார்!''

''உங்கப்பாவுக்குத் தெரியணுமா என்ன? தெரியாமல், போயிட்டு வர்றது...''

''தெரியாமலா...ஐய்யோ...அது தப்பு இல்லியா மாமா?''

''இந்த உலகத்துல எது தப்பு, எது சரி...? ஏண்டா டேய்—இத்தனை நியாயம் சொல்றியே, உங்கப்பன் செய்தது மட்டும் சரியாடா? உங்கம்மாவை வீட்டை விட்டு அனுப்பினது அவள் நடத்தை சரியில்லைன்னு கோர்ட்டில் பொய்யாய் நிரூபிச்சது—உங்கம்மா உன்னை தனக்கு வேணும்னு கேட்டபோது—அவள் நடத்தை சரியில்லை; அதனால் பையன் அவளிடம் வளரக்கூடாதுன்னு சொல்லி, அவள் கதறக் கதற உன்னைப் பிரிச்சுண்டு வந்தது இதெல்லாம் மட்டும் நியாயமாடா?''

''அப்படின்னா அப்பா பண்ணினது தப்பா மாமா?''

''ஆமாண்டா...''

''அம்மா மேல ஒரு தப்புமே இல்லையா?''

''இல்லைடா கொழந்தே...உங்கம்மாவைப் பார்த்தால் தப்பு பண்றவ மாதிரியா இருக்கு?''



''பின்னே அப்பா ஏன் அம்மாவோட தினம் தினம் சண்டை போட்டார்? அம்மாவை அடிச்சார்?''

''அதுக்கெல்லாம் காரணம், பொறாமை—தாழ்வு மனப்பான்மை...தான் அவளுக்குப் பொருத்தமில்லே. கறுப்பா இருக்கோம் என்கிற உறுத்தல்...''

''அதனாலயா அப்பா அவ்வளவும் செய்தார்?''

''ஆமாண்டா கண்ணா...''

''ஏன் மாமா திடீர்னு அப்பாவுக்கு அப்படியெல்லாம் தோணணும்...அம்மா கிட்டே பிரியமா—சந்தோஷமாத் தானே இருந்தார்?''

''இருந்தார்ன்னு நீயே சொல்றே பாரு...இந்த சந்தேகப் பிசாசு இருக்கே...அது எந்த சமயத்தில் எப்போ எப்படி உள்ளே நுழையறதுன்னு நமக்கே தெரியாது. நுழைஞ்சப்புறம் பாட்டான் டாங் வச்சு பிளந்த மாதிரி குடும்பத்தைப் பிளந்துடும்...உங்க குடும்பத்துக்குள் அது டாக்டர் லஷ்மி நாராயணன் ரூபத்துல உங்கப்பா மனசுக்குள்ள நுழைஞ்சுடுத்து...அந்த ஆள் பார்க்க வெள்ளை வெளேர்னு கம்பீரமா எடுப்பா இருப்பானா...கேட்கவே வேண்டாம்! சாதாரணமா உங்கம்மா அவனோடு பேசினது, இயல்பா சிரிச்சது, வீட்டுக்கு சாப்பிட கூப்பிட்டது எல்லாம் சேர்ந்து உங்கப்பா மனசை மாற்றிடுத்து...கண்ணுல கருப்புக் கண்ணாடி போட்டுண்டு அவர் பார்க்க ஆரம்பிச்சது புரியாமல், உங்கம்மா எப்போதும்போல வெகுளியாய் பழகியிருக்காள்...ஒரு நாள் காலைல உங்கப்பா ஆபிசுக்குப் போனதும்—நீ ஸ்கூலுக்குப் போனப்புறம் அந்த டாக்டர் வீட்டுக்கு வந்திருக்கான். 'பக்கத்துத் தெருவில் ஒரு பேஷண்ட் விஸிட்டிங்கிற்கு வந்தேன். அப்படியே உங்களையும் பார்த்துட்டுப் போகலாம்னு வந்திருக்கேன்...' என்று சொல்லியிருக்கான்.

''உங்கம்மா உட்கார்த்தி வச்சு, காப்பி கலந்துண்டு வந்தப்போ, உங்கப்பா அவளை வேவு பார்க்கிற நோக்கத

துல வீட்டுக்கு வந்திருக்கிறான்...அவ்வளவுதான்! அதுக்கு மேல நான் சொல்லணுமா? உனக்கேதான் எல்லாம் தெரியுமே...கோர்ட்டு, கேஸுன்னு அலைஞ்சு டைவர்ஸ் வாங்கினது வரை தெரியுமே..."

"தெரியும் மாமா..." என்று இழுத்த சாயிராம் அவரிடம் கேட்லாமோ கூடதோ என்று தயங்கி, அவர் முகத்தைப் பார்த்தான். அவர் அவனது தயக்கத்தைப் புரிந்து கொண்டு மென்மையாய் கேட்டார்.

"என்ன சாயிராம்?"

"எங்கப்பா, அம்மா கெட்டவ, அவ கிட்ட பேசக் கூடாது. அவளைப் பார்க்கக்கூடாது. அவள் பேச்சைக் கூட வீட்டுல எடுக்கக்கூடாதுன்னு சொல்லியிருக்காரே மாமா...அம்மா கெட்டவளா?"

அவன் கேட்ட பாவமும் கண்களில் துளிர்த்த நீரும் அவர் மனதை இன்னமும் தளரவைத்தது. அவருடைய கண்களும் கலங்கிப் போயின.

"சீ...சீ...! இல்லேப்பா...பெற்ற அம்மாவைப் அப்படியெல்லாம் நினைக்கறதே பாவம்ப்பா...அதுவும் உங்கம்மாவைப் பற்றி நினைக்கிறது மகாபாவம்!"

"அப்படின்னா, எங்கம்மா நல்லவதானே?"

"ரொம்ப நல்லவ...வரியா அவளைப் போய்ப் பார்த்துட்டு வரலாம்..."

மீண்டும் ஆர்வம் அஸ்திவாரமிட, மறுநிமிடமே அப்பா பயம் ஏற்பட்டு கட்டடம் கட்ட விடாமல் தடுக்க, அப்போது அவன் மறுத்து விட்டான்.

"வேணாம் மாமா...எப்படியும் அப்பா கண்டு பிடிச்சுடுவார், கடைசியில் நான்தான் மாட்டிண்டு முழிப்பேன். இன்னொரு நாள் பார்த்துக்கலாம்..."

அந்த இன்னொருநாள்மறுநாள் காலையில் வந்து விட்ட தீர்மானத்தில் சற்றே அப்பா பயத்தைத் தள்ளி நிறுத்தி, முன்பு அடிமனத்தில் போட்டு வைத்த அஸ்தி



வாரத்தில் கட்டடம் எழுப்புகிற எண்ணத்தில், அப்பா ஆபீசுக்குப் புறப்பட்டுப் போனதும் கிருஷ்ணசாமி மாமாவைத் தேடிக்கொண்டு ஓடினான் சாயிராம்.

## 4

"மாமா..."

வீடு திறந்திருக்க, உள்ளே நுழைந்த சாயிராம் சாப்பாட்டு அறையின் கதவோரத்தில் தயங்கி நின்று கூப்பிட்டான். சாப்பாட்டு அறையின் ஓரத்தில் இருந்த அலமாரியைப் பூஜை இடமாக்கி, எதிரில் நின்று மனசுக்குள் லலிதா சஹஸ்ரநாமம் சொல்லிக் கொண்டிருந்த கிருஷ்ணசாமி கண்களைத் திறந்து திரும்பிப் பார்த்தார். சாயிராமிடம், கொஞ்சம் இரு 'இதோ வருகிறேன்' என்று சைகை காட்டி, மீதி சஹஸ்ர நாமத்தையும் சொல்லி முடித்து, தீபாராதனை காட்டி, அவனையும் கற்பூர ஆரத்தியைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொள்ளச் செய்த பின்னர் அலமாரிக் கதவுகளை மூடிவிட்டு, நிதானமாக அவனைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

"வா, சாயி, காப்பி சாப்பிடறியா?"

காப்பியா:..." என்று ஆர்வமாகத் தலையாட்டினான். அம்மா இருந்தவரை அவனுக்குக் காப்பி கிடைத்தது. அம்மா வீட்டை விட்டுப் போனபின் காப்பி போட சோம்பேறித்தனப் பட்டுக்கொண்டு, அப்பா வெறும் பாலைக் காய்ச்சிக் கொடுப்பார். கேட்டால், 'காப்பி உடம்புக்கு கெட்டது. அதனால் இனிமேல் நீ பால்தான் குடிக்கணும்' என்பார். அவர் மட்டும் ஆபீசுக்குப் போய் காப்பி வரவழைத்துக் குடிப்பது இவனுக்குத் தெரியும். வீட்டிற்கு வருவதற்கு முன்பும் ஒரு கப் காப்பி குடித்த பின்னரே ஆபிஸை விட்டுக் கிளம்புவார்...காப்பி ருசியே அநேகமாக மறந்து போய் விட்ட இந்த நேரத்தில் கிருஷ்ணசாமி காப்பி குடிக்கிறாயா?' என்று கேட்டதும், சட்டென்று தலையாட்டத் தோன்றியது. உடனே தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு விட்டான்.

"வேண்டாம் மாமா..." என்று மறுத்தான்.

"ஏண்டா வேணாங்கறே? காப்பி சாப்பிடற பழக்கம் இல்லையா?"

"இருந்தது மாமா..."

"இருந்ததுன்னால்... இப்போ இல்லையா?"

"ம்ஹூம்..."

"ஏண்டா?"

"அம்மா போனப்புறம் காப்பி போட ஆளில்லை. அதனால் அந்தப் பழக்கம் நின்னு போச்சு!"

"அவ்வளவுதானே... சாப்பிடக் கூடாது என்கிற விரதம் எதுவுமில்லையே?"

"அதெல்லாம் எதுவுமில்லை மாமா!"

"அப்போ ஏன் வேணாங்கறே? சாப்பிடேன்..."

"இல்லை மாமா... மறுபடியும் காப்பி ருசி கண்டுட்டால் தினமும் வேணும்னு தோணும் மாமா!"

—அந்தப் பதிலில் நெகிழ்ந்து போனார் கிருஷ்ணசாமி. வாஞ்சையாக சிறிது நேரம் அவனையே பார்த்தார். எப்படிப்பட்ட பிள்ளை! எவ்வளவு புத்திசாலித்தனம்! இந்த பாதிரி குழந்தைக்கு ஏன் இதுபோன்ற கஷ்டமெல்லாம் வரவேண்டும்? அன்பிற்கும் பாசத்திற்கும் ஏங்கித் தவிக்க வேண்டும்?

இதற்கு முன்பும் கிருஷ்ணசாமி அவனைப் பார்த்திருக்கிறார். உமா இருந்தபோது கவனித்திருக்கிறார். அந்த முகத்தின் மலர்ச்சியும், செழுமையும் நாற்று நட்டு வளர்நத கழனி மாதிரி பசேல் என்று கண்ணுக்கும், மனத்திற்கும் குளிர்ச்சியாகத் தென்பட்டிருக்கிறது. அதே முகம்தான் இப்போதும்...அதே கண்கள், அதே மூக்கு, அதே வாய்—அதே சாயிராம்தான். ஆனால் எத்தனை



வித்தியாசம்! அறுப்பு அறுத்த நிலம் மாதிரி அத்தனை பசுமையும் காணாமற்போய், குச்சு குச்சாய் வேர் வறண்ட வெளியில் தெரிகிற காய்ந்த நிலமாக...

இதையெல்லாம் விதி என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்ல முடியும்? போகப் போக இந்தப் பையன் எப்படியெல்லாம் பாதிக்கப்படுவான்... இப்போதே ரணப்பட்டுப் போயிருக்கும் இவனது உள்மனசு அப்போது என்னவாகும்? தங்களது மனவேற்றுமை காரணமாகப் பிரிகிற பெற்றோர்கள் ஏன் தங்களது குழந்தைகளை நினைத்துப் பார்க்க மாட்டேன் என்கிறார்கள்...? சுயநலமாகவே சிந்தித்து முடிவிற்கு வருகிறார்கள்?'

பதில் கிடைக்காத உள்மனக் கேள்விகளை உதறிவிட்டு ஓர் ஆழமான பெருமூச்சுடன் சாயிராமைப் பார்த்தார் கிருஷ்ணசாமி. மெலிசான புன்னகையுடன் இதமான குரலில் சொன்னார்.

"பரவாயில்லே... இன்னிக்கு ஒரு நாள் சாப்பிடு. தினமும் காப்பி வேணும்னு தோணினால் வீட்டுக்கு வா."

அதைக்கேட்டு சாயிராம் சிரித்தான்.

"என்ன சிரிக்கிறே?"

"இல்லை மாமா...இன்னிக்கு ஒருநாள் வர்றதால் காப்பி கிடைக்கிறது. தினமும் வர ஆரம்பித்தால் மாமி கிட்டேயிருந்து முணுமுணுப்புதான் கிடைக்கும்."

"அட போடா அரட்டை! முளைச்சு மூணு இலை விடலை... என்னவோ பெரிய மனுஷனாட்டம் பேசறான்..." என்று செல்லமாகக் கடிந்து கொண்டவர் சமையலறைப் பக்கம் திரும்பி,

"யார்றீ அங்கே...நம்ம சாயிராம் வந்திருக்கான், ஒரு தம்ளர் காப்பி கொண்டு வா!"

"சாயிராமா... எப்போ வந்தான்?" என்று கேட்டுக் கொண்டே அவரது மனைவி வெளியில் வந்தாள்.

அவனைப் பார்த்து முகம் மலர்ந்தவளாக, "எப்படிடா இருக்கே?" என்று விசாரித்தாள்.

"அதான் பார்க்கறேனே மாமி!" என்றான் அவன் மீண்டும் பெரியமனிதத் தோரணையில்.

"ஏண்டா இளைச்சுப் போயிருக்கே?" என்றவள், "அப்பா எப்படிடா இருக்கார்?" என்று கேட்டாள்.

"இருக்கார் மாமி..."

"அம்மாவைப் போய் பார்த்தியடா?"

"இல்லே மாமி... அதற்காகத்தான் இப்போ இங்கே வந்தேன். மாமா அழைச்சிண்டுப் போராறார்ன்னு கேட்கத்தான் வந்திருக்கேன்..."

"இப்போதான் போகப் போறியா? அப்படியானால், இதுவரை அவளைப் போய் பார்க்கவே இல்லையா?"

"இல்லை மாமி..."

"ஏண்டா?"

"அப்பா திட்டுவார் மாமி!"

"இப்போ மட்டும் திட்டமாட்டாரா?"

"தெரிஞ்சால் திட்டு மட்டுமா...? அடிகூட கிடைக்கும்!"

"அப்படின்னா, இப்போ தெரியாமல் போகப் போறியா?"

"ஆமாம் மாமி!"

"அந்தமாதிரி இத்தனைநாள் போறதுக்கென்ன...? பரசுராமர் கதை தெரியுமாடா உனக்கு? ஜமதக்னி முனிவர்—அவருடைய அப்பா சொன்னாரேன்னு அம்மாவுடைய தலையை வெட்டி விட்டு வந்துவிட்டார். அதற்காக ஜமதக்னி மகிழ்ந்து போய் பிள்ளையை உச்சிமுகர்ந்து, 'உனக்கு என்ன வேண்டுமோ கேள்!' என்றதும் பிள்ளை, 'திரும்ப எனக்கு அம்மா உயிரோட வேண்டும்'னு கேட்டான். அந்த மாதிரி இருக்கணும்டா நீயும்... பெற்ற



அம்மாவை மறந்துடக் கூடாது. அப்பா— அம்மா சண்டை அவர்களோடு போகட்டும். நீ போய் அம்மாவை அடிக்கடி பார்த்துண்டு வா..."

"சரி மாமி!"

"ஏண்டி... இப்போ அவனுக்குக் காப்பி கொடுக்கப் போறியா? இல்லை, உபதேசம் இன்னும் பாக்கி இருக்கா?" -கிருஷ்ணசாமி ஓர் அதட்டல் போட்டதும் அந்த அம்மாள் உள்ளே போக, அவர் சாயிராமைப் பார்த்து கேட்டார்:

"நிஜமாகவா உங்கம்மாவைப் பார்க்கணும்னு வந்திருக்கே?"

"ஆமாம் மாமா, நிஜமாகத்தான்!"

அவர் சந்தோஷத்துடன் சொன்னார்:

"அப்படியானால் காப்பி குடிச்சதும் கிளம்பு. உங்கம்மா ஆபீசுக்குப் போய் விடப் போறாள்..."

"அம்மா இப்போ ஆபீசுக்கு போறாளா மாமா...?"

"பின்னே... உங்கப்பா தர்ற பணம் அவள் ஒருத்தியானாலும் எப்படிப் போறும்? அதுவுமில்லாமல் அவளுக்குப் பொழுது போக வேண்டாமாப்பா?"

சாயிராம் பதில் ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாகக் காப்பி குடித்து விட்டுக் கிளம்பினான். இரண்டு பேரும் படியிறங்கி தெருக்கோடியை அடைவதற்குள், ஸ்கூட்டர் சத்தம் மிக அருகில் மேலே இடிக்கிற மாதிரி கேட்கவே திரும்பிப் பார்த்தான்.

அப்பா...?

## 5

"எங்கேடா போறே...?" என்ற அதட்டல் வெளிப்பட்டது ரயனணிடமிருந்து. சட்டென்று பொய் சொல்ல

வராததால் சாயிராம் நடுங்கிப்போய் நிற்க, கிருஷ்ணசாமி நிலைமையைச் சமாளித்தார்.

"நான் தான் அழைச்சிண்டுப் போறேன். மார்க்கெட்டிற்குக் கிளம்பிலேன். குழந்தை எதிர்பட்டான். நிறைய சாமான்கள் வாங்கணும். கூட வரியான்னு கேட்டேன். வந்தான்..."

ரமணன் அவரை ஏறிட்டுப் பார்க்கவில்லை. சொன்னதைக் காதில் வாங்கிக் கொண்டதாகவும் தெரியவில்லை. 'நான் அவனைத்தான் கேட்டேன். உன்னையல்ல' என்கிற மாதிரி நின்றிருந்தான். இந்த கிருஷ்ணசாமி உமாவின் கட்சி என்பது அவனது அபிப்பிராயம். அதனாலேயே அவனுக்கு அவரைப் பிடிக்காமல் போயிருந்தது உமாவிற்காக யார் பரிந்து பேசினாலும் அவர்களை அவன் எதிரியாகக் கருத ஆரம்பித்து வெகுநாட்களாயின... இப்போதெல்லாம் உமா என்கிற பெயரை உச்சரித்தால் கூட அவர்கள் விரோதிகளாயினர்.

அப்படியிருக்க, கிருஷ்ணசாமி அவனுக்காக நிறையவே அவனிடம் வாதாடி இருக்கிறார். அனாவஸ்யமாய் ஒரு நல்ல குடும்பம் கலைந்து போகக்கூடாது என்கிற நல்லெண்ணத்தில் பேசியிருக்கிறார். குருவிக் கூட்டைக் கலைக்கிற மாதிரி ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கலைக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார். அவன் கோர்ட் வரை போகக் கூடாது என்று தடுத்து நிறுத்தப் பாடு பட்டிருக்கிறார்...

'நீ அனாவஸ்யமாய் சந்தேகப்பட்டு, அவள் வாழ்க்கையோடு உன்னுடையதையும் பாழாக்கிக் கொள்கிறாய் ரமணன்...சாதராணமாகப் பேசிக் கொண்டிருந்ததற்கு வேண்டாத வியாக்கியானமெல்லாம் சொல்லி தப்புக் கண்டு பிடிக்கிறாய்! டாக்டரிடம் அவள் நீ நினைக்கிற மாதிரிப் பழகவில்லை ரமணா..."



"அது சரி. வேலிக்கு ஓணான்தான் சாட்சியாக முடியும்! ஆமாம்...நீங்க எப்போது உங்கள் வேலையை ராஜினாமா செய்தீர்கள்?"

"வேலையை ராஜினாமா செய்தேனோ? என்ன சொல்றே நீ?",

"இல்லே...புதுசா இந்த 'மாமா' வேலையை ஆரம்பித்திருக்கிறீர்களே என்றுதான் கேட்டேன்!"

"சிவ...சிவா!" என்று முகத்தைச் சிணுக்கி காதில் கைவைத்தபடி சொன்னார்.

"எப்படி இந்தமாதிரி நாக்கில் நரம்பில்லால் பேசறே ரமணன்?"

"பின்னே...நான் கண்ணால் பார்த்திருக்கேன்... டாக்டருக்கும்; அவளுக்கு மிடையில் சாதாரணப் பழக்கம் தான்னு சொன்னால்?"

"இப்பவும் சொல்றேன் — அவர்களுக்கிடையில் சாதாரணப் பழக்கம்தான்."

"அப்படின்னால் நானும் சொல்றேன்...இத்தனை நாள் நீங்க செஞ்சது மாமா வேலைதான்! ஆமாம்; அவங்களுக்கு மட்டும்தான் செய்தீங்க; இல்லே, நிறையப் பேருக்கு செய்யறீங்களா?"

சாக்கடையில் கல் எறிந்த கதை தான் என்பதால், அதற்கு மேலும் முகத்தில் தெரிக்காமல் இருக்க வாயை மூடிக் கொண்டு விட்டார் கிருஷ்ணசாமி. அதற்குப்பின் மீண்டும் இன்றுதான் அவனை நேருக்கு நேர் சந்தித்துப் பேசுகிறார்—அதுவும் சாயிராமிற்காக

ரமணன்தன் முகத்தில் சிடுசிடுப்பு மாறாமலே சொன்னான்

"போடா...போய்ப் படிக்கிற வழியைப் பாருடா... தினமும் நான் கிளம்பினதும் இப்படித்தான் வீட்டைப் பூட்டிண்டு ஓடி வந்துடறியே...யார் கூப்பிடுவாங்க, சாமான் தூக்கலாம்னு அலையறியா?"

''இல்லைப்பா...வந்து...''

''என்னடா இல்லைப்பா? ம்... அவங்கவங்க சாமான் வாங்கணும்னால் தங்க வீட்டுப் பிள்ளையைக் கூட்டிண்டு போகணும்...எந்தப் பையன் ஏமாறுவான்னு காத்துண்டிருந்து எடுபிடி வேலை செய்யச் சொல்லக் கூடாது!''

இதற்குமேல் தாங்க இயலாதவராக கிருஷ்ணசாமி அவனை ஏறிட்டார்.

''இதோ பாரு ரமணன்...இப்படி யெல்லாம் பேசி குழந்தை மனசை சங்கடப்படுத்தாதே...நம்ம பையன்ற உரிமையோடத்தான் நான் கூப்பிட்டேன்.''

''அது என்ன 'நம்ம' பையன்?' உங்களுக்கும், சொந்தமிருக்கோ?''

'பாவி!' என்று உள்ளுக்குள் குமுறினார். 'நாக்கா இது...இல்லே, கசாப்புக் கடைக்காரன் கத்தியா?

''சரிப்பா சாயிராம்...நீ வீட்டுக்குப் போ. நானே கடைக்குப் போயிட்டு வரேன்...''

அவர் ரமணனுக்குத் தெரியாமல் கண்ணடித்து சைகை காட்ட, சாயிராம் புரிந்து கொண்டான்.

''சரி மாமா...நான் வீட்டுக்குப் போய் படிக்கிறேன்.''

''இந்த புத்தி முதலிலேயே இருக்கிறதுக்கென்ன...? ஏறுடா ஸ்கூட்டர்ல. வீட்டுவாசல்ல இறக்கிட்டுப் போறேன்.''

ரமணன் ஸ்கூட்டரை உதைத்துக் கிளப்ப, சாயிராம் கிருஷ்ணசாமியைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டே பின்ஸீட்டில் ஏறி உட்கார, 'நீ போ நான் பின்னாலேயே வருகிறேன்...' என்று கையால் விளக்கினார் கிருஷ்ணசாமி.

வீட்டிற்கு வந்து அப்பா மீண்டும் கிளம்பிப் போகிற வரை புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தான் சாயிராம். மனது பாடத்தில் லயிக்கவில்லை. வரி வரியாக ஓடின எழுத்துக்களுக்கிடையில் அம்மாவின்



வெள்ளை வெளேர் என்ற முகம் தெரிந்தது, கண்களில் சோகப்பூ பூத்திருக்க அம்மா அவனை அன்பாய் பார்த்தாள்...பாசமாகப் பார்த்தாள்...ஆசையாகப் பார்த்தாள்... 'இத்தனை நாள் என்னை மறந்துட்டே இல்லே...?' என்று கண்ணீர் உகுத்தாள்.

அந்தக் கேள்வியில் இவனது அடி வயிறு புரண்டது. 'நாம் ஏன் பரசுராமர் மாதிரி இல்லே?' என்று நினைத்துக் கொண்டான். ஆனால், ஜமதக்னி முனிவரைப்போல் அப்பா, 'உனக்கு என்ன வேணும் கேள்' என்று கேட்கலையே, அப்படியெல்லாம் கேட்கக் கூடியவர் இல்லையே... இது அம்மாவிற்கே தெரியுமே அப்படியிருக்கிறபோது, அவளே வந்து தன்னைப் பார்த்திருக்கலாமே... வீட்டிற்கு வராது போனாலும், வர பயந்திருந்தாலும் ஸ்கூலுக்காவது வந்திருக்கலாமே... 'எப்படி இருக்கே சாயிராம்'னு தன்னோடு சேர்த்து அணைத்துத் தலையை வருடி, முதுகைத் தடவிக் கொடுத்து...

இதையெல்லாம் அம்மா ஏன் செய்யவில்லை? தனக்காவது அப்பா தடுத்தார். அம்மாவைத் தடுக்க யார் இருக்கிறார்கள்? அவள் வந்து தன்னைப் பார்த்திருக்கலாம்; ஏன் பார்க்கவில்லை? ஒருவேளை, தன்னைப் பார்க்கப் பிடிக்கவில்லையோ? தன் மீதும் கோபமோ? கோபப்பட நான் ஒன்றும் செய்யவில்லையே...? திட்டி அடித்ததெல்லாம் அப்பாதானே? வீட்டை விட்டுப் போகச் சொன்னதும் அவர்தானே...? தன்னைத் தடுத்ததும் அவர்தானே? இது புரியாமலா அம்மா தன்மீது கோபப்படுகிறாள்...'

சட்டென்று அத்தனை ஆர்வமும் ஒடுங்கிப் போயிற்று சாயிராமிற்கு. 'அம்மா ஏன் வரவில்லை...?' என்ற கேள்வி திரும்பத் திரும்ப நெருடிற்று. எது எதையோ கற்பனை பண்ணி சங்கடப்பட்டுக் கொண்டிருந்தபோது,

''வாசல் கதவைப் போட்டுக் கோடா...'' என்று கிளம்பிப் போனான் ரமணன். போகுமுன் நின்று கண்டிக்கிற குரலில் சொன்னான்:

''என் தலை மறைஞ்சதும் எங்கேயாவது போனேன்னு தெரிஞ்சது-கொன்னுப் போட்டுடுவேன். ஜாக்கிரதை!''

அவனது ஸ்கூட்டர் சத்தம் அடங்கின ஐந்து நிமிடத்திற்கெல்லாம் கிருஷ்ணசாமி வந்து எலியின் பிறாண்டலாகக் கதவைத் தட்டினார்.

''நேரமாயிடுத்துன்னு ஆட்டோ கூட்டிண்டு வந்திருக்கேன். சீக்கிரமா புத்தகப் பையையும் எடுத்துண்டு புறப்படு. அப்படியே ஸ்கூல்ல கொண்டுபோய் விட்டுடறேன்...''

முன்பிருந்த வேகம், ஆர்வம் எதுவுமின்றி-அவரிடம் மறுத்துச் சொல்கிற தைரியமற்று, தனக்காக அத்தனை வேலைகளையும் விட்டுவிட்டு ஓடி வந்திருக்கிற அவரது உணர்வுகளை மதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் புத்தகப் பையையும், டிபன் டப்பாவையும் எடுத்துக் கொண்டு வீட்டைப் பூட்டி விட்டு, அவருடன் ஆட்டோ ரிக்ஷாவில் ஏறினான் சாயிராம்.

# 6

நீண்ட நேரமாக ஆட்டோ ஓடிக் கொண்டே இருப்பதாகத் தோன்றியது சாயிராமிற்கு எங்கோ தொலை தூரம் வந்துவிட்ட பிரமை ஏற்பட்டது. இவை அத்தனைக்கும் காரணம் பயம்-அப்பா எங்காவது தன்னைப் பார்த்து விடப் போகிறாரோ என்ற பயம். பார்த்து விட்டால் அவ்வளவுதான்...இடுப்பு பெல்ட்டைக் கழற்றி விளாசி விடுவார்! எத்தனை முறை அவரிடம் அவன் அந்தமாதிரி அடிப்பட்டிருக்கிறான்? எந்தக் காரணமும் இல்லாமல் அவரது கோபத்தின் வடிகாலாக உடம்பில் வரிவரியாக வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறான்...

'ஆறு மணிக்கு வந்து படிக்க உட்காருடா ராஸ்கல்னா ஆறு பத்துக்கா வந்து புஸ்தகத்தைத் தொடற...எத்தனை தைரியம்? இப்பவே அம்மா மாதிரி அலட்சியப்படுத்தறே?



பத்து நிமிட தாமதத்திற்கு-'ஏண்டா கேட்கக்கேட்க பதில் சொல்லாம நிக்கறே...அவ்வளவு அகம்பாவம், திமிரா? உங்க அம்மா சொல்லிக் கொடுத்தாளா பேசாமல் நிற்கச் சொல்லி?...'

பேசாத மௌனத்திற்கு — 'படவா ராஸ்கல்! என்னையா எதிர்த்துப் பேசற...? யார் கொடுத்த தைரியம்...அம்மா கொடுத்த தைரியமா...?'

மௌனத்தைக் கலைத்து பதில் சொன்னதற்கு—

நின்றதற்கு, நடந்ததற்கு, நடக்காமல் இருந்ததற்கு...

நினைக்க நினைக்க சாயிராமின் உதடுகள் துடித்து முகம் லேசாய் அசங்கிற்று. வெளியில் வேடிக்கை பார்க்கிற பாவனையில் புறங்கையால் கண்களை இறுகத் துடைத்துக் கொண்டான். மீண்டும் நிரம்பி, மீண்டும் துடைத்து, மறுபடியும் நிரம்ப—

அவன் அதற்குமேல் தாங்க முடியாதவனாக உள்ளே திரும்பி, ''மா...மா...''என்று கீழ்த்தாடை நடுங்க, பின்னப் பட்டுத் தெரிந்த கிருஷ்ணசாமியின் கையைப் பற்றிக்கொள்ள—

அவனது உணர்ச்சிகளின் உந்துதலைப் புரிந்துகொள்ள இயலாத அவர், மிகுந்த தோழமையுடன் தோளில் கை போட்டுத் தன்னோடு சேர்த்துக் கொண்டு மென்மையாகக் கேட்டார் :

''என்னப்பா...எதுக்கு இப்போ அழற...''

''இப்போ அடி வாங்கினால் ஓடி வந்து தடுக்க அம்மா இல்லை. அம்மா...அம்மா...''

இன்னமும் ஆழமான விசும்பலோடு அவன் வார்த்தைகளுக்குத் தடுமாறுவதை உணர்ந்த கிருஷ்ணசாமி, மெல்ல அவன் கண்களைத் துடைத்து தலையை வருடினார்.

''சீ...பைத்தியம்! எதுக்கு இப்படி அழற? இன்னும் ஒரே நிமிஷத்துல அம்மாவைத்தான் பார்க்கப்போறியே—

அவனது அழுகைக்குத் தானாக வேறு காரணம் கற்பித்துக் கொண்டார் அவர். இத்தனை நாட்களாக உள்ளுக்குள் அடக்கி வைத்திருந்த ஏக்கம் அழுகையாக வெளிப்படுவதாக நினைத்தார். அவரது நினைப்பை அப்படியே விட்டு விடுகிற சாமர்த்தியமற்றவனாக சாயிராம்—தன் மறுப்பை அவசரமாக வெளிப்படுத்தி குழந்தைத்தனத்தை நிரூபித்தான்.

''அதில்லே மாமா...இத்தனை நாளா அம்மா ஏன் என்னைப் பார்க்க வரலை?''

''அதுக்காகவா உனக்கு துக்கம் இப்படிப் பீறிட்டுண்டு வர்றது...?ம்...? அம்மா அப்பாகிட்டே பயந்துண்டு வராமல் இருந்திருப்பாள்...''

அதற்குள் தன்னை சமாளித்துக்கொண்டு, லேசாய் ஒரு வடிகால் கிடைத்துவிட்ட திருப்தியில் கண்களை முற்றிலும் துடைத்துக் கொண்டு பழைய சாயிராமாக நிமிர்ந்தவன், ஒரு சின்ன பெருமூச்சுடன் பேச ஆரம்பித்தான்...

''போங்க மாமா...எனக்குக்கூடத்தான் அப்பாகிட்ட பயம். அதை மீறிண்டு நான் இதோ வரலையா? அவருக்குத் தெரியாமல், வரலையா? அந்த மாதிரி அம்மா வந்திருக்கலாம் இல்லையா? ஒரு தரம் கூட வரலையே...''

சட்டென்று பதில் சொல்லத் தெரியாமல் தடுமாறினார் கிருஷ்ணசாமி. பதில் செரல்லத் தெரியாதது மட்டுமின்றி, சொல்வதற்கு நியாயமான பதிலும் இல்லை என்று பட்டது. அவனது கேள்வியில் தவறு எதுவும் இல்லை என்று தோன்றிற்று.

''ஏன் வரவில்லை உமா...?எத்தனையோ தரம் வந்து பார்த்திருக்கலாமே...ரமணனுக்குப் பயந்தவளானால் அவன் ஆபீசுக்குப் போனதும் வந்திருக்கலாமே...ஏன் வரவில்லை? வெறுப்பும்கோபமும்கட்டினவன் மீது இருக்கலாம். ஆனால் வயிற்றில் பிறந்த குழநதைமீது ஏற்பட காரணமில்லையே?அப்படி ஏறபட்டாலும்அது நியாய



மில்லையே... இந்தக் குழந்தையின் தவறு ஒன்றுமில்லையே...ஏன் வரவில்லை அவள்? குழந்தையைப் பார்க்கவில்லை...? இந்தச் சின்னப் பையனுக்குத் தோன்றிய சந்தேகமும் கேள்வியும் இதுவரை தனக்குக் கூடத் தோன்றவில்லையே... எத்தனை புத்திசாலி இவன்? இவனைப் போன்ற ஒரு பையனுக்கு ஏன் இப்படிப்பட்ட ஒரு அம்மா—அப்பா? யார் செய்த பாவம் இது...இந்தப் பையன் செய்த பாவமா?'

''என்ன மாமா, பேசாமல் இருக்கீங்க?''

''இல்லைடா கண்ணா...அதான் நானும் யோசிக்கிறேன். பதில் தெரியலை; ஒண்ணு செய்...இப்போ உங்கம்மாவைப் பார்க்கிறபோது இந்தக் கேள்வியைக் கேளு..."

தெருக்கோடியிலேயே ஆட்டோ நின்றது.

''என்னப்பா?'' என்றார் கிருஷ்ணசாமி.

''உள்ள போகாதுங்க... ரெண்டு ஓரத்துலயும் பள்ளம் வெட்டியிருக்கானுங்க..."

கிருஷ்ணசாமி கீழே இறங்கி மீட்டர் பார்த்து பணம் கொடுத்துவிட்டு, ''வாசாயிராம்..." என்று அவனது கையைப் பற்றினார். குறுகலான அந்தத் தெருவில் மின்சார இலாகவோ தொலைபேசி இலாகாவோ பள்ளம் வெட்டி அதை அப்படியே விட்டிருக்க, அநதத் தெரு இன்னமும் குறுகிப் 'போயிருந்தது. கல்லும் மூண்டுமாக நடப்பதற்கு கஷ்டமாக இருந்தது. அதிலே நிறைய பேர் பழகிப்போன காரணத்தால், சைக்கிளில் அதிவேகமாக சர்க்கஸ் வித்தைக்காரனின் ஜாலத்தோடு ஓட்டிக் கொண்டு போனார்கள். அவர்கள் மீது மோதிக் கொள்ளாமல் இடறி விழாமல் தடுமாறி நடந்து கோடியில் வாசலில் குப்பைத்தொட்டியிலிருந்த வீட்டை அடைந்ததும், சாயிராம் முணுமுணுக்கிற குரலில் கேட்டான்:

''ஏன் மாமா, இந்த மாதிரி சின்ன வீட்டுலயா அம்மா இருக்கா?''

கிருஷ்ணசாமி லேசாய் புன்னகை புரிந்தார்.

'வாழ்க்கை ரொம்பக் கஷ்டமானது சாயிராம்... அதுவும் அழகான ஒரு பெண்—மேலும் நடத்தையில் சந்தேகப்பட்டு கணவனால் கைவிடப்பட்ட நிராதரவான பெண்ணிற்குப் பாதுகாப்பான இடம் கிடைப்பது சுலபமில்லை...' என்று சொல்ல நினைத்து, சொன்னால புரிந்து கொள்ளக்கூடிய வயதில்லை என்ற காரணத்தினால் பேசாமல் இருந்து விட்டார்.

அந்த நீண்ட ஒண்டிக்குடித்தன வீட்டின் இருபக்க குடியிருப்புகளையும், வெளியில் தவழ்ந்த குழந்தை செய்திருந்த அசுத்தத்தையும், முற்றத்து சாக்கடை நாற்றத்தையும், திறந்து கிடந்த கக்கூஸ்களையும் கடந்து பின்னால் கடைசியில் இருந்த கோடி அறையின் வாசலில் நின்று மெல்லக் கதவைத் தட்டினார். அப்படித் தட்டுகிற போதே அத்தனை குடியிருப்புகளிலிருந்தும் தலைதலையாக எட்டிப் பார்த்து மறைவதைக் கவனித்துக் கொண்டார். மீண்டும் ஒருமுறை தட்டக் கையை உயர்த்தினபோது கதவு திறக்கப்பட்டது. அந்த இருட்டறையில் இருந்து பளீரென்று வெளிப்பட்ட வெளிச்சமாக ஒருக்களித்த கதவோரமாக நின்ற உமா முதலில் கிருஷ்ணசாமியை மட்டுமே பார்த்தவளாக, "வாங்கோ" என்றவாறு கதவை முழுவதும் திறந்தவள்: பின்னால் நின்ற சாயிராம் கண்ணில்பட சட்டென்று அப்படியே நின்றாள்...

# 7

அம்மா ஓடிவந்து தன்னைக் கட்டி அணைத்துக் கொள்வாள் என்று எதிர் பார்த்தான் சாயிராம். முன்பு போல் உச்சந்தலையில், கன்னங்களில், பின் முதுகில், மார்பில் அழுத்தி அழுத்தி முத்தமிடுவாள் என்று நினைத்தான்... மடியில் போட்டுக் கொண்டு கதறுவாள் என்பதை கற்பனை பண்ணிக்கொண்டு வந்திருந்தான்.

ஆனால், அவள் கதவருகில் சில விநாடிகள் அதிர்ந்து நின்றதோடு சரி... ஆசையும், அன்பும், பாசமும்



பொங்கப் பார்த்ததோடு சரி. பின்னர் உதடுகள் மெல்ல அசங்கின; கீழ்த்தாடை கோணிற்று; கண்கள் கலங்கி அழப் போவதாகப் பயமுறுத்தின மழைவரப் போவதற்காய் இருண்டு, காற்றடித்து, பெரிதாய் இடி இடித்த பின் அடங்கிப் போகும் வானம் மாதிரி சட்டென்று தன்னை அடக்கிக் கொண்டு விட்டாள். மழையாகப் பொழியாமல் தடுத்துக் கொண்டு மிக மெலலியகுரலில், "வா, சாயிராம்..." என்று கூப்பிட்டு நகர்ந்து வழிவிட்டதும்—

அவனுள் மிகப் பெரிய பள்ளமாய் வெட்டின மாதிரி ஏமாற்றம் ஆழமாக விழுந்தது. சட்டென்று அவமான உணர்ச்சியொன்று தோன்றிற்று. தான் தவித்த மாதிரி அம்மா தனக்காகத் தவிக்கவில்லை என்கிற தனக்குத் தெரிகிற கோணமே நிஜமாகப் பட, உள்ளுக்குள் சுருண்டு போய் கிருஷ்ணசாமி மாமாவின் பின்னால் தலைகுனிந்து உள்ளே நுழைந்தான். நாற்காலி எதுவும் இல்லாததால் உமாகோரைப்பாய் ஒன்றைஎடுத்து விரிக்க, கிருஷ்ணசாமி சகஜமாக அதில் உட்கார்ந்து கொண்டார். அவன் உட்காரவில்லை. அடிபட்ட பார்வையில் சட்டை நுனியைத் திருகிக் கொண்டு நின்றிருந்தான்.

உமா அவனருகில் போய் கைகளைப் பற்றி மெல்ல தலையை வருடினாள். பின்வருடின அந்தகையின் நடுக்கம் கன்னம் மார்பு என்று இறங்கி, கடைசியாக அந்த மார்பிலேயே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டதும், அந்தச் சின்ன தூண்டலில் விசிறிக்கொண்டு கிளம்பிற்று அவனது துக்கம். அவனது கழுத்தைக் கைகளால் வளைத்து, "அம்மா... அம்மா..." என்று கதறத் துவங்கினான். முதல் கேள்வியாக அடிமனத்தின் நெருடலே வெளிப்பட்டது.

"இத்தனை நாளாக நீ ஏம்மா என்னைப் பார்க்க வரலை?"

"பார்க்க வரலையா...நானா வரலை? ஏன்டா கண்ணா, எங்கே என் முகத்தைப் பார்த்துக் கேளு...நான் வராமல் இருந்திருப்பேன்னா நினைக்கிறே?"

சட்டென்று உடைந்து, உருகிப் போனான். அப்படியானால் அம்மா வந்திருக்கிறாள் - தன்னைப் பார்க்க வந்திருக்கிறாள்...அதுபோதும் அவனுக்கு. அம்மா தன்னை மறக்கவில்லை. தன் மீது அவளுக்குக் கோபமில்லை, வெறுப்பில்லை. அம்மா... அம்மா...

கைகள் இன்னமும் இறுக - கன்னங்களில் வழிந்த உப்புக் கரிப்போடு அவளைச் சேர்த்து அணைத்து இறுக்கி இறுக்கி முத்தமிட்டான். மனத்தில் இருந்த தவிப்பெல்லாம் ஓய்ந்து அடங்குகிற பிரமை ஏற்படுகிறவரை முத்தமிட்டுப் பின் லேசாய் ஏற்பட்ட நிம்மதியுடன் கேட்டான்:

"வந்தியாம்மா...நிஜமாகவே என்னைப் பார்க்க வந்தியா? எங்கேம்மா வந்தே?"

ரெண்டு தரம் வீட்டுக்கு வந்தேம்ப்பா...வாசல் கேட்லேருந்தே அப்பா என்னை விரட்டிட்டார்..."

"ஏம்மா...வீட்டுக்கு வந்தால் அப்பா விரட்டிடுவார்னு தெரியுமே...அப்புறம் ஏம்மா வீட்டுக்கு வந்தே?"

"வேற எங்கேப்பா வர்றது?"

"ஸ்கூலுக்கு வரக்கூடாது...டீச்சர்ஸ்கிட்டே பர்மிஷன் கேட்டு என்னைப் பார்க்கக்கூடாது?"

தலையைக் குனிந்து பதில் சொன்னாள் உமா:

"ஸ்கூலுக்கு வர எனக்குப் பிடிக்கலேப்பா..."

"ஏம்மா?"

"உங்க டீச்சர்ஸ் அத்தனை பேருக்கும் என் நிலைமை தெரியும். அவா மூஞ்சியில் எல்லாம் விழிக்க நான் விருப்பவில்லை!"



"என்னைப் பார்க்கணும்னா முழிச்சுத் தானேம்மா ஆகணும்..."

"அது சரிப்பா... ஆனால், அப்படியாவது பார்ப்பானேன்னு தான் விட்டுட்டேன்..."

"என்ன, என்ன...?"

சாயிராம் கேட்காமல் தலையை மட்டும் உயர்த்தினான்.

'அப்படியாவது பார்ப்பானேன்னு விட்டுட்டேன்...'

'அப்படியாவது பார்ப்பானேன்னு விட்டுட்டேன்...'

'அப்படியாவது பார்ப்பானேன்னு...'

தலையை ஒரு முறை உயர்த்தினான். உள்ளுக்குள் எதிரொலித்த வார்த்தைகளை உதிர்த்து அகற்ற முயன்ற போது உமாவே பேசினாள்:

"அதுவுமில்லாமல், உன் ஸ்கூல் நேரத்துல எனக்கு ஆபீஸ் இருக்கேப்பா... ஆபீஸை விட்டுவர முடியுமா சொல்லு?"

தன் உடைசலைக் காட்டிக் கொள்ள விருப்பப்படாதவனாக மௌனமாக இருந்தான். அப்போதுதான் ஞாபகத்திற்கு வந்த மாதிரி உமா கேட்டாள்:

"என்ன சாப்பிடறே...? அடடே! புஸ்தகப் பை, டிபன் பாக்ஸ் எல்லாம் கொண்டு வந்துட்டியா? இப்படியே ஸ்கூலுக்குப் போகலாம்னா? டிபன் பாக்ஸ்ல என்ன இருக்கு? சாதமா...?"

அவன் மௌனமாகவே தலையாட்டினான். அவள் டிபன் பாக்ஸைத் திறந்து தயிர் சாதமும்-எலுமிச்சை ஊறுகாயும் வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்துக் கேட்டாள்:

"ஏம்ப்பா...சாதமெல்லாம் யாரு பண்றா?"

"அப்பாதான்."

"சாம்பார் ரசம் எல்லாம் அவரேவா பண்றார்?"

"ம் ஹூம்...அதெல்லாம் கிடையாது. வெறும் சாதம், தயிர்—ரெண்டு மட்டும் தான்..."

"வெறும் சாதமும், தயிரும்தானா? எல்லா வேளைக்குமா...?"

"ம்..."

"எப்படிடா சாப்பிடற? உனக்கு தயிர்சாதம்னாலே பிடிக்காதே..."

பெரிய மனிதத் தோரணையில் அவன் பதில் சொல்லாமல் சிரிக்க, உமா மீண்டும் ஆரம்பித்தாள்...

"காப்பி, டிபன் ஏதாவது உண்டா?"

"ம்ஹூம்...பால்தான்."

சட்டென்று மனத்தில் கவிழ்ந்த இரக்கத்தில் அவனை அணைத்துக் கொண்டு, "இப்போ இங்கே கொஞ்சம் சாப்பிடறியா? வெறும் வத்தக்குழம்புதான் வச்சிருக்கேன். பிசைஞ்சு கைல உருட்டிப் போடுறேன் சாப்பிடறியா?"

வேண்டாமென்று சொல்ல வாயெடுத்தவன், அவள் முகத்தைப் பார்த்துத் தயங்கினான். அதைச் சம்மதமாக எடுத்துக் கொண்ட உமா, கிருஷ்ணசாமியைப் பார்த்து, "நீங்க என்ன சாப்பிடறீங்க மாமா?" என்று கேட்க, அவர் "ஒண்ணும் வேணாம்மா... இப்போதுதான் சாப்பாடே சாப்பிட்டுட்டு வரேன், ஒரு தம்ளர் தண்ணி மட்டும் தாம்மா!" என்றார்.

தண்ணீர் குடித்தபின் ஏதோ நினைத்துக் கொண்டவராக சடாரென்று எழுந்தார்.

"உமா, நீங்க ரெண்டு பேரும் கொஞ்ச நேரம் பேசிண்டே இருங்கோ...எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. பார்த்துட்டு வரேன்..."

"மாமா, எனக்கு ஸ்கூல் இருக்கே? கொண்டுபோய் விடணுமே..."



"நான் கொண்டு போய்விடறேண்டா கண்ணா... அவருக்கு வேலை இருந்தால் புறப்படட்டும்."

"நீ ஆபீஸ் போறபோது விட்டுடறியாம்மா?"

"அதான் சொன்னேன்."

"என்ன சாயிராம்?"

அதற்கும் அவன் பேசாதிருக்க, "அப்போ நான் புறப்படறேன்..." என்று கிளம்பினார் கிருஷ்ணசாமி.

அவர் போனதும் அவசரமாக வற்றல் குழம்புசாதம் பிசைந்து கொண்டு வந்தாள் உமா.

"சீக்கிரம் சாப்பிடு சாயி... ஆபீசுக்குப் புறப்படணும் பாரு..." என்றாள்.

பெரிய பெரிய உருண்டைகளாகக் கையில் உருட்டி வைக்க, சாயிராம் சாப்பிடத் திணறினான். அந்த உருண்டைகளின் அளவிலும், வேகத்திலும் பழைய அம்மா காணாததை நினைத்துக் கொண்டான். ருசி தெரியாமல் விழுங்கி முடிக்க..உமா பரபரவென்று கஞ்சியிட்ட வாயில் புடவைக்கு மாறி, தலையைப் பின்னலிட்டுப் பொட்டு வைத்துக் கொண்டபோது, வாசலில் கார் சத்தமும்—ஹாரன் ஓசையும் கேட்க, அடுத்த சிலநொடிகளில்—

"ரெடியா உமா...?" என்ற குரல் கதவடியில் வர, சாயிராம் திரும்பிப் பார்த்தான்.

அப்பாவைவிட இரண்டு மூன்று வயது பெரியவராக, வழுக்கை விழுந்த தலையும், வெள்ளை வெளேரென்ற நிறமுமாகக் கண்ணியமான தோற்றத்தில் ஒருவர் நிற்க, சாயிராம் தன்னையறியாமல் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்தான். வந்தவரின் பார்வை அவன் மீது கேள்விக் குறியாகப் பதிவதை உணர்ந்த உமா,

"நான் சொல்லலே... இவன்தான் சாயிராம். மை ஸன்..." என்று அறிமுகப்படுத்தினாள்.

வந்தவரின் முகம் புன்சிரிப்பாகச் சிரித்தாலும் குரல் இறுக்கமாக வந்தது.

''ஹி ஈஸ் நோ மோர் யுவர் ஸன்...''

—அந்தக் குரல், பார்வைஎல்லாமே வயிற்றில் சிலீ ரென்று இறங்க, சாயிராம் என்ன செய்வதென்று புரியாமல் மௌனமாகவே நின்றான்.

## 8

அந்தப் புது மனிதர் யார் என்பது தெரியவில்லை. பெயர் தெரியவில்லை. அம்மாவிற்கு எப்படி அறிமுகம் என்பது தெரியவில்லை. ஆனால், முதல் பார்வையிலேயே அவருக்குத் தன்னை பிடிக்கவில்லை என்பது மட்டும் தெரிந்துபோயிற்று சாயிராமிற்கு. உள்ளுணர்வு அதை உணர்த்த, இவனுக்கும் அவரைப் பிடிக்காமற் போயிற்று. காரணமே அற்று—பேச்சுவார்த்தைகூட இல்லாமல் இரண்டு பேருக்கும் இடையில் பெரிதாய்ப் பள்ளம் விழுந்து போயிற்று.

அதைப் புரிந்து கொண்ட உமா சங்கடப்பட்டவளாக இரண்டு பேருக்கும் இடையில் சுமுகநிலையை உண்டாக்க பேச்சைத் துவக்கினாள்...

''சாயி...இவர் நான்வேலை செய்யற கம்பெனி முதலாளி. தினமும் வந்து என்னை ஆபீசுக்குக்கூட டிண்டுப் போறார்."

—அதைக் கேட்டு தன் புன்னகையை இன்னமும் விரிவுபடுத்திய அவர், இந்த அறிமுகம் தேவையில்லை என்கிற பாவனையில் அலட்சியப் படுத்திவிட்டு,

''என்ன, உமா...நீ தயாரா இருக்கியா இல்லையா?" என்றார்.

''தயாரா இருக்கேன். கிளம்ப வேண்டியதுதான்...'' என்று தயங்கின உமா, அதே தயக்கத்துடன் அவரைப் பார்த்துப் பயந்த குரலில் கேட்டாள்:



''போகிற வழியில் இவனை ஸ்கூல்ல இறக்கி விட்டுட்டுப் போகலாமா?''

அவர் ஒருவினாடி பதில் சொல்லாமல் காலம் தாழ்த்த, அடிபட்டகுரலில் முதல் முறையாகப்பேசினான் சாயிராம்:

''உனக்கு ஆபீசுக்கு நேரமாயிடுத்துன்னால் நீ கிளம்பும்மா...நான் ஸ்கூலுக்குப் போய்க் கொள்கிறேன்.''

''எப்படிப் போவே சாயிராம்?'' என்றவள் மீண்டும் பரிதாபமாக அவரை ஏறிட்டுக் கெஞ்சுகிற மாதிரி கேட்டாள்:

''இங்கேயிருந்து இவனோட ஸ்கூல் ரொம்ப தூரத்துல இருக்கு. குழந்தை எப்படித் தனியாப் போவான்?''

''எப்படி வந்தான்?''

''கிருஷ்ணசாமி மாமா இல்லே, அவர் அழைச்சுண்டு வந்தார்.''

எதுக்காக இப்போ திடீர்னு அழைச்சுண்டு வரணும்?"

"நான்தான் குழந்தையைப் பார்க்கணும் போல இருக்குன்னு சொல்லியனுப்பினேன்...''—உமா சட்டென்று பொய் சொன்னாள்.

''எதுக்காகச் சொல்லி அனுப்பினே உமா? ரெண்டு மூணு தரம் இவனைப் பார்க்கப்போய் நீபட்ட அவமானம் போறாதா? இங்கே இவன் வந்தது தெரிந்தால் இவனுக்கும் கஷ்டம்; உனக்கும் கஷ்டம். இதெல்லாம் தேவை தானா சொல்லு...? இனிமேலாவது நிம்மதி வேணும்னு நினைக்கிறது நிஜமானால் நீயாகக் கஷ்டத்தை வீட்டுக்கு வரவழைக்கக் கூடாது.''

உமா பேசாமலிருக்க, அவரே மறுபடியும் கேட்டார்:

''என்ன உமா, பேசாமல் இருக்கே?''

''இல்லே... குழந்தை பாவம், என்ன செய்தான்?''

''ஒன்னும் செய்யலே...ஒன்னும் செய்யாதவனைச் செய்யவச்சு அவனுக்கு அடிவாங்கித் தரப்போறியா?''

''ஐயயோ! அதுக்காக நான் செய்யலை...''

''எதுக்காகச் செய்திருந்தாலும் இவனுடைய அப்பாவுக்கு இவன் இங்கே வந்தது தெரிந்தால் என்ன ஆகும்னு நினைச்சுப் பார்த்தியா?''

''.........''

''ஒரு சாதாரணப் பெண் மாதிரி நீயும் அஞ்ஞானத்துல மனனை உழலப்படுத்திக் கொள்வேன்னு நான் நினைக்கலே உமா...''

''ஐயம் ஸாரி!'' என்று அவன் தலைகுனிய, அவர் வெற்றி பெற்ற கம்பீரத்தில் சொன்னார் : ''தட்ஸ் ஆல் ரைட்! அவனையும் அழைத்துக் கொண்டு கிளம்பு. ஸ்கூல்ல விட்டுட்டுப் போகலாம். ஆனால் இப்படி நடக்கிறதும், கொண்டு போய் ஸ்கூல்ல விடறதும் இதுவே கடைசிதரமாக இருக்கட்டும்! என்ன உமா?''

மௌனமாகத் தலையசைத்து விட்டு உமா அவனது பையையும், டிபன் டப்பாவையும் எடுக்கப் போனதும், சாயிராம் தானே ஓடிப்போய் எடுத்துக் கொண்டான். அம்மாவும் அவரும் முன்சீட்டுகளில் உட்கார பின் இருக்கையில் உட்கார்ந்தபோது, உடம்பு தகிக்கிற மாதிரி உணர்ந்தான். நெஞ்சில் உப்புக்கரிப்பாக ஏதோ இறங்கிற்று. இவர்கள் இரண்டு பேர் கண்களிலும் படாமல் எங்கேயாவது ஓடிப்போய் ஒளிந்து கொள்ள வேண்டுமென்று தோன்ற, கலங்கின கண்களை மெதுவாகத் துடைத்துக் கொண்டான். வழிசொல்வதைத் தவிர வேறு பேச்சற்றுப் போக மௌனமாகவே பள்ளிக்கூட வாசலில் இறங்கிக் கொண்டான். புத்தகப் பையையும், டிபன் டப்பாவையும் எடுத்துக்கொண்டு முன்பக்கம் வந்து கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்குகிற பாவனையில், ஆனால் இறங்கவும் துணியாத அம்மாவை நெருங்கி மெலிதான குரலில் பேசினான் :

''உனக்கு ரொம்பக் கஷ்டம் கொடுத்துட்டேம்மா... ஸாரிம்மா! இனிமேல் இப்படித் தொந்தரவு கொடுக்க



மாட்டேம்மா...நீ பிசைஞ்சு போட்ட வத்தக்குழம்பு சாதம் ரொம்ப ரொம்ப நன்னாயிருந்ததும்மா! தாங்க்யும்மா போயிட்டு வரேம்மா!''

—சொல்லிவிட்டு அம்மாவின் முகத்தை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் சரேலென்று நகர்ந்து, தொண்டையை இறுக்கின துக்கத்தை மறைக்க மற்ற மாணவர்களோடு கலந்து அடையாளம் தெரியாமல் ஓடிமறைந்து கொண்டான். தன் வகுப்பு வாசலில் நின்று கார் கிளம்புகிறதா என்பதைக் கவனித்து விட்டு, கிளம்பி வெளியில் போனதும் புத்தகப் பையையும்...டிபன் டப்பாவையும் தன்னிடத்தில் வைத்து விட்டு வெளியில் வந்தான். தோளில் கைப் போட்டு, ''வர்றியா சாயி, பெல் அடிக்கிற வரைக்கு புட்பால் விளையாடலாம்...'' என்று கூப்பிட்ட தோழனைத் தவிர்த்து யாரும் கவனிக்காத மூலைக்கு ஓடினான். மரத்தடியில் தனியாக உட்கார்ந்து சுற்றி ஒருமுறை பார்த்தபோது, அவனைத் தவிர பள்ளியில் உள்ள அத்தனைபேரும் சந்தோஷமாக இருப்பதாக நினைத்தான். எல்லோருக்கும் சண்டை போடாத அம்மா—அப்பா இருப்பார்கள்...கோர்ட்வரை போய்த் தனியாகப் பிரியாதவர்களாக இருப்பார்கள். சாயந்திரம் பள்ளி விட்டுப் போனதும் அம்மா சூடாக இட்லி தோசை, அடை என்று டிபன் பண்ணி வைத்திருப்பாள்—காப்பி கலந்து கொடுப்பாள்... முன்பு தனக்கு அம்மா பண்ணி வைத்திருந்த மாதிரி. பின் உடை மாற்றச்செய்து விளையாட அனுப்புவாள். விளையாடிவிட்டு விளக்கு வைக்கிற நேரத்தில் படிக்க உட்கார்ந்தால், அப்பா ஆபீஸிலிருந்து வந்து காப்பி குடித்து, குளித்து, பைஜாமா போட்டுக் கொண்டு வந்து கணக்கு சொல்லிக் கொடுப்பார் எல். ஸி. டி., ஈ. ஸி. டி. கற்றுத் தருவார் இங்கிலீஷ் படிக்க வைப்பார். பொயட்டரி சொல்லச் சொல்லுவார். அதன் பின்னர் மூன்றுபேரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவார்கள். அப்புறம் அப்பாவின்மீது கால் போட்டுக்கொண்டு அம்மாவின் மடியில் தலைவைத்துக் கதை சொல்லச்சொல்லிக் கேட்டு...

'உனக்கு ஒத்தெல்லோ கதை தெரியுமா...?'

'அது என்ன ஒத்தெல்லோ கதைம்மா...?'

'ஒத்தெல்லோன்னு ஒருத்தன் இருந்தான்...'

'நிஜமாகவே இருந்தானா?'

'அது தெரியாதப்பா எனக்கு... ஷேக்ஸ்பியர் எழுதினதைத்தான் நான் படிச்சிருக்கேன். நிஜமா பொய்யான்றதையெல்லாம் ஆராய்ச்சி பண்ணினதில்லை...'

'சரி. நீ கதையைச் சொல்லும்மா!'

'அந்த ஒத்தெல்லோன்றவன் கருப்பா இருப்பான்...'

கதை சொல்லி முடித்ததும் தான் கேட்ட அதே கேள்வியை மற்றவர்களும் கேட்பார்களே?

'ஏம்மா, டெஸ்டிமோனாவை ஒத்தெல்லோ சந்தேகப்பட்ட மாதிரி அப்பா உன்மேலேயும் சந்தேகப்பட்டு, தலைகாணியால் மூஞ்சியை அழுத்திக் கொன்னுடுவாராம்மா?'

'சீ...சீ... பைத்தியம்! அப்பா ரொம்ப நல்லவர்டா... அந்த மாதிரி சந்தேகமெல்லாம் படமாட்...'

சரேலென்று கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். 'ஓ... வேண்டாம், வேண்டாம்...' என்று தனக்குள்ளாகக் கதறினான். அந்த மாதிரி அம்மா—அப்பா யாருக்கும் வேண்டாம்... இதுபோல் பிள்ளையைத் தவிக்கவிடவும் வேண்டாம். இவர்களாவது சந்தோஷமாக இருக்கட்டும். ஓடி விளையாடட்டும்...வாய்விட்டுக் கத்தி சிரிக்கட்டும்...சந்தோஷமாக இருக்கட்டும.

சட்டென்று அவனுக்குள் ஒரு கேள்வி எழுந்தது. எத்தனை அழுத்தமாகச் சொன்னாள் அம்மா?

'அப்பா ரொம்ப நல்லவர்டா. அந்த மாதிரி சந்தேகமெல்லாம் படமாட்டார்...!'



'கடைசியில் என்ன ஆயிற்று... அந்த அப்பாவா நல்லவர்? ஒருவேளை அப்பா நல்லவரோ...? தப்பெல்லாம் அமமா மீதுதானோ?'

தன்னைக் காரில் கொண்டுவந்துவிட்ட அவர்...அம்மா மீது அவருக்கிருந்த உரிமை?

கம்பெனி முதலாளி என்றாளே அம்மா...

அப்பா, அம்மாவை அந்த டாக்டரோடுதானே சந்தேகப்பட்டார்? ஆனால், அம்மா இந்த முதலாளியுடன் காரின் முன்சீட்டில் உட்கார்ந்து வருகிறாளே...அப்படியானால் இவர்...இவர் யார்...?

கணீரென்று அடித்த மணிச்சத்தம் காதில் விழ அப்பா, அம்மா, டாக்டர், காலையில் சந்தித்த முதலாளி அத்தனை பேரையும் தற்காலிகமாக ஒதுக்கித் தள்ளிவிட்டு எழுந்து வகுப்பை நோக்கி வேகமாக ஓடத் துவங்கினான் சாயிராம்...

## 9

ஸ்கூட்டரை மேலேற்றி வராந்தாவில் நிறக வைத்துவிட்டு, உள்ளே நுழைந்த உடனேயே ஆக்ரோஷமாக உறுமினான் ரமணன்.

''இன்னிக்குக் காலைல எங்கடா போயிருந்தே?''

தரையில் உட்கார்ந்து சுவரில சாய்ந்து படிக்கிற பாவனையில் யோசித்துக்கொண்டிருநத சாயிராம், அப்பாவின் ஆக்ரோஷமான குரலைக் கேட்டுச் சடாரென்று எழுநது நின்றான். அவரது முகச்சிவப்பும், புருவங்களின் சுருக்கமும் அடிவயிறறில் பயமாக கவ்வின. கால்களில் நிற்க இயலாத நடுக்க தோன்ற, எங்கேயோ உள்ளுக்குள்ளிருந்து பேசுகிற மாதிரி சொன்னான்:

''எங்கேயும் போகலேப்பா...''

அதைச் சொல்லுகிறபோது தலை தானே கீழே கவிழ்ந்தது. கைவிரல்கள் சட்டை நுனியை முறுக்கின; அது ரமணனை இன்னும் ஆத்திரப்படுத்திற்று. ஏதோ முடிவிற்கு வந்தவனாகத் திரும்பிப்போய் வாசல் கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டவன், பாண்ட்டிலிருந்து பெல்ட்டை உருவிக் கொண்டே குரலைத் தழைத்து–ஆனால் அழுத்தம் குறையாமல் கேட்டான்:

''எங்கேயும் போகலே?''

''இல்...லேப்...பா...''

''இ...ல்...லே...'' – அவனைப் போலவே எழுத்துக்கு எழுத்து அழுத்தம் கொடுத்து அடிஅடியாக வைத்து நெருங்க சாயிராமிற்கு உடம்பு பதறிற்று. 'சாமி, என்னைக் காப்பாத்தேன். பிள்ளையாரப்பா காப்பாத்தேன்...!' என்று மனசு கெஞ்ச அவன் பேசாமல் நின்றிருந்தான். அவனை மிக நெருங்கி ஜாண் இடைவெளியில் நின்ற ரமணன், முன்தலைமுடியைப் பிடித்து குனிந்திருந்த முகத்தை நிமிர்த்திப் பொசுக்கி விடுகிற மாதிரி பார்த்தான்.

''எங்கேயும் போகலே நீ...? ஸ்கூலுக்குப் போறதுக்கு முன்னால் எங்க போனே? யார்கூட கார்ல போய் ஸ்கூல்ல இறங்கினே?''

அத்தனை பயத்திற்கும், அதிர்ச்சிக்கும் இடையிலும் கூட சாயிராமிற்குள் மெலிதாய் ஆச்சரியம் ஏற்பட்டது. எப்படித் தெரியும் இவருக்கு என்கிற வியப்பு வந்தது. இவர் வேலை செய்வது ஆடிட்டிங் ஆபீஸா, இல்லை போலீஸ் இலாக்காவா என்கிற சந்தேகம் வந்தது. எவ்வளவு திறமையாய் துப்பறிகிறார் என்று மனத்திற்குள் பாராட்டிக் கொண்டிருந்தபோது பளீரென்று முதல் அறை கன்னத்தில் விழுந்தது.

''பொறுக்கிநாயே! இழுத்துக்கொண்டு வந்து வீட்டில் தள்ளி விட்டுப் போனால், திருப்ப எழுந்தா ஓடி இருக்கே? எத்தனை தைரியம்டா உனக்கு...? அந்த நடத்தைகெட்டவளோட பார்வைகூட உன்மேல படக்கூடாதுன்னு நான்



வளர்க்கிறேன்; நீ என்னடான்னால் அவவீட்டைத் தேடிண்டு போனது மட்டுமில்லாமல், அவளை மாதிரியே எவன் கிடைப்பான்னு கார்ல ஏறிண்டு பவனியா வரே? என்கிட்ட பொய்யா சொல்றே...? அயோக்கிய ராஸ்கல்! எத்தனை நெஞ்சழுத்தம் இருந்தால் அப்படி செய்திருப்பே...''

—மூச்சிரைக்கக் கத்திக் கொண்டே பெல்ட்டைச் சுழற்றி சுழற்றி விசிற அதன் பளீரிடலில், ''இனிமேல் செய்யமாட்டேம்பா, தெரியாம செய்துட்டேம்பா...!'' என்று கதறித் துடித்து விடுதலை தேடித் தவித்தான் சாயிராம்.

''என்னடா தெரியாமல் செய்துட்டே...எத்தனை தரம் நயமாகவும், பயமுறுத்தியும் உனக்கு நான் சொல்லியிருக்கேன்...!'' —சற்றே ஓய்ந்து அடிப்பதை நிறுத்திவிட்டு குரூரப் பார்வை பார்த்துக் கொண்டே கேட்டான் ரமணன். அடிபட்ட இடங்களில் எரிச்சல் தாங்காமல் துவண்டு நின்று பதில் சொல்லத் தொடங்கினான் சாயிராம்.

''ஆமாம்...பா...''

''என்னடா, ஆமாம்...?''

''சொல்லியிருக்கீங்கப்பா...''

''என்ன சொல்லியிருக்கேன்?''

''அம்மாவைப் பார்க்கக்கூடாது, பேசக்கூடாது...''

''அம்மா என்னடா அம்மா... இனிமேல் அவ உனக்கு அம்மா இல்லை. உன் அம்மா செத்துப்போய் ரொம்ப நாளாச்சு...''

''சரிப்பா...''

''யார் உன்னை அங்கே கூட்டிண்டு போனது? அந்தக் கண்ணாடிக் கிழவன்தானே?''

''இல்லேப்பா...''

"இப்போ திரும்பப் பொய்சொன்னே பெல்ட் முறிஞ்சு போயிடும் ராஸ்கல்...நிஜத்தைச் சொல்லு. கிருஷ்ணசாமி தானே உன்னைக் கூட்டிண்டு போனான்?''

நிஜத்தைச் சொல்லி தற்போது தனக்கு இருக்கிற ஒரே ஆதரவையும் இழக்க விரும்பாத சாயிராம் துணிந்துபோய் சொன்னான்:

"இல்லேப்பா. சத்தியமா இல்லை!''

''பின்னே, யாரு கூட்டிண்டு போனது?''

''நானாகத்தான் போனேன்.''

"உனக்கு எப்படி வீடு தெரியும்?''

''அன்னைக்கு ஒருநாள் அம்மா இங்கே வந்...''

"ம்...திரும்பி அவளை அம்மான்னு கூப்பிடறியா?''

"இல்லேப்பா...சாரிப்பா! வாய்தவறி வந்துடுத் துப்பா...''

''காலையிலேயும் அவ இங்கே வந்திருந்தாளா?"

''ஆ... ஆமாம்ப்பா!''

''அவதான் அழைச்சிண்டு போனாளா?''

"ஆ...மாம்.''

"இன்னொரு தரம் அந்தத் தே...இங்கே வரட்டும் சொல்றேன். இனிமே உனக்கு அவளைப் பார்க்கிற தைரியம் வருமா?''

''ம்ஹூம்...வராதுப்பா!''

''பேசற தைரியம், அவ வீட்டுக்குப் போகிற தைரியம்?''

"வரவே வராதுப்பா!''

"உடம்புல பயம் இருக்கட்டும்—ஜாக்கிரதை! போய் படி. குக்கர் வச்சிட்டு கூப்பிடறேன்.''



அவன் பதில் சொல்லாமல் போய் மீண்டும் பழைய இடத்தில் உட்கார்ந்தான். உடை மாற்றி பின் பக்கம்போய் முகம் கழுவிக் கொண்டு வந்த ரமணன் ஒருவினாடி நின்று அவனையே பார்த்தான். அப்பா தன்னைப் பார்ப்பதை உள்ளுணர்வில் அறிந்தாலும் சாயிராம் தலையை உயர்த்த வில்லை. துருத்திக் கொண்டு வந்த துக்கத்தை அடக்கிய வாறு தீவிரமாகப் படிக்கிற பாவனையில் இருந்தான். 'இந்த அப்பா உள்ளே நகரமாட்டாரா' என்று தோன்றிற்று.

ஆனால் ரமணன் நகருபவனாக இல்லை. தலைவாரி, சலவை வேஷ்டியைப் பிரித்துக்கட்டி, ஆபீஸிற்குப் போட்டுக் கொண்டு போகிற நல்ல சட்டைகளில் ஒன்றை எடுத்து அணிந்தபோது சாயிராம் சந்தோஷப்பட்டான். 'எங்கோ வெளியில் போகப் போகிறார்போல் இருக் கிறது...வாய்விட்டாவது அழலாம்...!'

ரமணன் வெளியில் போகிறவனாக இல்லை. ஒரு முறை வாசல்வரை போய் எட்டிப் பார்த்துவிட்டு உள்ளே வந்து சாயிராமை அதட்டினான்:

''விளக்கு வைக்கிற நேரத்தில் இப்படி உட்கார்ந்து அழுதிண்டிருக்காமல் எழுந்து போய் மூஞ்சியை அலம்பிண்டு வா. யாராவது வந்தால்கூட அசிங்கமாக இருக்கும் பாரு...''

அப்பா யாரையோ எதிர்பார்த்துக் காத்திருப்பது புரிய இவன் எழுந்து பின்பக்கம் போய் முகத்தைக் கழுவிக் கொண்டபோது. கழிவிரக்கத்தில் உள்ளுக்குள் நீளமாய் விம்மல் தெறித்தது. தண்ணீருடன் கண்ணீர் கலந்து போயிற்று. முதுகிலும், கை—கால்களிலும் விரல் விர லாக சிவப்புக்கோடுகளாகத் தடித்துப் போயிருந்ததை எரிச்சலுக்கு இதமாகத் தடவி விட்டுக் கொண்டான். தண்ணீர் மேலே பட்டதும் எரிச்சல் இன்னமும் அதிக மாக, டர்கிஷ் துவாலையால் மெல்ல ஒற்றிக்கொண்ட போது உள்ளேயிருந்து அப்பாவின் குரல் கேட்டது:

"சாயிராம்...என்ன பண்றே? சீக்கிரம் டிரஸ் மாற்றிண்டு வா?"

—அந்தக் குரலின் குழைவிலேயே அப்பாவிற்கு மிக வேண்டிய யாரோ வந்திருப்பது புரிய, இவன் அவசரமாக உடை மாற்றிக் கொண்டு முன் அறைக்குப் போனான். சற்று வயதான பெரியவர் ஒருவர் கையில் குடையுடன் உட்கார்ந்திருந்தார் தடித்த மூக்குக் கண்ணாடி வழியாக இவனை ஏறிட்டுப் பார்க்க அப்பா அறிமுகப்படுத்தினார்.

"இவன்தான் என் பிள்ளை. எட்டு வயசு முடியப் போறது. சாயிராம்னு பேரு..."

பெரியவர் அளக்கிற மாதிரி தலையிலிருந்து கால்வரை பார்த்துவிட்டுக் கேட்டார்:

"இவன் ஒருத்தன்தானே?"

"ஆமாம்."

"டைவர்ஸ் பண்ணறதற்கு நிஜமான காரணம் அது தானே?"

"உங்களுக்குச் சந்தேகமிருந்தால் லாயரோட விலாசம் தரேன்—போய் விசாரிச்சுப் பார்த்துக்கலாம்..."

"சந்தேகம்னு இல்லை. நீர விசாரித்துத் தெரிஞ்சுக்கறது நல்லதில்லையா?"

"அது சரி..."

"வீடு சொந்தமா?"

"ஆமாம்."

"பூர்வீகச் சொத்துன்னு ஏதாவது இருக்கா?"

ரமணன் இலேசாய் புன்னகை செய்து கொண்டே சொன்னான்:

"நான்தான் இருக்கேன்."



"அப்படியா...?" என்று யோசித்து மீண்டும் கேட்டார் அவர்:

"என்ன சம்பளம் வாங்கறதா சொன்னேள்?",

'கிட்டத்தட்ட ரெண்டாயிரம் வர்றது..."

"வேற பிக்கல் பிடுங்கல் இல்லை?"

"உறவுன்னு சொல்லிக்க இந்தப் பையனைத் தவிர வேற யாரும் இல்லை."

"அப்புறம் முதல் பெண்டாட்டியால் எந்தக் கஷ்டமும் வராதே..."

"அதான் தொலைச்சுத் தலைமுழுகிட்டேன்னு சொன்னேனே...?"

"என்ன கோத்திரம்?"

"வாதூலம்."

"நட்சத்திரம்?"

"திருவாதிரை."

"ஜாதகம் இருக்கோல்லியோ?"

"இருக்கு."

"கொடுங்க கைல. இப்பவே டஜன் பொண்ணுங்க ஜாதகம் இருக்கு. பொருத்தமா இருக்கிறதைச் சொல்றேன் போய் பொண்ணைப் பார்த்துட்டு வந்து நிச்சயம் பண்ணிடலாம்."

"சரி..." என்று ரமணன் தயங்கி நிற்க, வந்தவர், "என்ன...?" என்று புறப்படத் தயாராகச் செருப்பில் காலை நுழைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தார்.

"ஒன்னுமில்லே...எப்போ சொல்வீங்க?"

"அட...உங்க அவசரம்தான் புரியறதே...சீக்கிரமே முடிச்சுடறேன். என்னைக் கொஞ்சம் தாராளமா கவனிச்

சுண்டேன்னா எண்ணி பத்தே நாள்ல இந்த வீட்டுல விளக்கேற்றி வைக்க வளையல் கை வந்திடும்!''

''அவ்வளவு தானே... அதுக்கென்ன, பிரமாதமா கவனிச்சுக்கறேன். இந்தாங்கோ காப்பி செலவுக்கு வச்சுக் கோங்கோ...''

''காப்பி செலவிற்காக நூறு ரூபாய் நோட்டு கைமாறுவதை, ஒன்றும் புரியாதவனாகப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் சாயிராம்.

## 10

'நாம் இப்போ எங்கேப்பா போறோம்...?' என்று கேட்க வாயெடுத்து சட்டென்று அடக்கிக் கொண்டான் சாயிராம். கேட்டால் கிடைக்கப் போகிற பதில் அவ னுக்குத் தெரியும்...'நான் அழைச்சுண்டு போற இடத்துக்கு வரணும் எங்கே, யாருன்னெல்லாம் கேள்வி கேட்கக் கூடாது, புரியறதா? அந்த அளவிற்கு நீ இன்னும் பெரிய மனுசனாக ஆயிடலை! தெரியறதா?''

அதைவிட ஒன்றும் கேட்காமல் இருப்பது உசிதமாகப் பட ஸ்கூட்டரின் பின்சீட்டுக் கைப்பிடியை இறுகப் பற்றிக் கொண்டான். எப்போதைவிடவும் ஸ்கூட்டர் வேமாகப் போவதை உணர்ந்தான் அன்று காலையிலிருந்தே அப்பா சற்று பரபரப்புடன் காணப்பட்டதாகத் தோன் றியது. ஞாயிற்றுக்கிழமைதான். வழக்கமாக ஞாயிற்றுக் கிழமைகளில் ஏழரை, எட்டு மணிவரை தூங்குகிற ரமணன் அன்று காலை ஆறு மணிக்கெல்லாம் எழுந்து கொண்டான். தான் எழுந்ததோடு மட்டுமின்றி, சாயிரா மையும் எழுப்பி விட்டான். இவன் ஒன்றும் புரியாமல் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றதும், அதட்டுகிற குரலில் அல்லாமல் - நிதானமான குரலில் பேசத் தொடங் கியது சாயிராமை இன்னமும் ஆச்சரியப் படுத்திற்று.

குறிப்புதவி நூல்



CONNEMARA PUBLIC LIBRARY
31 MAR 2001
CHENNAI
578257
894.8113
IND

''சீக்கிரம் வேலைகளைப் பார்த்து குளிச்சு டிரஸ் மாற்றிண்டு கிளம்பலாம் சாயி...

''சரிப்பா!''

''சாப்பாடுகூட வெளில வச்சுக்கலாம், வீட்டுல சமைச்சுண்டிருக்க வேணாம்.''

''சரிப்பா!''

''நான் காப்பி போடறேன். அதுக்குள்ள நீ குளிச்சுட்டு வந்துடு. நல்ல புது டிரஸ்ஸா போட்டுக்க. இந்த வருஷ தீபாவளிக்கு வாங்கின டிரஸ் நன்னா இருக்கும். அதைப் போட்டுக்க. அதற்குள் எல்லாம் நிச்சயமானால் இன் னொரு ஸெட் டிரஸ் வாங்கித் தரேன்.''

அதற்கும் அதே 'சரிப்பா' வைத் தவிர சொல்வதற்கு வேறு வார்த்தைகளற்று மௌனமாகப் பின்பக்கம் போனான். பல் தேய்த்துக் கொண்டிருந்தபேதே உள் ளுக்குள் கேள்விகளும், எதிர்பார்ப்புகளுமாக ஓடின...

'எங்கே கூட்டிக்கொண்டு போகப்போகிறார் அப்பா? ஒரு வேளை வண்டலூர் ஜூவாக இருக்குமோ...? பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்னால் துணிந்து தன்னை வண்டலூர் மிருகக் காட்சி சாலைக்கு அழைத்துப் போகச் சொல்லிக் கேட்டிருந்தான் சாயிராம். தன் வகுப்பு நண் பர்கள் எல்லாரும் அம்மா-அப்பாவுடன் போய்ப் பார்த்து விட்டு வந்து கதைமாதிரி சொன்னார்கள்...காரில் போய் காரில் திரும்பின பெருமையை வர்ணித்தார்கள்.

'ஏன் சாயி, நீ போகலை?'

'ரொம்ப ஜோராயிருக்குடா! உங்கப்பா-அம்மாவைக் கூட்டிட்டுப் போகச்சொல்லி போயிட்டு வாடா...'

'கார்ல போனால் ஒரு மணிநேரம்தாண்டா!'

'போற வழியெல்லாம்கூட நல்லா இருக்குடா...'

அதற்குப்பின் நாலைந்து நாட்கள் வண்டலூர் மிருகக்காட்சி சாலை அவனது கனவில் வர ஆரம்பித்தது. சிங்கமும், புலியும், நீர்யானையும், கரடியுமாகக் கூண்டுக்

குள்ளிருந்து கத்தின. பறவைகள் கிறீச்சிட்டன. யானையின் மீது அவன் சிரித்துக் கொண்டே சவாரி செய்தான்.

அதற்கு மறுநாள்தான் அவன் ரமணனிடம் மெதுவாகத் தயங்கி அருகில் போய் வண்டலூர் மிருகக்காட்சி சாலைக்கு அழைத்துப் போகச் சொல்லிக் கேட்டான். அதிசயமாக அவன், 'சரி. ஒரு ஞாயிற்றுக்கிழமை அழைச்சுண்டு போறேன்...!' என்று சொல்லியிருந்தான். அவன் அதைச் சொல்லி நிறைய ஞாயிற்றுக் கிழமைகள் நகர்ந்து போய் விட்டாலும் இன்று காலை தன்னை சீக்கிரம் எழுப்பியதனால், ஒருவேளை வண்டலூர் ஜூவிற்குத் தான் தன்னை அழைத்துப் போகப் போகிறாரோ என்ற எண்ணம் தோன்றி சந்தோஷப் படுத்தியது

நேற்று அடித்த அடிக்கு இன்று அங்கு அழைத்துப் போய் சமாதானப்படுத்த நினைக்கிறாரோ எனறும் சந்தேகப் பட்டான். வெகுசில சமயங்களில் தான் அடித்த அடிக்கு வருத்தப்பட்டு ரமணன் சின்னச் சின்னதாக இதுபோல் ஏதாவது செய்வதுண்டு. ஓட்டலுக்கு அழைத்துப் போய் டிபன், கோன் ஐஸ்கிரீம, அல்லது காட்பரீஸ் சாக்லெட் என்று வாங்கித் தருவதுண்டு. அந்த மாதிரி அதிர்ஷ்டவசமாக இன்று வண்டலூர் மிருகக் காட்சிசாலை என்கிற கனவு நிஜமாகப் போகிற சந்தோஷத்தில் பரபரத்தான். பல் தேய்த்து, காப்பிக்குக் கூடக் காத்திராமல் குளித்துவிட்டு ஓடிவந்தான். அலமாரியிலிருந்து அப்பா தீபாவளிக்கு வாங்கித்தந்த நிஜாரையும், கருநீல டீ ஷர்ட்டையும் எடுத்து போட்டுக் கொண்டான்.

கண்ணாடிமுன் நின்று பார்த்தபோது தான் அழகாக இருப்பதாகத் தோன்றியது. சட்டென்று அம்மா ஞாபகம் வந்தது. அம்மாவின் அதே மஞ்சள் கலந்த நிறம், நீளமாய் கறுப்பு இமைகள் அழுத்தும் அகலக்கண்கள், கூர்மையான மூக்கு, செப்பு மாதிரி வாய், குவிந்த முகவாய். உடல்வாகு



நிறம் எல்லாம் அப்படியே அம்மா...ஒருவேளை, தன்னைப் பார்க்கிற போதெல்லாம் அம்மா ஞாபகம் வருவதால் தான் அப்பா தன்னை அடிக்கிறாரோ என்ற எண்ணத்தில் மனம் சுருங்க, சட்டென்று அதை மாற்றிக் கொள்ள வெளியில் வந்தான்.

கூடத்தில் அப்பாவும், நான்கு நாட்களுக்கு முன் காப்பிக்காக நூறு ரூபாய் வாங்கிக் கொண்டுபோன மனிதரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்து சுவர் ஓரம் ஒடுங்கினான். என்ன காரணத்தினாலோ இவனுக்கு அந்த மனிதரை முதற் பார்வையிலேயே பிடிக்காமற் போயிருந்தது. இப்போதும் அவரைப் பார்த்து முகம் சுளித்தான். 'கிளம்புகிற நேரத்தில் இவர் ஏன் வந்தார்?' என்று தோன்றியது.

ஆனால், அதற்கு மாறாக அந்த மனிதரின் வரவினால் அப்பாவின் முகம் சந்தோஷத்தில் மிதப்பதைக் கண்டான். அப்பா அவருக்குக் காப்பி கொடுத்ததற்கான அடையாளமாக தம்ளரும், டபராவும், ஸ்டூலில் வைக்கப்பட்டிருக்க, அப்பா சற்று தழைந்த குரலில் சொன்னார்:

''அப்போ சரி. நீங்க கொடுத்த இந்த அட்ரஸுக்கு நான் வந்துடறேன். நீங்க நேரா அங்க வருவேள் இல்லையா?''

''வராமலா பின்னே...இத்தனை செய்திட்டு முக்கியமான நேரத்துக்கு யாரும் வராம இருப்பாளா?''

''ரொம்ப சந்தோஷம். அப்போ நான் வந்துடறேன்...''

வந்தவர் எழுந்து நின்று அர்த்தத்துடன் ரமணனைப் பார்க்க, இன்னொரு நூறு ரூபாய் கைமாறியது.

பார்த்துக் கொண்டிருந்த சாயிராமிற்கு அப்பா ஏன் இவருக்கு இப்படிப் பணமாக வாரித்தருகிறார் என்று தோன்ற, பேசாமல் சமையல் அறைக்குள் நுழைந்தான். அதற்குள் வந்தவரை அனுப்பிவிட்டு அப்பாவும் வந்தார். சூடாக அவனுக்குக் காப்பி கலந்து கொடுத்துவிட்டு,

முகம்முழுவதும் சிரிப்பாக முதுகில் மென்மையாய்த் தட்டிக் கொடுத்தவாறு சொன்னான்:

''அட, ரொம்ப அழகாய் இருக்கியே சாயி...இரு நானும் குளிச்சு டிரஸ் பண்ணிண்டு வரேன். ஓட்டல்ல டிபன் சாப்பிட்டுவிட்டுப் போகலாம். திரும்பி வரும் போது சாப்பாட்டையும் முடிச்சுண்டு வீட்டுக்குத் திரும்ப லாம், என்ன?''

அதே சரிப்பா வெளிப்பட சாய்ராம், ரமணன் வெளி வந்து அலங்காரம் பண்ணிக் கொள்வதைக் கவனித்துக் கொண்டு நின்றான்.

ரமணன் இரண்டு மூன்று முறை பாண்டையும் சட்டையையும் மாற்றினான். பின்னர் ஆழ்ந்த சாம்பல் நிறபாண்ட்டும், வெளிர் சாம்பலில் சட்டையும் போட்டுக் கொண்டான். தலையை அக்கறையாக வாரினான். மிதமாய் பவுடர் பூசி புருவங்களை ஒழுங்குபடுத்தினான். அலமாரியிலிருந்து செண்ட் பாட்டிலை எடுத்து காது மடலின் பின்பும், சட்டையின் கை அடியிலும் அழுத்தி அடித்துக் கொண்டான். 'மிருகக்காட்சி சாலைக்குப் போவதற்கா இத்தனை அலங்காரம்?' என்று நினைத்த சாயிராமைத் திரும்பிப் பார்த்த ரமணன், ''போக லாமா...?'' என்ற போதும், பின்னர் வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினபோதும், ஓட்டலில் டிபன் சாப்பிட்ட போதும், எழுந்த 'எங்கேப்பா போறோம்' என்ற கேள்வி உள்ளுக்குள் அழுந்தின மாதிரியே ஸ்கூட்டர் பறந்த இந்த வேகத்திலும் வெளியில் வராமல் அழுந்திற்று.

'சரி, எங்கே போகிறதுபார்க்கலாம்...'என்றமுடிவிற்கு அவன் வந்தபோது, ஸ்கூட்டர் சட்டென்று ஒரு கிராமம் மாதிரி தோற்றமளித்த சென்னையின் புறநகர்ப்பகுதி ஒன்றில் நுழைந்தது சாணமிட்ட மண் தரையும், இரு பக்கமும் சார்மணை வைத்த ஓட்டு வீடுகளுமாகக் காட்சி யளிக்க — ஸ்கூட்டர் தெருக்கடைசியில் கோபுரத்திற்குப் பக்கத்திலிருந்த வீட்டுவாசலில் நின்றபோது,சாயிராமிற்கு



அப்பா தன்னை வண்டலூர் ஜூவிற்கு அழைத்துப் போகப் போவதில்லை என்பது தெரிந்து போயிற்று. சட்டென்று அழுகை வந்தது. ஏமாற்றத்தினால் துக்கம் அடிவயிற்றிலிருந்து புரண்டு வெளிவர நீளமாய் எழும்பிய கேவலை உதட்டை இறுக்கி அடக்கிக் கொண்டான்.

ரமணன் ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி யதும், உள்ளேயிருந்து காலையில் நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு போன அந்த மனிதரும்—இன்னொருவரும் வெளியில் வந்து, ''வாங்கோ...வாங்கோ...'' என்று வரவேற்றனர்.

நூறு ரூபாய் மனிதர், ''இவர்தான் தகப்பனார்...'' என்று அறிமுகப்படுத்தியதும்,—கறுப்பாய், முன்மூக்கு தூக்கலாய், பருமனில் சேர்த்தியாக நின்ற அந்த மனிதர் கைகூப்பினார்.

''என்பேரு ஜெயராமன் ரயில்வேயில் வேலையாக இருந்து இப்போதான் ரிடையர் ஆனேன்...''

''அப்படியா...?'' என்று ரமணன் முன்நெற்றி மயிரை ஒதுக்கிவிட்டுக் கொள்ள, ஜெயராமன், ''இவன் தான் உங்க பிள்ளையா?'' என்று கேட்டார்.

''ம்...''

''என்ன படிக்கிறான்?''

''ஃபோர்த் ஸ்டாண்டர்ட்.''

''உள்ளே வாங்கோ!''

ஒன்றும் புரியாமல் விழித்த சாயிராம் அப்பாவைப் பின் தொடர்ந்து உள்ளே போய் பக்கத்திலேயே நாற் காலியில் உட்கார்ந்து கொண்டான். எதிர் அறையிலிருந்து வந்த ஒன்பது கஜப் புடவை, ''வாங்கோ...''என்றழைக்க, ''தாயார்'' என்றார் நூறுரூபாய் மனிதர்.

ரமணன் பவ்யமாய் கைகுவிக்க,

'காப்பி சாப்பிடறேளா?''

"இப்போதான் ஓட்டல்ல டிபன் காப்பியெல்லாம் சாப்பிட்டுட்டு வரோம்."

"அதனால் என்ன, பரவாயில்லை... இங்கேயும் கொஞ்சம் சாப்பிடலாம்" என்ற ஜெயராமன், "நீ போய் காப்பி கொண்டுவா லக்ஷ்மி..."—மனைவியிடம் சொன்னார்.

காப்பி வந்தது. பின்னாலேயே ஒரு பெண் கறுப்பாய், குண்டாய் — பெண்வேடமிட்ட கடோத்கஜன் மாதிரி தெரிந்தாள். முகமும் அத்தனை லட்சணம் என்று சொல்ல முடியாது. தலையை இறுகப்பின்னி நிறைய கனகாம்பரமும், மல்லியும் வைத்துக் கொண்டிருந்தாள். போட்டுக் கொண்டிருந்த இரண்டு, மூன்று தங்க நகைகளும் அவள் உடம்பில் பளீரிட்டன. வந்து நின்றதும் அந்த சின்னக் கூடம் இன்னும் சின்னதாய் தெரிய - நூறுரூபாய் மனிதர், "நமஸ்காரம் பண்ணும்மா..." என்றார்.

அவள் சற்று சிரமப்பட்டவளாகத் தரையில் விழுந்து நமஸ்கரித்து எழுந்ததும்,

'உட்கார்ந்துக்கோ..." என்றார். அவள் எதிரில் சப்பணமிட்டு உட்கார,

"பாட்டு ரொம்ப நன்னாப் பாடுவாள். நாலைந்து வருஷமா சிட்சை..."

"பாடச் சொல்லுங்கோளேன்!"—இது ரமணன்.

"பாடும்மா மங்களம்!"

"தொண்டை கட்டிண்டுருக்கு மாமா..."

"பரவாயில்லே...சின்னதா ஒரு பாட்டுப் பாடு."

அவள் தமிழில் சின்னதாக சாகித்யம் ஒன்று பாட, உருவத்திற்கேற்ற குரலாக இல்லாமல் மிக இனிமையாக இருந்தது. ஐந்து நிமிடத்திற்கு அந்த இனிமை கூடம் முழுதும் எதிரொலிக்க,

ரமணன் மிக மிக திருப்தியடைந்தவனாகச் சொன்னான்:



"தியாகராஜ கீர்த்தனை ஒன்று பாடச் சொல்லுங்களேன்..."

"ஆஹா...பேஷா...பாடச் சொல்லிட்டால்போறது... என்னம்மா மங்களம், சார் கேட்பது காதில விழுந்த தோல்லியோ? ஒரு கீர்த்தனை ஆரம்பி..."

அவள் வெட்கப் புன்னகையோடு தலைகுனிந்தவாறு, 'ஸாகேத ராமா...' பாடத் துவங்க, ரமணனின் கை விரல்கள் அவனையறியாமல் தொடையில் தாளம் போடுவதைக் கவனித்துக் கொண்டார் நூறு ரூபாய் மனிதர்.

பாட்டு முடிந்ததும் அவள் எழுந்து உள்ளே போக, ஜெயராமன் நூறு ரூபாய் மனிதரை ஏறிட்டான். அவர் ரமணனைப் பார்த்து நேரிடையாகவே கேட்டார்:

"என்ன...என்ன சொல்றேள்? திருப்தியாக இருக்கா?"

ரமணன் பேசாமல் இருந்தான்.

அவனது மனநிலையை எடை போட்டுவிட்ட சாமர்த்தியத்தில் பேச்சு தொடர்ந்தது.

"பொண்ணு மாநிறம். கொஞ்சம் பாரி சரீரம். நாளைக்கே உங்க வீட்டுக்கு வந்து வேலை செய்ய ஆரம்பிச்சால் இளைச்சுப் போயிடுவாள். ஆனால், ரொம்ப அடக்கமான பொண்ணு. குனிஞ்ச தலை நிமிராது. ஸ்கூல் ஃபைனல்தான் படிச்சிருக்காள். வீட்டுக் காரியமெல்லாம் ரொம்ப நன்னா செய்வாள். கைவேலையெல்லாம் வரும். பாட்டுத்தான் நீங்க கேட்டேளே...நான் சொல்ல வேணாம். ஆக, மொத்தத்துல குடும்பப் பாங்கான பொண்ணு..."

"அதுதான் எனக்கு வேணும்" என்றான் ரமணன் சட்டென்று.

"குடும்பப்பாங்கா வீட்டோடு இருந்து கவனிச்சுண்டால் போறும். அதிக அழகு தேவையில்லை.

அழகோடு ஒரு தரம் பட்டதே போறும்...உங்களுக்குத் தெரியாதது இல்லை. பார்யா ரூபவதி சத்ரு...''

''அப்படின்னா, உங்களுக்குப் பொண்ணைப் பிடிச்சிருக்குன்னு சொல்லுங்கோ...''

''ம்...''

''அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாணத்தை வச்சுக்கச் சொல்லிடட்டுமா?''

''ம்...''

''இன்னும் ஒரு விஷயம். இவாளாலே அதிகமா எதுவும்செய்து தரமுடியாது. சாதாரண குடும்பம்தான்...''

''ஒண்ணும் வேணாம். டீஸண்டா கல்யாணம் பண்ணிக் கொடுத்தால் போறும்.''

''அப்படின்னால் ஜூலை ஏழு, பதினொன்னு, பதினாலு மூணு மூகூர்த்த நாள் இருக்கு...எது சௌகரியப் படுகிறதோ அதை வச்சுடறேன்.''

''சரி.''

ஸ்கூட்டரில் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, என்ன தோன்றியதோ ஒருவினாடி ரமணன் திரும்பி சாயி ராமைப் பார்த்துவிட்டுப் பின் சொன்னான்:

''இப்போ பார்த்தாயே ஒரு ஆண்ட்டி அவதான் இனி மேல் உனக்கு அம்மாவாக வரப்போகிறாள்.''

''சரி...ப்...பா...''—அந்த ஒரு பதில் நிறைய சந்தர்ப் பங்களில் துணையாகநின்றாலும், அப்போது அவனுக்குள் பீரிட்ட துக்கம் கட்டுப் படுத்த முடியாததாகி கன்னங் களில் கோடாக வழியலாயிற்று...

## 11

அப்பாவுடன் கூடப்போய் அவருக்காகப் பெண் பார்த்து விட்டு வந்ததிலிருந்து இன்னமும் துக்கப்பட்டு



ஒடுங்கிப் போனான் சாயிராம். காரணமற்றதோர் பயம் அவனைப் பற்றிக் கொண்டிருந்தது. பருமனான அந்தக் கறுப்புப் பெண் இவனைத் துரத்தித் துரத்தி அடிக்க வருகிற கனவுகளாகக் கண்டு மருண்டு போயிருந்தான். அவன் படித்த அமர்சித்ர கதா புத்தகங்களிலும், கேள்விப் பட்ட கதைகளிலும் வந்த இரண்டாவது அம்மாக்கள் இதுவரை நல்லவர்களாக இருந்ததில்லை. அதனால் வேறு இவனுக்குள் இனம் புரியாத கலவரம் ஒன்று ஏற் பட்டிருந்தது. அந்தப் பருமனான கறுப்புப் பெண் நல்ல வளாக இருப்பாள் என்கிற நம்பிக்கையும் தோன்ற வில்லை. முகமும், கண்களும் சாந்தமாக இவனைப் பார்க்கவில்லை பார்க்கிறபோதே அரவணைக்கிற அன்பு தெரியவில்லை. 'நீதானா அந்தப் பையன்?' என்கிற கேள்வி தெரிந்தது. அந்தக் கேள்வியினூடே மெல்லிய திரையாக ஒரு வெறுப்பும் அலட்சியமும் தொக்கி நிற்ப தாக உணர்ந்த இவனுக்கும், முதல் பார்வையிலேயே அவளைப் பிடிக்காமற் போயிருந்தது.

ஆனால், அவனது உணர்வுகள் எதையும் அறியாத ரமணன், வீட்டிற்கு வந்ததும் மெதுவாகக் கேட்டான்:

''ஏண்டா சாயி...போய்ப் பார்த்து விட்டு வந்த அந்தப் புது அம்மாவை உனக்குப் பிடிச்சிருக்காடா?''

அப்போதுதான் அவள் தனக்கு அம்மாவாக வரப் போகிறவள் என்பதே இவனுக்குப் பிடிபட்டது. அதுவரை அப்பாவோடு, போய், மனசு ஒட்டாமல் உட்கார்ந்து, வெற்றுப் பார்வையாய் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தானே தவிர இதெல்லாம் எதற்கு என்பது புரிய வில்லை. அப்பா கேட்ட கேள்வியில் காரணம் புரிய திடுக்கிட்டுப் போனான்.

'புது அம்மாவா...? அவளா...? கறுப்பாய், குண்டாய் இருக்கிற அவளா?'

அடிவயிற்றில் பகீரென்றது.

நம் அம்மா எப்படி இருந்தாள்...அந்த உயரமும், நிறமும், சாந்தமான கண்களும், அன்பு ததும்பும் பார்வை

யும், கூப்பிடுவதிலேயே மனசின் வாஞ்சை முழுவதையும் வெளிப்படுத்தும் குரலும்...

எத்தனை அழகு நம் அம்மா...

முகத்தில் குத்துவிளக்கை ஏற்றி வைத்த பளிச்சிடலுடன் புன்சிரிப்பு மாறாமல் வளைய வருவாளே, அந்த இடத்தில் அம்மாவிற்குப் பதிலாக இவளா?

இந்தக் கறுப்ப முகமா?

மெல்ல அசைகிற உடம்பா?

கோபமும், வெறுப்புமாகப் பார்க்கிற பார்வையா?

இவளா புது அம்மா...?

அவனிடமிருந்து பதில் வாரமற் போகவே ரமணன் சற்று அதட்டலாகக் கேட்டான்.

"என்னடா, கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் பேசாமல் இருக்கே? இந்த அம்மாவை உனக்குப் பிடிச்சிருக்கா, இல்லையா?"

"இல்லை' என்று தலையாட்ட முடியுமா என்று நினைத்துக் கொண்டே, "ம்...பிடிச்சிருக்கப்பா..." என்றான்.

அதைக் கேட்டதும் ரமணனின் முகம் மலர்ந்தது. உதட்டில் சிரிப்பு எட்டிப் பார்க்க சாயிராம் சின்னப் பையன் என்பதை மறந்துபோனவனாகப் பேசத் தொடங்கினான்:

"இவ அவளை மாதிரி அழகில்லை. வெள்ளைத் தோலைப் போட்டுண்டு மினுக்கலை. உயரமும், வாளிப்பான உடம்புமாக வளைய வரலை. இதையெல்லாம் வச்சிண்டு எவன் கிடைப்பான்னு காத்துண்டுகிடக்கலை... கொஞ்சம் கறுப்புதான். பாரி உடம்புதான். அத்தனையா லட்சணம் இல்லை. இதெல்லாம் இல்லாத காரணத்துனாலயே அவ அலைஞ்ச மாதிரி இவ அலையமாட்டா... எவன் வீட்டுக்கு வந்தாலும் சிரிச்சு மயக்கமாட்டா— அதனாலேயே இந்த அழகுபோறும்னு முடிவு பண்ணிட்டேன். பார்யா ரூபவதி சத்ரு...அதனால் நீயும் அழகான



பொண்ணாகப் பார்த்து கல்யாணம் பண்ணிண்டு என்னை மாதிரி அவஸ்தைப்படாதே...தெரியறதா? சுமாரா இருந்தால் போறும். வீட்டுக்குள்ளேயிருந்து குடும்பம் நடத்தறவளா இருக்கணும். என்ன புரியறதா...?"

புரியாமற் போனாலும் புரிந்தமாதிரி இவன் தலையாட்டினான்.

"அதனால்தான், அவளைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதம்னு சொல்லிட்டு வந்துட்டேன் கூடிய சீக்கிரம் நான் பார்க்கிறேன்னு தரகர் மாமா சொல்லி இருக்கார். இன்னும் பத்துப் பதினைஞ்சு நாள்ல கல்யாணம் முடிஞ்சுடும். அதற்கப்புறம் கவலையில்லே...சாப்பாட்டிற்கும், காப்பிக்கும் நாம் இப்படிக் கஷ்டப்பட வேண்டாம்..."

சாயிராம் மௌனித்துப் பேசாமல் நின்றிருக்க, திடீரென்று ஞாபகம் வந்த மாதிரி ரமணன் சொன்னான்:

"இப்போ வரப்போற இந்தம்மா கிட்ட நீ நல்லபடியா நடந்துக்கணும்...என்ன சாயிராம்?"

"சரிப்பா..."

"முதல்ல இருந்தாளே... அவகிட்ட நடந்த அதே மாதிரி இவகிட்டேயும் நடந்துக்கணும்."

"சரி..."

"ரெண்டாவது அம்மாதானேன்னு எந்த வகையிலும் நீ இவளை அலட்சியப் படுத்தக்கூடாது..."

அதற்கும் 'சரி' என்று தலையாட்டி விட்டு உள்ளே வந்தான் சாயிராம். தன்னிடம் சொன்ன மாதிரி இதையெல்லாம் அப்பா அந்தக் கறுப்புப் பெண்ணிடமும் சொல்வாரா என்ற கேள்வி எழும்பிற்று. 'பாவம் சாயிராம்... அவன்கிட்டே நீ அன்பாக நடக்கணும். உன் பையன் மாதிரி நடத்தணும், ரெண்டாவது அம்மான்னு கொடுமைப் படுத்தக் கூடாது...என்ன?"

'சொல்வாரா அப்பா? தெரியமாகச் சொல்வாரா?'

—கேள்விக்குறியும், சந்தேகமுமே மீதமாய் நிற்க, தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தான்.

அடுத்த இரண்டு மூன்று நாட்களாக ரமணன் ஆபீஸிற்குப் போகவில்லை. அந்தப் பெண்ணின் அப்பா—அம்மாவும், நூறு ரூபாய் மாமாவும் வந்திருந்தார்கள். முன் அறையில் உட்கார்ந்து எதேதோ பேசினார்கள். அப்பா எல்லாவற்றிற்கும் தலையசைத்த மாதிரி இவனுக்குப்பட்டது. பின் உள்ளே எழுந்து வந்து இரும்பு அலமாரியிலிருந்து கத்தைக் கத்தையாகப் பணம் கொண்டு போய் அவர்களிடம் கொடுத்தார்:

''இதுல பத்தாயிரம் ரூபாய் வச்சிருக்கேன் கூரைப் புடவையும், மாங்கல்யமும் போக மீதியை உங்கசெலவுக்கு வச்சுக்கோங்க...கல்யாணத்தைச் சின்னதா ஏதாவது கோவில்ல வச்சுக்கலாம். எனக்கு சாயிராமைத் தவிர வேறு மனுஷா கிடையாது. ஆபீஸ் பிரெண்ட்ஸைக்கூட நான் கூப்பிடப் போறதில்லை. அதேமாதிரி நீங்களும் ரொம்ப முக்கியமானவர்களைத் தவிர வேறு யாரையும் கூப்பிட வேணாம்...''

''சரி, மாப்பிள்ளை...எப்படிப் பார்த்தாலும்இன்னும் ஒரு பத்தாயிரம் இல்லாமல் நடக்காதுபோல இருக்கு என் கையில் எட்டாயிரம் ரூபாய் சேர்த்து வச்சிருக்கேன். இன்னும் ஒரு இரண்டாயிரததுக்கு எங்க போறதுன்னு தெரியலை...'' —பெண்ணின் அப்பா கவலைப்பட, ரமணன் சொன்னான்:

''வெறும் ரெண்டாயிரம்தான் தேவைன்னால் அதையும் நானே நாளைக்குத் தந்துடறேன். இதற்காகக் கடன் வாங்க வேண்டாம்...''

வந்தவர் தயங்கினார்.

''எல்லாத்தையும் நீங்களே போட்டு செய்யறதை நினைச்சால் கஷ்டமாக இருக்கு...''

''பரவாயில்லை. இந்த ரெண்டாயிரம் ஒரு பெரிய விஷயமில்லை.'' என்ற ரமணன் தொடர்ந்தான்:



''அடுத்த மாதம் ஏழாம் தேதி கல்யாணத்திற்கு நாள் குறிச்சிருக்கீங்க...இன்னும் பத்துநாள் கூட இல்லை. இதற்குள் இடம் பார்த்து, பத்திரிகை அடித்து எல்லாம் முடியுமா...?''

''கையில் பணமிருந்தால் எதையும் நிமிஷமாகப் பண்ணிவிடலாம்! இங்கே வடபழனிக் கோவில்ல முடிச்சுக்கலாம் மாப்பிள்ளே...என்ன சொல்றீங்க?''

''ம்... செய்யுங்க. எந்தக் கோவிலானாலும் எனக்கு ஒண்ணுதான். நானும் சாயியும் முதல்நாள் சாயந்திரம் ஸ்கூட்டர்லயே வந்து இறங்கி விடுவோம். வேற கவலை எங்களுக்கு இல்லை...''

''சரி...அப்போ நாங்க புறப்படறோம்.''

''நாளைக்கு வந்து அந்த இரண்டாயிரத்தையும் வாங்கிண்டு போங்க...''

''சரி, வறோம்.''

மறுநாளைக்கு மறுநாள் மீண்டும் வந்தார்கள். வடபழனிக் கோவிலின் கல்யாண மண்டபத்தையே ஏற்பாடு பண்ணி விட்டதாகச் சொன்னார்கள்... பத்திரிகை எழுதிக் கொண்டு வந்து காட்டினார்கள்.

''இன்னிக்குக் கொடுத்தால் நாளைகாலை பத்திரிகையெல்லாம் அச்சடித்துத் தருவதாகச் சொல்லிருக்கான் மாப்பிள்ளே...உங்களுக்குஎத்தனை பத்திரிகை வேணும்?''

''எனக்கு எதற்குப் பத்திரிகை...யார் இருக்காங்க கூப்பிட?''

''என்ன மாப்பிள்ளை இது...ஆபீஸ் சிநேகிதங்களுக்குக் கூடவா தராமல் இருக்கப் போறீங்க?''

''எதுக்கு அவங்களுக்குத் தரணும்...அவங்க எல்லாம் உமாவோட கட்சி. இப்போ கல்யாணம் பண்ணிக்கிறது தெரிந்தால், இன்னமும் அவள்மேல் அனுதாபப்பட்டு

என்மீது கோபப்படுவாங்க...வேண்டாம். நான் யாரையும் கூப்பிடப் போறதில்லை. பத்திரிகை எதுவும் வேணாம்.''

''அக்கம் பக்கத்து மனுஷாளையாவது கூப்பிட வேணாமா?''

''ப்சூ...வேணாம்; எனக்கு யாரையும் பிடிக்கல்லே.''

''பிள்ளையை மட்டும்தான் பிடிச்சிருக்காக்கும்...!''— பெண்ணின் தகப்பனார் விளையாட்டிற்குச் சொன்னாரோ அல்லது வினையாகச் சொன்னாரோ, ரமணனை மிக ஆழமாகத் தாக்கிற்று.

அதைவிட ஆழமாய் உள்ளே இருந்த சாயிராமை அந்த வார்த்தைகள் நெருட, அவன் யோசித்தான். கல்யாணத்திற்கு இன்னும் ஒருவாரமே மீதமிருப்பதை உணர்ந்தான். அப்பா யாரையும் கூப்பிடப் போவதில்லை என்கிற பட்சத்தில் கிருஷ்ணசாமி மாமாவையும் கூப்பிட மாட்டார். அவருக்கு இந்தக் கல்யாண விஷயமே தெரிந்திருக்காது. அப்பா ஒரு பருமனான கறுப்புப் பெண்ணைப் பார்த்துவிட்டு வந்த விஷயம். நிறையப் பணம் கொடுத்த விஷயம். வடபழனி கோவிலில் ஏழாம் தேதி கல்யாணம் நடக்கப் போகிற விஷயம்...

கிருஷ்ணசாமி மாமாவிற்கு மட்டுமில்லை, அம்மாவிற்கும் தெரிந்திருக்காது, எப்படியாது அம்மாவிற்கும் அவருக்கும் தெரியப்படுத்திவிட வேண்டும் என்று நினைத்தான். ஆனால் மார்க்கம் புரியவில்லை. ஒரு வாரமாயிற்று அப்பா ஆபீஸ் போய். எந்தநேரமும் வீட்டில் தான் இருக்கிறார். அதனால் இவனால் கிருஷ்ணசாமி மாமாவைப் போய்ப் பார்க்க முடியவில்லை. எங்கே கிளம்பினாலும் அப்பாவிற்குத் தெரியாமல் படியிறங்க முடியாது.

'எங்கேடா போறே...?' என்ற கேள்வி வரும்' சட்டென்று பொய்சொல்ல முடியாமல் மாட்டிக் கொள்ள நேரிடும். அவரும் கூட வருகிறேன் என்று கிளம்பி விட்டால் இன்னமும் கஷ்டமாகிவிடும்



என்ன செய்வது?

யோசித்தபோது சட்டென்று ஒரு எண்ணம் உதயமாயிற்று. 'ஸ்கூல் போவதாகச் சொல்லிவிட்டு நேராக கிருஷ்ணசாமி மாமாவைப் போய்ப் பார்த்தால் என்ன...?'

அதைத் தவிர வேறுவழி இல்லாததால், அதைச் செயலாக்க முடிவு செய்து படபடக்கிற மனதுடன் ஆயத்தமானான் சாயிராம்...

## 12

புது அம்மாவைப் பற்றின கவலைகளும், பயங்களும் சாயிராமின் மனதைச் சூழ்ந்து கொண்டன. அப்பாவின் உற்சாகமும், சந்தோஷமும் இவனுக்குள் மெலிதாய் சந்தேகத்தை ஏற்படுத்தியது. 'இந்த இரண்டாவது அம்மா வந்தபின் அப்பா இன்னமும் தன்னை அடித்துத் திட்டத் தொடங்குவாரோ? ஒருவேளை, இரண்டாவது அம்மாவிற்குத் தன்னைப் பிடிக்காமற்போய் அதன்காரணமாக அப்பா தன்னை வீட்டைவிட்டுத் துரத்தி விட்டால் என்ன செய்வது...?'

—யோசித்து. சோர்ந்துபோய் உடனடியாக கிருஷ்ணசாமி மாமாவிடம் போக முடிவு செய்தான். அவரிடம் கேட்டு உமா அம்மாவிடம் தன்னைக் கொண்டுபோய் விட்டுவிடச் சொல்ல வேண்டும், 'அந்த அம்மா தன்னைத் திட்டமாட்டாள். அடிக்கமாட்டாள், செல்லமாக வைத்துக் கொள்வாள். மடியில் உட்கார்த்தி வைத்துக்கொண்டு கொஞ்சுவாள். அதனால் எப்படியாவது அந்த அம்மாவிடம் போய்விட வேண்டும். கெஞ்சிக் கேட்டுத் தன்னை அவளிடம் வைத்து கொள்ளும்படி செய்துவிட வேண்டும். அப்பா மாதிரி அம்மா இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டாள். அதனால் இரண்டாவது அப்பா பற்றின பயமும், சந்தேகமும் தனக்கு ஏற்படாது...'

—இந்தத் தீர்மானம் அவனுக்குள் திடமாக இருந்ததால், எப்படியும் கிருஷ்ணசாமி மாமா மூலம் உமாவிடம் போய்ச் சேர்ந்து விடுகிற முடிவுடன் அன்று காலை பள்ளிக்கூடத்திற்குப் புறப்படுகிற மாதிரி புறப்பட்டான். புத்தகப்பை, டிபன் டப்பா இரண்டையும் எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தபோது, அப்பா அந்த நூறு ரூபாய் மாமாவிடம் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துத் தயங்கி நின்றான். அதைக் கவனித்த ரமணன், ''என்னடா...?'' என்று அவனை ஏறிட்டான்.

''நான் ஸ்கூலுக்குப் போயிட்டு வரேம்பா...''

''கல்யாணத்துக்கு இன்னும் ரெண்டு நாள்கூட இல்லை. உனக்கு டிரஸ் எடுக்கணும். இன்னிக்கு லீவு போட்டுடேன். கடைக்குப் போயிட்டு வரலாம்...''

சாயிராம் தன் எண்ணங்களுக்கு மாறாக ஏதும் நடந்துவிடப் போகிறதே என்ற தவிப்பில் சட்டென்று சொன்னான்:

''இன்னிக்கு மூணு டெஸ்ட் இருக்குப்பா... நாளையிலிருந்து லீவு போட்டால் பரவாயில்லை. இன்னிக்கு மட்டும் போயிட்டு வந்துடறேம்ப்பா...''

ரமணன் யோசித்து சரி சொல்ல, இவன் விருட்டென்று வெளியில் வந்தான். அப்பா மனதை மாற்றிக் கொண்டு தன்னைப் பின்தொடர்ந்து வந்து, 'இன்னிக்கு ஸ்கூல் போக வேணாம். வா, கடைக்கே போய் வந்துவிடலாம்...' என்று சொல்லிவிடப் போகிற பயத்தில், பத்தடிக்கு ஒருமுறை திரும்பிப் பார்த்துக் கொண்டே நடையை வேகமாக எட்டிப் போட்டு கிருஷ்ணசாமி மாமாவின் வீட்டை அடைந்தான். அழைப்புமணியை அழுத்தின போது அவனுக்கு மார்பு படபடத்தது. மூச்சிரைத்தது. நெற்றியில் வியர்வை பொடித்துக் கிடந்தது. சட்டையில் முகத்தைத் துடைத்து நிதானப்படுத்திக் கொள்ள முயற்சித்த போது கிருஷ்ணசாமி வந்து கதவைத் திறந்தார். கண்ணகல அவனைப் பார்த்தார்.



''அட... வா சாயி... என்ன, உன்னைக் கண்ணுலையே காணோம்?''

அவன் அதைக் கவனிக்காதவனாய் சடாரென்று உள்ளே வந்து சுவர் ஓரம்-புத்தகப் பையையும், டிபன் டப்பாவையும் வைத்துவிட்டு நிமிர்ந்தான். கிருஷ்ணசாமியின் நிதானமான முகம் துக்கத்தையும், அழுகையையும் கிளறிவிட சட்டென்று முகத்தை மூடிக்கொண்டு கதறத் தொடங்கினான். அந்தக் குமுறலை எதிர்ப்பார்க்காத கிருஷ்ணசாமி அவனருகில் போய் ஆதரவாகத் தோளில் கைவைத்துக் கேட்டார்:

''என்ன சாயி... ஏன் இப்படி அழறே? என்ன ஆச்சு...?''

அவன் பதில் சொல்வதற்குமுன் பின்கட்டிலிருந்து கூடத்திற்கு வந்த கிருஷ்ணசாமியின் மனைவி, சாயிராமின் அழுகையைப் பார்த்து அப்படியே நின்றாள்.

''என்னன்னா... எதுக்கு இப்படி அழறான் குழந்தை?''

''அதைத்தான்டி நானும் கேட்டுண்டிருக்கேன். என்ன என்ன சாயி... என்னப்பா நடந்தது? அந்த ராட்சசன் திருப்ப உன்னை அடிச்சானா?''

''ம்ஹூம்... இல்லே மாமா...'' என்று தடுமாறியபடி பேசத் தொடங்கினான் சாயிராம்.

''அம்மா மாமா...ரெண்டாவது அம்...மா...''

''ரெண்டாவது அம்மாவா...? என்ன சொல்றே சாயிராம்?''

''ஆமாம் மாமா... அப்பா என்னையும் அழைச்சிண்டு போய் அந்தப் பெண்ணைப் பார்த்தார். கறுப்பா குண்டா இருக்கா... மங்களம்னு பேராம். இன்னும் ரெண்டுநாள்ல வடபழனி கோவில்ல கல்யாணம்...''

பேச்சு வராமல் சில வினாடிகள் மௌனமாக நின்றிருந்தார் கிருஷ்ணசாமி. பின்,

''நிஜமாவா சொல்றே சாயி?'' என்று கேட்டார்.

'நான் ஏன்மாமா பொய்சொல்லப் போறேன்...?'' என்று அவன் மறுபடியும் அழ ஆரம்பிக்க, கிருஷ்ணசாமி அவன் முதுகைத் தடவியபடி, ''அதுக்கு நீ ஏண்டா அழறே?'' என்றார்.

''எனக்குப் பயமா இருக்கு மாமா...'' என்று நீளநெடும் விம்மலோடு வார்த்தைகள் தெறித்தன அவனிடமிருந்து.

"என்ன பயம்?"

''அந்த அம்மாவைப் பார்த்தாலே பயமா இருக்கு. என்னைப் பார்க்குறபோது முறைக்கிற மாதிரி தோணுது... அப்பாவேற என்னைக் கூப்பிட்டு நான் இந்த அம்மாகிட்ட பணிவா, அடக்கமா நடந்துக்கணும்னு கட்டளை இடறார். எனக்குப் பிடிக்கலை மாமா... அவ என்னை எங்கம்மா மாதிரி வச்சுப்பாள்னு தோணலை மாமா...துருவனுக்கு வந்த மாதிரி இருப்பாள்னு தோண்றது...''

"அது யார் துருவன்? உன் கிளாஸ் பையனா?''

"ஐயோ துருவன் தெரியாது... நட்சத்திரமானானே அவன் மாமா..."

"ஓ...அந்தத் துருவனைச் சொல்றியா? அதுகதைடா..."

''ம்ஹூம்... கதையில்லே நிஜம். அம்மா எனக்கு அந்த நட்சத்திரத்தைக் காட்டி இருக்கா. பளிச்சினு, பிரகாசமா இருக்கும்...''

''சரி. நிஜம்னே வச்சுக்கோ... எல்லா ரெண்டாவது அம்மாவும் பொல்லாதவளா இருக்க மாட்டாப்பா...''

நான் படிக்கிற 'அமர் சித்ர கதா'விலே வர்ற அத்தனை ரெண்டாவது அம்மாவும் பொல்லாததனாத் தான இருக்கா... அதுவும் அப்பா கல்யாணம் பண்ணிக்கப் போற இவ என்னைப் பார்த்து சிரிக்கக்கூட இல்லை மாமா. கிட்டக் கூப்பிட்டுப் பேசலை. அவனுடைய அம்மா— அப்பா ரெண்டு பேரும் வீட்டுக்கு வறானே...



அப்பாகிட்டே சிரிச்சுப் பேசறா, என்னைப் பார்த்தால் மூஞ்சியை உம்முன்னு வச்சுக்கறா...?"

அவர் ஓர் ஆழமான பெருமூச்சுடன் மௌனமாய் கேட்டுக் கொண்டிருக்க, சாயிராம் அழுகை அடங்கின வனாக மேலே தொடர்ந்தான்:

''என்னைக் கூப்பிட்டு அந்த ரெண்டாவது அம்மா வுக்கு மரியாதையா நடக்கணும்னு சொன்ன மாதிரி அப்பா அவகிட்ட சொல்லலை மாமா...சொல்லவும் மாட்டார்னு தோணறது. அவ வந்தப்புறம் அப்பா என்னை இன்னும் அடிப்பாரோன்னு பயமா இருக்கு மாமா... அவளுக்கு என்னைப் பிடிக்கலேன்னா வீட்டை விட்டு விரட்டினால் நான் எங்கே போவேன் மாமா... எனக்கு யார் இருக்கா மாமா?''

அழுகை துருத்திக் கொண்டுவர அவன் உதடு அசங்கின போது, அவர் அவனை அருகில் இழுத்துத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு கண்கலங்கச் சொன்னார்:

''ஏன் அப்படி சொல்றே சாயி? நான் இல்லே...இதோ மாமி இல்லே... நாங்க உன்னை விட்டுடுவோம்னா நினைக்கறே? அப்படி ஏதாவது ஆனால் இங்க வாடப்பா... இதை உன் வீடுன்னு நினைச்சுக்க...''

அதைக் கேட்டு நெகிழ்ந்து போய் சாயிராம அவரது கையை இறுகப் பற்றிக் கொண்டான்.

''மாமா, நீங்க இப்படி சொல்றது சந்தோஷமா இருக்கு...ஆனால்...ஆனால்...''

''ஆனால் என்னடா...? பெரிய மனுஷனாட்டம் பீடிகை போடறே?''

''இல்லே மாமா...சொன்னால் நீங்க தப்பா நினைச் சுக்கக் கூடாது...''

''சொல்லுடா...என்ன விஷயம்?''

''என்னை அம்மாகிட்ட கொண்டு போய் விட்டுடுங்க மாமா...''

''அம்மாகிட்டேயா?''

''ஆமாம் மாமா...''

''உமா கிட்டேயா சொல்றே?''

''ம்...''

''எம்பா...அதுக்கு உங்கப்பன் சம்மதிப்பானா? அங்க போறதுக்கே அடியும், உதையும், கிடைக்கிறதே...''

''அப்பாகிட்ட சொல்ல வேணாம் மாமா...அவருக்குத் தெரியாமல் போயிடலாம் மாமா...''

அவர் அவனது குழந்தைத்தனமான பேச்சைக் கேட்டு சிரித்துக் கொண்டாரே தவிர, பதில்சொல்லவில்லை. அதன் சாத்திய—அசாத்தியங்களை ஆராய்ந்தபோது, சாயிராம் அவர் கைகள் இரண்டையும் பற்றியவாறு கெஞ்சத் தொடங்கினான்:

''ப்ளீஸ் மாமா...என்னை அம்மாகிட்டே கொண்டு போய் விட்டுடுங்க மாமா...அம்மா அடிக்க மாட்டாள். திட்ட மாட்டாள். அன்னிக்கி நீங்க என்னை அங்க விட்டுட்டு வந்தப்புறம் அம்மா எனக்குக் கைல வத்தக் குழம்பு சாதம் பிசைஞ்சுப் போட்டா மாமா...மடியில் உட்கார்த்தி வச்சுண்டு கொஞ்சினா மாமா...''

கிருஷ்ணசாமி நிமிர்ந்து அவன் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தார்.

''அதையெல்லாம் நான் இல்லைன்னு சொல்லலை சாயிராம்... இப்போ பிரச்சினை உங்கப்பாதானே தவிர, உங்கம்மா இல்லை. உன்னை வச்சுக்க மாட்டேன்னு அவ ஒரு போதும் சொல்ல மாட்டா...நீ வரேன்னால் ரொம்ப சந்தோசப்படுவா. ஆனால் உங்கப்பன் விட மாட்டானேப்பா...கோர்ட் மூலமா உன்னை அவகிட்டே யிருந்து பிரிச்சவன் இப்போ சும்மா விட்டுடுவான்னா நினைக்கிறே?''



''இப்போ அவர்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறாரே மாமா...அந்தம்மா வந்தால் என்னைப்பத்தி அதிகம் கவலைப் பட மாட்டார்.''

''அப்படியா சொல்றே...?'' என்று முகவாவையை வருடிக்கொண்டே யோசித்தவர் சட்டென்று மனைவியைத் திரும்பிப் பார்த்தார்.

''நீ என்னடி சொல்றே?''

''நான் சொல்ல என்னன்னா இருக்கு? குழந்தை சொல்றபடி செய்யறதுதான் சரியாப் படறது. இனிமேல் ரமணனுக்கு இவன்மேல் அக்கறை இருக்கும்னு தோணலை... ஒரு பெண்டாட்டி வந்தப்புறம் இந்த பிள்ளை இடைஞ்சல்னு நினைச்சாலும் நினைப்பான்.''

''என்னடி இவ...'' என்றார் கிருஷ்ணசாமி கோபமாக. ''இவனே பயந்து போய் வந்திருக்கான்...ஆறுதல் சொல்லாமல் தூண்டி விடற மாதிரி இப்படியா பேசறது?''

''நான் என்னா தூண்டிவிடறேன்? இவன் என்ன இன்னும் குழந்தைன்னா நினைச்சுண்டிருக்கேள்? இல்லைன்னா...இவன் வயசுக்கு மற்ற குழந்தைகள் அனுபவிக்காததை யெல்லாம் இவன் அனுபவிச்சுட்டான். அந்தக் கஷ்டத்தில் பட்டமுதிர்ச்சியில் பேசறான்...இது தான் நடக்கும்னு தெரிஞ்சு சொல்றான். ஏற்கெனவே பாசமில்லாத அப்பா. அவன் பண்ணிக்கப் போற ரெண்டாவது பெண்டாட்டி கிட்டயா பாசத்தை எதிர் பார்க்க முடியும்? அதுவும் அவனுக்குன்னு ஒரு குழந்தை பிறந்துட்டால் என்ன ஆகும்னு நினைச்சுப் பாருங்க... எட்டு வயசுல எண்பது வயசுக கிழவன் மாதிரி யோசிச்சு வந்து சொல்றான். நீங்க தயங்கறீங்களே...அது நியாயமான்னா? முதல்ல குழந்தையை அவனோட அம்மாகிட்ட அழைச்சிண்டு போய் சேர்த்துட்டு மறுவேலை பாருங்க...''

''அதுசரி, நீ பொம்மனாட்டி...விஷயம் புரியாமல் சுலபமாகப் பேசிடறே. சட்டப்படி பார்த்தால் நீ பேசின மாதிரி சுலபமில்லே...''

''ஆமான்னா...சட்டப்படிதானே நம் தேசத்துல எல்லாம் நடக்கிறது? ஒரு பெண்டாட்டி இருக்கிறபோது ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்றது சட்டம்; ஆனால் எத்தனைபேர் பண்ணிக்கலை? எத்தனை சினிமா நடிகர்கள், பணக்காரர்கள்—ஏன், மந்திரி மார்கள்னாம்கூட பண்ணிக்கலையா? பணமிருந்தால் சட்டம் நாணல் மாதிரி வளைஞ்சி கொடுத்துடும்...''

''சரி...ஆனால் உமாகிட்டயோ, என்கிட்டயோ அந்தப் பணம்தானே இல்லை!''

''பரவாயில்லை. பகவான் மேல பாரத்தைப் போட்டுட்டு இவனை அழைச்சுண்டு போங்கோ...நல்ல காரியம். தடை எதுவும் வராது பாருங்கோ...''

''சரிடி...உமா இப்போ ஆபீசுக்குப் போயிருப் பாளே...''

''ஆபீஸ்லயே போய் பார்த்துட்டுப் பேசிட்டு வந்திடுங்கோ...''

''அப்படியா சொல்றே...?'' என்று கிருஷ்ணசாமி தயங்க, அதுவரை அவர்களைப் பேசவிட்டு மௌனமாக இருந்த சாயிராம் இப்போது குறுக்கிட்டான்:

''ஆமாம் மாமா...இப்போ போனால் தான் உண்டு. இதுவே ஸ்கூலுக்குப்போறதா அப்பாகிட்ட பொய் சொல்லிட்டு வந்திருக்கேன். திரும்பிப் போனால் மறுபடி வர்றது கஷ்டம். நாளையிலிருந்து ஸ்கூலுக்கு லீவு போடச் சொல்லி இருக்கார். கல்யாணம்வரை ஸ்கூல் போக முடியாது. அதனால் இன்னிக்கே போய்விடலாம் மாமா...ப்ளீஸ் மாமா...''

''ஆபீஸ்கே போகலாம்னு சொல்றியா சாயி?''

''ஆமாம் மாமா...''



''சரி வா, போகலாம். நாங்க கிளம்புகிறோம். எங்க ரெண்டு பேருக்கும் காப்பி கலந்து கொடேண்டி...''

''இதோ தரேன்.''

காப்பி குடித்து ஆட்டோ பிடித்து ஏறி அமர்ந்து உமா வின் ஆபீஸ் வாசலில் இறங்குகிறவரை சாயிராம் நம்பிக்கையோடு இருந்தான். ஆனால், ஆபீஸ் வாசலில் அன்று அம்மாவோடு தன்னையும் ஏற்றிக் கொண்டு வந்து பள்ளிக்கூட வாசலில் இறக்கிவிட்ட காரைப் பார்த்ததும், சட்டென்று அம்மாவின் அந்தக் கம்பெனி முதலாளி நினைவிற்கு வர—

உள்ளே நுழைய முடியாமல் கால்கள் தயங்க அப்படியே நின்று போனான் சாயிராம்...

## 13

''என்னடா சாயி, வாசல்லியே பிரமை பிடிச்ச மாதிரி நின்னுட்டே? என்ன விஷயம்...?'' — அவன் தன்னைப் பின்தொடர்வதாக நினைத்து அலுவலக வாயில்வரை போய் திரும்பிப் பார்த்த கிருஷ்ணசாமி அருகில் வந்து கேட்டார். சாயிராம் அவர் முகத்தைப் பயமும், கலவரமு மாக நிமிர்ந்து பார்த்துப் பேசினான்:

''மாமா...மாமா...இது இந்தக் கார்...''

''கார்தான். இதுக்கு என்ன வந்தது இப்போ?''

''இது அவரோட கார் மாமா...''

''யாரோட கார்டா?''

''அதான் மாமா, அன்னிக்கு வந்தாரே...''

''என்னிக்குடா வந்தார்?''

''நாம அம்மா வீட்டுக்குப் போனதுமே அன்னிக்கு வரலை...? அம்மாகூட ஆபீஸ் மானேஜர்னு அறிமுகப் படுத்தி வச்சாளே...என்னைக் கார்ல ஏற்றிண்டு போய் ஸ்கூல் வாசல்ல இறக்கி விட்டாளே...''

கிருஷ்ணசாமி யோசனையுடன் முக வாயைத் தடவிக் கொண்டார்.

''அப்படியா? அன்னிக்கு நான் இல்லையேப்பா... உன்னை உன் அம்மா கிட்டே விட்டுட்டுப் போயிடலை?''

''ஆமாம் மாமா...நீங்க வரலை. இந்த மேனேஜர் கார்ல தான் அம்மா என்னை இறக்கி விட்டாள்.''

''சரி அப்படியானால் மேனேஜரும் உனக்குத் தெரிந்தவராகத்தானே இருப்பார்...பின்னே ஏன் பயப்படறே?''

''வந்து...மாமா...மாமா...'' என்று தயங்கினான் சாயிராம்.

''என்னப்பா...பயப்படாமல் சொல்லுப்பா!''

''ஒண்ணுமில்லே மாமா..அன்னிக்கே அந்த மானேஜர் என்கிட்ட பேசலை. என்னை வெறுப்பாப் பார்த்த மாதிரி தோணித்து. அதுவுமில்லாம நான் அந்த வீட்டுக்குப் போனது அவருக்குப் பிடிக்கலை. அம்மாவைக் கோவிச்சுண்டார்.''

''அம்மாவைக் கோவிச்சுண்டாரா?''

அவர் நெற்றி சுருங்கி கண்கள் சிந்தனையில் ஆழ்ந்தன.

'பெற்றபிள்ளை வந்து பார்ப்பதற்காகக் கோபித்துக் கொள்ள வேண்டுமானால் எத்தனை உரிமை ஏற்பட்டிருக்க வேண்டும்? அத்தனை உரிமை வரவேண்டுமானால் எந்த அளவு பழகியிருக்க வேண்டும்? அத்தனைப் பழக்கமும் சாதாரணமானதாக இருக்குமா, அல்லது? அல்லது...?'

அந்தப் புதுப் பிரச்சினை அவரைப் புதிதாய் கவலைப்பட வைக்க, மீண்டும் சாயிராமை ஏறிட்டார்.

''ஏம்பா, என்னன்னு அவர் அம்மாவைக் கோவிச்சுண்டார்னு ஞாபகம் இருக்கா?''

''இருக்கு மாமா...இப்போ இந்தப் பையனை எதற்காக இங்கே வரவழைச்சே? புதுசாக ஏன் நீயா கஷ்டங்களை ஏற்படுத்திக்கறே? இதுவரை அனுபவிச்சதெல்லாம்



போறாதா? இனிமேலயாவது நிம்மதியா சந்தோஷமா இருக்க வேணாமான்னார், மாமா...''

''அப்படி...யா...?''

''அப்புறம், இவன் இங்கே வர்றது இதுவே கடைசித் தரமாக இருக்கட்டும்னும் சொன்னார்.''

''அதுக்கு உங்கம்மா என்ன பதில் சொன்னாள்?''

''ஒண்ணும் சொல்லலை மாமா...பேசாமல் இருந்தாள். நான்தான் அம்மாகிட்டே மன்னிப்புக் கேட்டுண்டேன்.''

''எதற்காக மன்னிப்புக் கேட்டே?''

''அங்கே போய் அம்மாவுக்குத் தொந்தரவு கொடுத்ததற்காக...என்னாலதானே அம்மாவுக்கும்-அந்த மானேஜர் மாமாவுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது?''

''மனஸ்தாபமே ஏற்பட்டதா?''

''மனஸ்தாபம்னால் சண்டை எதுவும் போட்டுக்கலை. ஆனால் எனக்கும் அவருக்கும் நடுவில் அம்மா ஒண்ணும் சொல்ல முடியாமல் கஷ்டப்பட்ட மாதிரித் தோணித்து.''

அதற்குப்பின் கிருஷ்ணசாமியின் யோசனை இன்னமும் தீவிரமாக, சில வினாடிகள் மௌனமாக அவரது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சாயிராம் வருத்தமும் கவலையுமாகக் கேட்டான்:

''ஏன் மாமா, என்னமோபோல இருக்கீங்க?''

''இல்லடா சாயி...எங்க போனாலும் நிழல் மாதிரி உன்னைத் துரத்திண்டே வருதேன்னு யோசிக்கறேன்...''

''எது மாமா?''

''எதுன்னு சொன்னால் உனக்குப் புரியப் போறது?''

''புரியும் மாமா, சொல்லுங்க.''

"அது கிடக்கட்டும். இப்போ நீ அம்மா கூடவே தங்கிடற முடிவோடு வந்திருக்கியே...அவங்களுக்குள் மனஸ்தாபம் இன்னும் அதிகமாயிடப் போறதேன்னு கவலையா இருக்கு."

"ஆகாது மாமா...அந்த மானேஜர் வீட்டுக்கு வர்றபோதெல்லாம் நான் அவர் கண்ணுல படாமல் உள்ளேயே இருப்பேன்."

"ம்...?" என்று அவனை மென்மையாய்ப் பார்த்த அவர் அவனது பதிலிலிருந்த குழந்தைத்தனத்தை உணர்ந்து கொண்டார்.

"ஏன் சாயி, அந்த மானேஜர் தினமும் வந்தால்...?"

"தினமும் - அந்த நேரத்துக்கு நான் உள்ளேயே இருப்பேன்."

'அது சரி. எப்போதும் அவர் கூடவே இருக்கிறவராக நேர்ந்து விட்டால்...' என்று கேட்க நினைத்து உள்ளுக்குள்ளேயே அடக்கிக் கொண்டார் கிருஷ்ணசாமி. எதுவானாலும் உமாவிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டு விடுகிற முடிவில்.

"வா சாயி...உள்ள போய் உங்கம்மாவைப் பார்த்துப் பேசலாம்" என்றார்.

"நீங்க போய் கேட்டுண்டு வாங்களேன் மாமா...நான் இங்கேயே இருக்கேன்."

"அட, போடா பைத்தியம்! யாரோ ஒரு மானேஜருக்கா இப்படி பயப்படறே? நாம் அவனைப் பார்க்கப் போகலையே... உங்கம்மாவைப் பார்க்கத்தானே போறோம்?" என்று அவனைத் தைரியப்படுத்தி உள்ளே அழைத்துக் கொண்டு போனாலும் அவருக்குள் நிறைய சந்தேகங்களும், கேள்விகளும் தோன்றின. உமாவிடமிருந்து வெளிப்படப் போகிற பதில்தான் இந்தப் பையனின் எதிர்காலம் அடங்கியிருப்பதாகப்பட்டது.



அவள் இவனைத் தன்னுடன் வைத்துக் கொள்ளச் சம்மதித்தால், இவன் புதிதாய்ப் பிறந்ததற்குச் சமம்...இன்னொரு பிறவி எடுத்த மாதிரி. புதுவாழ்வு கிடைத்த சந்தோஷம். ஆனால், ஒருவேளை அவளுக்கு இதில் சங்கடங்கள் ஏற்பட்டு இயலாமற் போனால்? அந்த மானேஜர் கூடாது என்று தடுத்து விட்டால்...?

அவர் யார் தடுப்பதற்கு...? அதைத் தெரிந்துகொண்டு விடுகிற முடிவுடனும்கூட கிருஷ்ணசாமி உமாவின் அறைக்குள் சாயிராமுடன் நுழைந்த போது, அவள் கண்கள் ஒரு வினாடி ஆச்சரியத்தில் அகன்று பின் கலவரமாகப் பார்ப்பதாகத் தோன்றியது.

"வாங்கோ..." என்ற குரலிலும் ஒருவிதத் தயக்கம் தெரிவதை உணர்ந்து கொண்டார் கிருஷ்ணசாமி.

"என்ன, ஆபீஸ்வரை தேடிண்டு வந்திருக்கேள்?"

"இந்த நேரத்துல நீ வீட்டில் இருக்க மாட்டாயேன்னுதான் இங்க வந்திருக்கோம்..."

"என்ன மாமா விஷயம்?"

"ஒண்ணுமில்லே..." என்றவர் "ஏம்மா இங்கே, இப்படியே நின்னுண்டேதான் பேசணுமா? நான் உட்கார்ந்து பேசறதில் உனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லையே?"

"ஏதாவது பர்சனல் மேட்டரா மாமா?"

"பின்னே எதுக்கு உன்னைத் தேடிண்டு வரப் போறோம்?"

"அப்படின்னா இங்கே வேணாம்...மாடியில் கான்பரன்ஸ் ஹால் இருக்கு. அங்க போயிடலாம். ஒரு நிமிஷம் இருங்கோ...மானேஜர்கிட்ட சொல்லிட்டு வந்துடறேன்.."

மாடி கான்பரன்ஸ் ஹால் பெரிதாக இருந்தது. வெளி வெளிச்சம் உள்ளே நுழையாதவாறு தடிமனாய் திரைச் சீலைகள். சுவர் ஓரமாய் நான்கு பக்கங்களிலும் சோபாக்

கள். குளிர்சாதன வசதி. உமா வரவழைத்த காப்பியைக் குடித்து விட்டு கிருஷ்ணசாமி கதை மாதிரி எல்லாவற்றையும் சொல்லி முடித்தபின்,

"உமா, இப்போ இந்தப் பையன் உன்கிட்டே தங்கிடற நோக்கத்துடன்தான் வந்திருக்கான். நீ சரின்னு தலையசைச்சால் இப்படியே இருந்துடுவான். மாற்றுத் துணிக்காகக்கூட வீட்டுக்குப் போகமாட்டான். அந்த அளவிற்கு ரமணனிடம் வெறுப்பும், பயமும் ஏற்பட்டுப் போயிருக்கு. அதைவிட அவன் இப்போ கல்யாணம் பண்ணிக்கப் போற பெண்ணிடம் அதிக பயம் வந்திருக்கு. அவா கூட ஒரு நிமிஷமும் இருக்க முடியாதுன்னு அபிப்பிராயப் படறான். அதனால் அவனை உன்கிட்டேயே விட்டுட்டுப் போகலாம்னு தான் அழைச்சுண்டு வந்திருக்கேன்..."

"என்... கி...ட்...டே யா...?" என்று தலைநிமிர்ந்த உமாவின் பார்வை அடிபட்ட சோகத்தைக் காட்டிற்று. நெஞ்சு விம்மித் தணிவது தெரிந்தது. சாயிராமைப் பார்க்கப் பயந்த மாதிரி அவன் பக்கம் திரும்பாமலே இருந்தாள்.

"ஏம்மா அதுல ஏதாவது சங்கடம் இருக்கா?"

"சங்கடம் ஒண்ணும் இல்லே. ஆனால், வந்து... வந்து..."

"என்னம்மா...எதுவானாலும் தயங்காமல் சொல்லு, உன் பதிலுக்கு ஏற்ற மாதிரித்தான் நாங்க முடிவெடுக்க முடியும்..."

"வந்து... வந்து மாமா... ஏற்கெனவே கோர்ட் மூலம் முடிவானதற்கப்புறம் நான் இப்போ இவனைக் கூட்டி வச்சுண்டால் இவனோட அப்பா சும்மா இருக்க மாட்டாரே மாமா..."

"இப்போ ரமணன் இருக்கிற நிலைமையில் இதைப் பெரிசுபடுத்த மாட்டான்னு நினைக்கிறேன்...போகட்டும்னு விட்டாலும் விட்டுடுவான்."



"அப்படியா...?" என்றபோது அவள் குரல் கம்மிற்று. தலை தழைந்து போயிற்று வார்த்தைகள் இடறலாய் வெளிவந்தன.

"ஆனால்... ஆனால்...என்னாலும் இந்த நிலைமையில் உடனே சரின்னு தலையாட்ட முடியலையே மாமா..."—அவள் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு அழத் துவங்க, பதறிப்போனார் கிருஷ்ணசாமி.

"என்னம்மா...எதுக்கு இப்போ அழறே? அப்படி என்ன நிலைமைன்னு நான் தெரிஞ்சுக்கலாமாம்மா?"

"நான்...நான்...இந்தக் கம்பெனி மானேஜரை கல்யாணம் பண்ணிக்கிறதாக முடிவு செய்துட்டேன் மாமா...அவர் தான் எனக்கு இப்போ இருக்கிற ஒரே ஆதரவு. அழகான ஒரு பெண் தனியா வாழ முடியாத உலகம் மாமா இது...அதுவும், கல்யாணம் பண்ணின்டவன் அவள் நடத்தையில் சந்தேகப் பட்டு விவாகரத்து செய்துட்டான்றது வெளி உலகத்துக்குத் தெரியவர்ற போது, அந்தப் பெண்ணின் நிலை இன்னும் மோசமாகிப் போறது. அவ எதற்கும் துணிந்தவ, எல்லாத்துக்கும் சம்மதிச்சிடுவான்னு நினைக்கிறாங்க. இந்த கொஞ்ச காலத்துக்குள் நான் நிறைய கஷ்டங்களை அனுபவிச்சாச்சு மாமா...எத்தனையோ சிங்கங்களையும், புலிகளையும் பார்த்தாச்சு, அவைகளின் விரட்டலிலிருந்து தப்பிச்சுக்கணும் என்றால், நான்தான் கூண்டுல அடைபடணும் என்கிற முடிவுக்கு வந்துட்டேன், பாதுகாப்பு இல்லாத வெட்டவெளியில் நின்னுண்டிருந்தால் இரையாகிப் போறதைத் தவிர வேறவழி இல்லை...என்னை நான் காப்பாற்றிக்கணுமே மாமா...ஒரு ஆம்பிளையான இவனுடைய அப்பாவுக்கு எத்தனையோ காரணங்களுக்காக இன்னொரு கல்யாணம் தேவையா இருக்கலாம். ஆனால் இன்னும் முப்பத்தியிரண்டு வயசுகூட முடியாத எனக்கு செக்யூரிட்டி தேவைப் படறதே மாமா—எங்கம்மா என்னை அழகாக வேறு பெற்றுத் தொலைச்சுட்டாளே... இந்த வெள்ளைத்தோலும் முகலட்சணமும் எமன் மாதிரி

என்னைத் துரத்திண்டு வர்றதே...எங்கே மாமா ஓட முடியும்? அதுவும் தனியா நிற்கிற ஒரு பொண்ணு எத்தனே தூரத்துக்கு ஓட முடியும்? இனிமேல் ஓட முடியாதுன்னு களைச்சுப் போய்த்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன்..."

அவன் கால் வினாடி நிறுத்தி பின் தொடர்ந்தான்:

"இந்த மானேஜர் பேரு விஸ்வேஸ்வரன். தெலுங்குப் பிராமணர். நாற்பத்திநாலு வயசாகிறது. அவருடைய கதையும் ஒரு பெரிய கதை. பொண்டாட்டி வியாதிக்காரி; அதுலேயும் இதயநோயாளி. கல்யாணமே கூடாதுன்னு டாக்டர் சொன்னதை மறைச்சுவச்சு கல்யாணம் பண்ணியிருக்கா. கல்யாணமான ராத்திரியே அவளுக்கு நெஞ்சுவலி வந்து இப்போ நாலு வருஷத்துக்கு முன்னாலதான் செத்துப் போயிருக்காள். இந்த கம்பெனி, வீடு கார், எல்லாத்தையும் இவரோட மாமனார், பொண்ணு செத்துப்போனதற்கு அப்புறம் இவர் மேலே மாற்றியிருக்கார். இத்தனை நாள்-சந்நியாசி—வாழ்க்கை வாழ்ந்தவர் என்னைச் சந்திச்சு என்னைப் பற்றி முழுசாய்த் தெரிஞ்சு புரிஞ்சுண்டதற்கு அப்புறம் தான் கல்யாண முடிவிற்கு வந்திருக்கார்..."

சிறிது நேரம் மௌனமாக இருந்தார் கிருஷ்ணசாமி, பின்பு ஒரு சின்னப் பெருமூச்சுடன் மெல்ல ஆரம்பித்தார்.

"ரொம்ப சந்தோஷம்மா...ஒரு பொண்ணு—அதுவும் உன்னை மாதிரி அழகான பொண்ணு தனியா வாழ முடியாதுன்றது எனக்கும் தெரியும். அதற்காக நீ எடுத்திருக்கிற இந்த முடிவு நல்ல முடிவுதான், உன் மானேஜரும் நல்லவர்னு சொல்றே...அப்படி இருக்கிறபோது இந்தப் பையனைக் கூட வச்சுக்கிறதை ஆட்சேபிக்க மாட்டார் இல்லையா?"

அவளிடமிருந்து அதற்குப் பதில் வருவதற்குள், உட்கார்ந்திருந்த இடத்தை விட்டுச் சடாரென்று எழுந்து கொண்டான் சாயிராம். முகமும், கண்களும் மிகுதியான துக்கத்திலும், அவமானத்திலும் சிவந்து கிடந்தன. நிறையவே அடிபட்டுப் போயிருப்பது புரிந்தது. அந்தச் சின்ன உதடுகள் நடுங்கித் துடிக்க அழுகையை அடக்கிக் கொண்டு வேகமாகப் பேச முயற்சித்தான்:



"வேணாம் மாமா...நான் இனிமேல் இங்க இருக்க மாட்டேன். எழுந்திருங்கம்மாமா...வீட்டுக்குப் போகலாம்."

"கொஞ்சம் பொறுமையா இரு சாயி..."

"ம்ஹூம்...இருக்க மாட்டேன். நீங்க வரலேன்னா நான் போறேன்..." என்றவன் சட்டென்று திரும்பி அம்மாவைப் பார்த்துச் சொன்னான்:

'அம்மா! கவலைப்படாதே...நான் உன்கிட்டே வர மாட்டேன். அன்னிக்கே அந்த மானேஜர் மாமாகிட்டே நான் வீட்டுக்கு வந்ததற்காக நீ திட்டு வாங்கினதை நான் இன்னும் மறக்கலே. அவருக்கு என்னைப் பிடிக்கலேன்றது எனக்குப் புரிஞ்சுபோச்சு, அதனால் நான் வந்து வேற உன்னைச் சங்கடப்படுத்த மாட்டேன். அதற்காக நீ பயப்படாதேம்மா...அந்த மானேஜர் மாமா அன்னிக்குச் சொன்ன மாதிரி இனிமேலாவது நீ சந்தோஷமா இருக்கணும்மா...வீணான தொல்லையெல்லாம் இழுத்துப் போட்டுக்கக் கூடாது. இனிமேல உன்னைப் பார்க்கக் கூட வரமாட்டேம்மா... இதுதான் நான் கடைசித் தரமா வர்றது. என்னால எந்த இடைஞ்சலும் வராதும்மா... தைரியமா இரும்மா... வரேம்மா... வாங்க மாமா போகலாம்..."

அதற்குமேல் வினாடி நேரம்கூட அவள் எதிரில் நிற்கப் பிடிக்காதவனாக அறையைவிட்டு வெளியில் ஓடி வந்தவனை கிருஷ்ணசாமி பின்தொடர்ந்தார்.

ஆட்டோவில் திரும்பி வந்தபோது அடக்க முடியாமல் அவர்மடியில் படுத்துக் குமுறினான் அவன்.

"நான் ஏன் மாமா பிறந்தேன்...எனக்கு மட்டும் ஏன் இத்தனைக் கஷ்டங்களும் வரணும்? நான் செத்துப் போய் எப்போ மாமா புதுசா பிறக்கப் போறேன்...அப்போதா

வது சந்தோஷமானவனா—கஷ்டங்கள் தெரியாதவனா இருப்பேன் இல்லையா மாமா?"

பதில் சொல்லத் தெரியாமல்—சொல்வதற்குப் பதில் இல்லாமல் கீழ் உதட்டை இறுக்கிக் கொண்டபோது, கிருஷ்ணசாமிக்கும் கண்களில் நீர் கட்டியிருந்தது.

## 14

. **கோ**விலினுள் கல்யாணம் நடந்து கொண்டிருந்தது. சாயிராம் வெளியில் வந்து நின்றுகொண்டிருந்தான். பார்வை இருபக்கக் கடைகளிலும் வெறுமையாய் விழுந்து கிடந்தது. உள்ளுக்குள் துக்கம் பொங்கிப் பொங்கி வந்து சமுத்திர அலை மாதிரி மீண்டும் உள்ளேயே அடங்கிப் போயிற்று. இப்ப துக்கத்தையும், வேதனையையும் வெளி வராமல் அடக்கிக் கொள்வதைத் தவிர, வேறுவழியில்லை. அழுவதினால் எந்த விதப் பயனும் ஏற்படப்போவதில்லை கண்ணீரைத் துடைக்கக்கூட யார் கையும் நீளப் போவ தில்லை. கிருஷ்ணசாமியின் கைமட்டும் நீளும். ஆனால் அதுவும் வெறும் அழுகையைத் துடைக்குமே தவிர, வேறு எதையும் செய்யாது; செய்ய முடியாது. பாவம், அவர்! அவரால் முடிந்த அத்தனை உதவிகளையும் செய்து பார்த்து விட்டார். இனி தனக்கு யாராலும் எவ்வித உதவிகளையும் செய்ய முடியாது. பெற்ற அப்பாவும்—அம்மாவும் சுயநலமான முடிவுகளை எடுத்துத் தங்களின் எதிர்காலத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டு விட்டபின், வேறு யார் உதவிக்கு வர முடியும்...? அவர்களே வராத போது வேறு யார் வந்தால் தான் என்ன?

இத்தனையும் நினைத்து நினைத்து அவன் ஓய்ந்து போயிருந்தான். வகுப்பாசிரியையிடம் லீவு கேட்டபோது, அவர் பார்வை அந்த வினோதப் பார்வை நினைவிற்கு வந்தது...

''எதுக்குடா லீவு?"

''கலயாணத்துக்குப் போறேன் மிஸ்...''



''எங்கேடா கல்யாணம்?'"

''இங்கேதான் மிஸ்...வடபழனி கோவில்ல...''

''யாருக்குக் கல்யாணம்?''

இவன் உடனே பதில் சொல்லாமல் தயங்கித் தலை குனிய ஆசிரியை புன் சிரிப்பாகச் சிரித்துக்கொண்டே கேட்டாள்:

''என்னடா உனக்கே கல்யாணம் மாதிரி வெட்கப் படறே...? யாருக்குக் கல்யாணம்?''

''எங்க அப்பாவுக்கு மிஸ்!"

''என்ன...! என்ன?''

''அப்...பாவுக்கு மிஸ்...''

''அப்பாவுக்கா...உங்க அப்பாவா? ஏண்டா, உனக்கு அம்மா இல்லை?''

இவன் மீண்டும் பதில் சொல்லாமல் நிற்க, அந்த ஆசிரியையின் பார்வையில் பரிதாபமும், அனுதாபமும் மேலிட்டது. அதற்குமேல் ஒன்றும் கேட்காமல், சரி. போ...'' என்று அனுப்பி விட்டாள்.

ஆனாலும் இவனால் அந்த ஆசிரியையின் பார்வையை மறக்க முடியவில்லை. அந்த ஆசிரியை மட்டுமில்லை... அப்பாவின் கல்யாணத்தைக் கேள்விப்பட்ட அத்தனை பேரும் அவனை அதே விதமாகத்தான் பார்த்தனர். ஒருவித பரிதாபம் இழையோடப் பேசினர். எல்லோர் பேச்சிலும், 'பாவம் இவன்' என்கிற இரக்க உணர்ச்சி வெளிப்பட்டது. எப்போதும் அவனுடன் சண்டை போடும் நண்பர்கள்கூடக் கனிவாகப் பேசஆரம்பித்தனர்.

''பாவம்டா சாயி...இவனோட அப்பா ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கப் போறாராம்..."

''ஏண்டா சாயி, உங்கம்மா என்னடா ஆனாங்க?''

"செத்துப் போயிருப்பாங்கடா...முதல் அம்மா செத்துப் போனரல்தான் இன்னொரு அம்மா வருவாங் கன்னு எங்கம்மா சொல்லியிருக்காங்க...!"

"ஏண்டா சாயி, இந்தம்மா உங்கம்மா மாதிரி நல்ல வங்களா இருப்பாங்களாடா?"

"ம்ஹூம்...இருக்க மாட்டாங்கடா! நாமதான் கதையில படிச்சிருக்கோமே, ரெண்டாவது அம்மாவா வர்ற யாரும் நல்லவங்களா இருக்க மாட்டாங்கன்னு... பாவம்டா இவன்!"

"சீ...இனிமே நாம சாயிகூட சண்டை போட வேணாம்டா..."

"ஆமாம் சாயி...இனிமே நாங்க உன்கிட்டே சண்டை போடமாட்டோம். எல்லா விளையாட்டுலேயும் உன்னைச் சேர்த்துப்போம். என்ன?"

அவர்களே கேள்வி கேட்டு, அவர்களே பதில் சொல்லிக்கொண்டார்கள். கொண்டுவந்திருந்த சாக்லேட் டைப் பகிர்ந்து கொடுத்தார்கள். ஆனாலும், தான் அவர் களிடமிருந்தெல்லாம் தள்ளி நிற்பதை உணர்ந்து கொண் டான்... உலகத்திற்கும் தனக்குமிடையில் ஒரு பெரிய பள்ளம் விழுந்து போனதைப் புரிந்து கொண்டான். இனி ஒருபோதும் தன்னால் சாதாரணமாக இருக்க முடியப் போவதில்லை என்பதை அறிந்துகொண்டான்...எவரிட மும் பழக முடியப் போவதில்லை—மனம் விட்டுச் சிரிக்க முடியப் போவதில்லை. பெரிய கூழாங்கல்லை விழுங்கி, அது தொண்டைக்குள் தடுப்புச் சுவராக நிற்பதுபோல், அத்தனை உணர்ச்சிகளும் தொண்டையை விட்டு வெளி யில் அங்கேயே நிற்கப் போகின்றன...

இப்போதும் அழுகை, ஏமாற்றம், கோபம் வெறுப்பு, இயலாமை அத்தனை உணர்வுகளும் தொண்டையை இறுக்கி அங்கேயே அடைத்துக் கொண்டிருக்க, உள்ளே



யிருந்து வந்த நாதஸ்வரத்தையும், மேளச் சத்தத்தையும் கேட்கப் பிடிக்காதவனாக வெளியில் வந்து நின்று கொண்டிருந்தான். ஆனால் அதற்குக் கூட உனக்கு உரிமையும், சுதந்திரமும் இல்லை என்கிறாற்போல் கல்யாணப் பெண்ணின் அப்பா ஜெயராமன் வாசலுக்கு வந்து அவனை கூப்பிட்டார்:

"ஏண்டாம்பி...டேய்...உன்னை உங்கப்பா கூப்பிடு கிறார் பாருடா..."

"ஏண்டா அம்பியாம்...டேய்யாம்...' நேற்று மாப் பிள்ளை அழைப்பின்போதே அவர் இவன் பெயர் கேட்டு, இவன் சொல்லி இருந்தான். ஆனாலும் அதை மறந்து விட்டவரைப் போல் மீண்டும், 'ஏண்டா அம்பி...' என்று கூப்பிட்டது இவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனாலும் ஒன்றும் சொல்லாமல் உள்ளே போனான், அப்பா தன் மாப்பிள்ளை உடையைக் கலைக்காமலே அவனைப் பார்த்துக் கேட்டார்:

"எங்கேடா போயிருந்தே?"
"எங்கேயும் இல்லேப்பா..."
"பின்னே இங்க காணுமே?"
"வாசல்ல நின்னுண்டிருந்தேன்..."
"எதுக்கு வாசலுக்குப் போனே?"
"சும்மாதாம்ப்பா..."
"சரி வா, சாப்பிடப் போகலாம்."

அன்றிரவு எல்லோரும் அவனது வீட்டுக்குத்தான் வந்தார்கள். புதுஅம்மா, அப்பாவின் அறைக்குப் படுக்கப் போனாள். இவனை அந்த அம்மாவின் அப்பா வும், அம்மாவும் கூப்பிட்டு அவர்களுக்கு எதிரில் கூடத்தில் படுக்கச் சொன்னார்கள். படுத்துக் கொண்டான். விடி விளக்கையும் சேர்த்து அணைத்து மொத்தமாய் இருட் டாக்கினார்கள். பேசாமல் இருந்தான். ஒரு வினாடி கத்தத் தோன்றியது. அம்மா என்று அலறத் தோன்றியது.

கையில் லாந்தர் விளக்கை ஏற்றி எடுத்துக் கொண்டு, 'பயப்படாதே சாயி... இதோ வந்துட்டேன்!'

இல்லை. அந்த அம்மா இனி இல்லை...அவன் மனத்திலிருந்துகூட வெளியேறி விட்டாள். இத்தனைக்கும் பின்னர் அவன் இருட்டிற்குப் பயந்தால் அதில் அர்த்தமில்லை. இன்றாவது புது அம்மாவின் அப்பாவும், அம்மாவும் அவனுடன் கூடத்தில் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாளையிலிருந்து அவர்கள்கூட இருக்கமாட்டார்கள். தனியாய், அந்தக்கூடத்தில் அவன் மட்டுமே படுக்கவேண்டும்... நடுராத்திரியில் மின்சாரம் நின்று விளக்குகள் அணைந்து, கரிக்கறுப்பாய், முழு இருட்டாய்...

பயப்படக்கூடாது; மருளக்கூடாது...இனி இந்த இருட்டு, தனிமை எல்லாவற்றிற்கும் பழக்கப்பட வேண்டும்...கஷ்டங்களைப்போல் அவையும் பழகி விடும். பழகப் பழக எல்லாம் சுலபமாகி விடும். சுலபமாகிற பட்சத்தில் சுமைதெரியாது...

அவன் பற்களைக் கடித்துக் கொண்டான். கண்களை இறுக மூடி விழிக்குள் தெரிந்த இருட்டைப் பழக்கப்படுத்த முயற்சித்தவாறு மெல்ல மெல்லத் தூங்கிப் போனான்...

—: முற்றும் :—

## விஷம்

## 1

**கா**லை ஆறு மணிக்கெல்லாம் தன்னை வெளியில் அனுப்பி விடுவார்கள் என்றுதான் எதிர்பார்த்தான் செந்தில். நேற்றிரவே வார்டன் வந்து மறுநாள் அவனுக்கு விடுதலை என்று சொல்லிவிட்டுப் போனார். அப்போதே அவனுக்குள் ஒரு வருத்தமும், சோகமும் ஏற்பட்டு விட்டது. வெளியில் போக விருப்பமில்லை என்பதை வார்டனிடம் சொன்னான். அவர் சூப்ரெண்ட்டிடம் சொல்லச் சொன்னார். சூப்ரெண்ட்டின் வருகைக்காகக் காத்திருந்து அவரிடம் சொன்னான்.

''வேணாம் சார்...நான் வெளியில் போகலை சார்! இங்கேயே இருந்துடறேன் சார்..." என்று கெஞ்சினான்.

''இந்த நிலைமையில் வெளியில் போனால் ரொம்பக் கஷ்டப்படுவேன் சார்...''

—அவன் சொன்னதையும்—சொல்வதில் இருந்த நியாயத்தையும் உணர்ந்த அவர் இயலாமையில் புன்னகை புரிந்தார்.

''தண்டனை காலத்துக்கு மேல உன்னை—உன்னை மட்டுமின்றி யாரையுமே வச்சுக்கிற அதிகாரம் எங்களுக்கில்லைப்பா..நாங்கள் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். இங்கே வருகிறவர்களும் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட

வேண்டும் என்று நினைப்பவர்கள். அதனால் உன்னை வைத்துக் கொள்ள முடியாது. அவனவன் வெளியில் போகத் தவித்துக் கொண்டிருக்கிறபோது, நீ மட்டும் ஏன் இப்படி வருத்தமும் வேதனையும் படுகிறாய்?"

'மற்றவர்களுக்கு வெளியில் போவதற்குக் காரணமிருக்கும். பெண்டாட்டி, பிள்ளை குட்டிங்க இருப்பாங்க. கூடப்பிறந்தவங்க இருப்பாங்க. சிநேகிதக்காரங்க இருப்பாங்க...எனக்கு யாரு இருக்காங்க? வீடு, வாசல் என்ன இருக்கு? உடம்பாவது நல்லா இருக்கா...? அதுவுமில்ல. இந்த லட்சணத்துல வெளியில் போய் நான் என்ன செய்யப் போறேன் சார்?'

—இவ்வளவையும் மனத்தில் நினைத்துக் கொண்டானே தவிர, வெளியில் சொல்லவில்லை. அதுவும் அவரிடம் சொல்லப் பிரியப்படவில்லை. சொன்னாலும் ஏதும் பலன் இருக்கும் என்று தோன்றாததால் அவன் பேசாமலே இருந்தான். முன்பானால் அவன் இப்படி இருந்திருக்க மாட்டான். ஒரு கேள்விக்குப் படபடவென்று பத்து பதிலாக வரும். சுள்ளென்று கோபம் வரும். முரட்டுத்தனம் இருக்கும். இப்போது எல்லாம் அடங்கிப் போய் விட்டது. சிறைத்தண்டனை அவனை வெகுவாக மாற்றியிருந்தது.

ஆறு வருடங்களாக அடைபட்ட தனிமையோ, அல்லது இரண்டு வருடங்களுக்கு முன் மெல்லத் தோன்றி கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து, இப்போது கை விரல்களையும், கால் விரல்களையும் வளைத்து—குறைவு படுத்தி, மூக்கை மூளியாக்கி இருக்கும் வியாதியோ—ஏதோ ஒன்று அவனை முற்றிலுமாக மாற்றி விட்டிருந்தது. பழைய கோபக்கார இளைஞன் இல்லை அவன். ஒடுங்கிப் போய், வெளி உலகைப் பார்க்கவே கூசுகிற மனிதன். 'ஆனால் இதைச் சொன்னால் யார் நம்பப் போகிறார்கள்...? சரி, சொல்வதற்குத்தான் யார் இருக்கிறார்கள்? யாருமற்ற அந்த வெளி உலகத்திற்கு ஏன் போகவேண்டும்? எதற்காக ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள



வேண்டும்? அதைவிட இங்கேயே இருந்து, இப்படியே செத்துப்போய் விடலாமே...'

"என்ன யோசிக்கிறாய்? இன்றுதான் இந்த சிறைச் சாலைக்குள் இருக்கிற கடைசி ராத்திரி என்பதை தீர்க்கமாக நினைத்துக் கொள்...இனி ஒருபோதும் இதனுள் நுழையக் கூடாது என்கிற திடம் உனக்குள் ஏற்பட வேண்டும். நல்லதோர் பிரஜையாக வாழ நினைக்க வேண்டும். என்ன...?"

"சரி சார்..."

"கர்த்தர் உன்னை ரட்சிக்கட்டும்!"

அவர் போனபின்பும் நீண்டநேரம் தூக்கமற்று உட்கார்ந்திருந்தான். இரவுக் காவலுக்கு வந்தவர்கள் டார்ச் விளக்கை அடித்துப் பார்த்து இவன் விழித்திருப்பதைக் கவனித்து விட்டுக் கேட்டார்கள் :

"என்னடா...? விடுதலையாகிற குஷியில் தூக்கம் வரலையா?"

இவன் பதில் சொல்லாதிருக்க, மீண்டும் சற்றே குரல் உயரக் கோபத்தோடு கேட்டார்கள்:

"ஆமாம்! போற மாதிரி போயி பத்தே நாளில் திரும்பப் போறே...இதுக்கு சந்தோஷம் ஒரு கேடா உனக்கு?"

அதற்கும் மௌனமாக இருக்கவே, அவர்கள் முணுமுணுத்துக் கொண்டு அகல, இவன் அவர்களின் அனுமானத்தை நினைத்துப் பெருமூச்சு விட்டான். ஒருவேளை இந்த வியாதி வந்திருக்காது போனால் தானும் வெளியில் போவதைக் குறித்து சந்தோஷப்பட்டிருப்போமோ என்று எண்ணிக் கொண்டான். அப்போதும் இந்த விடுதலைச் செய்தி தன்னை சந்தோஷப் படுத்தியிருக்காது என்கிற முடிவிற்கே அவனால் வரமுடிந்தது. அந்த அளவிற்கு சிறைச்சாலை வாசம் பழகி விட்டது...அவன் அடைபட்டிருந்த அறையோடு ஒரு தோழமை உணர்வுகூட

ஏற்பட்டிருந்தது. சக கைதிகளோடு ஏற்பட்டிருந்த உறவைவிட இரும்புக் கம்பிகளோடும், கருங்கற் சுவர்களோடும் இன்னமும் நட்பாய் நெருக்கமேற்பட்டிருந்தது. அவை அவனை அருவருப்பாகவோ, பரிதாபத்துடனோ பார்ப்பதில்லை. விலக்கி தனியே நிறுத்துவதில்லை. தினமும் கம்பிகளை நூறு முறையாவது தொடுகிறான். சுவரில் சுகமாகச் சரிந்து கொள்கிறான். இவற்றை இங்குள்ள மனிதர்களிடமே செய்ய முடியாதபோது—இங்கேயே தோழமை கிடைக்காதபோது, வெளி உலகத்தில் எங்கிருந்து கிடைக்கப் போகிறது...?

நீண்டநேரம் யோசித்து எதிர்காலம் பற்றின மருட்சியுடனும், பயத்தோடும் தூங்கிப் போனான். பின் காலையில் மணியடிக்கப்படுகிற சத்தத்திற்கு எப்போதும் எழுந்திருக்கிற மாதிரி எழுந்து கொண்டான். வழக்கப்படி காலைக்கடனையும் ஆகாரத்தையும் முடித்துக் கொண்டு, அன்று எங்கு என்ன வேலை என்பதைக் கேட்கக் காத்துக் கொண்டிருந்தபோது வார்டன் சொன்னார்:

''செந்தில், உனக்கு இனிமேல் இங்கே வேலையில்லை. வெளியில் போய் வேலை செய்து பிழைத்துக் கொள்! இரு, ஆபீஸ் அறையிலிருந்து உத்தரவு வரும். பின் போகலாம்...''

அப்போதிலிருந்து காத்திருந்தான். கிட்டத்தட்ட பதினோரு மணியளவில்தான் அழைப்பு வந்தது. போனான். அவர்கள் உத்தரவுப்படி கைதி உடையைக் கழற்றி, சாதாரண வேட்டியும்— சட்டையும் அணிந்து கொண்டான். அலுவலக அறையின் லெட்ஜரில் கையெழுத்திட்டான். சிறைக்கு வந்த அன்று அணிந்திருந்த ஆடை, கைக்கடிகாரம் இவைகளைப் பெற்றுக் கொண்டான். பின் அதிகாரிக்கு பவ்யமாய் சல்யூட் அடித்தபோது, அவர் நிமிர்ந்து பார்த்த சாதாரணப் பார்வையே விறைப்பாய் இருந்தது.

''என்னடா, நேர எங்க போறதாக உத்தேசம்?''



இவன் தலைகுனிந்து பதில் சொன்னான்:

''தெரியலீங்க சார்...''

''திரும்ப உங்க ஊருக்கே போயிடறியா?''

''ம்ஹூம்...வேணாம் சார்...''

''ஏன்டா, அங்க போக மூஞ்சியில்லையா?''

''......''

''என்னடா, பேசாமல் இருக்க?''

''மூஞ்சியில்லைதான் சார்... அப்புறம் அங்க எனக்கு யாரு சார் இருக்காங்க?''

''பின்ன எங்கதான் போறதாக உத்தேசம்?''

''அதான் எனக்கே தெரியலை சார்! பேசாமல் நான் இங்கேயே இருந்துடறேன் சார்...''

''சரி பழைய பல்லவியை ஆரம்பிச்சிடாதே...இனிமேலாவது ஒழுங்கா நடந்துக்க. என்ன...?''

அவன் மௌனித்துத் தலைகுனிய அதிகாரி அதட்டலாகக் கேட்டார்:

''என்னடா...? நடந்துப்பியடா?''

அதற்குள் ஒரு ஃபைலுடன் உள்ளே வந்த இன்ஸ்பெக்டர் சொன்னார்:

''இனிமே இவனால எங்க சார் தப்பு பண்ண முடியப் போவுது? அதனால்தான் கடவுளாகப் பார்த்து கையையும், காலையும் குறைச்சு அனுப்பறாரே...''

—அதைக் கேட்டதும் சடாரென்று தலையை உயர்த்தி இன்ஸ்பெக்டரைப் பார்த்தான் அவன். அடிபட்ட நாகத்தின் சீற்றம் பார்வையில் தெரிந்தது. 'ஆனாலும் நீ பல் பிடுங்கப்பட்ட செத்த பாம்புதானே' என்கிற அலட்சிய பாவத்துடன் பேசினார் அவர்.

"இத்தனைக்கப்புறமும் இன்னும் கூட இந்தப் பார்வை உன்கிட்ட அடங்கலை பாரு...சீ போடா! வெளியில போய் ஒழுங்கா பிழைக்கிற வழியைப் பாரு..."

தான் கொண்டு வந்த ஃபைலை மேஜைமீது வைத்து விட்டு அவர் அறையை விட்டு அகன்றதும்—சிறைச்சாலை அதிகாரி அவனது கைப்பணத்தைக் கணக்கிட்டுக் கொடுத்து அதற்கும் கையெழுத்து வாங்கிக் கொண்டார். பின் ஒரு வினாடி அவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுச் சொன்னார்:

"இனிமேல் இந்த இடமே ஞாபகத்துக்கு வரக்கூடாது. சுத்தமா மறந்து போயிடணும். இன்னொரு முறை நீ இதுக்குள்ள வரக்கூடாது. இதுக்கு நல்லபடியா நடந்துக் கணும்னு அர்த்தம்!"

"சரி சார்..."

"வெளியே போனதும் முதல்ல இதுக்கான ஆஸ்பத்திரி யில் சேரு...ஜெயில் டாக்டரு கொடுத்த மாதிரி அங்கேயும் இலவசமா மருந்து கொடுப்பாங்க. இதைப் பூரணமா குணமாக்க முடியாமல் போனாலும் இதற்குமேல் அதிக மாகாமல் இருக்க வைத்தியம் பார்ப்பாங்க..."

'இதற்குமேல் அதிகமாக என்ன இருக்கிறது...?' என்று நினைத்துப் பேசாமலிருக்க, அதிகாரி, "என்ன?" என்றதும் இவன், "சரி சார்!" என்றான்.

" அப்போ, நீ போகலாம்."

"போயிட்டு வரேன் சார்!"

"முட்டாள்! வரேன்னு சொல்லாதே. இங்கேயிருந்து போகிற யாரும் திரும்பி வரக்கூடாதுன்னு நினைக்கணும். அதனால, போறேன்னு மட்டும் சொல்லு..."



"போறேன் சார்!"
"போ!"

## 2

சிறைக் கதவின் சின்ன வாசலில் நுழைந்து வெளியில் வந்ததும் ஒரு புது உலகிற்கு வந்த உணர்வு ஏற்பட்டது. ஒவ்வொரு சத்தமும் இனிமையாகக் கேட்டது. கார் சத்தம், பூதமாக நகருகிற பஸ்ஸின் சத்தம், வேகமாக மிதிக்கப் படுகிற சைக்கிள் மணிச் சத்தம், உயிர் போகிற மாதிரி அலறுகிற ஆட்டோக்களின் ஹாரன் சத்தம், டர்ர்' என்று பிரேக் பிடித்து நிறுத்தப்படுகிற சைக்கிள் ரிக்ஷாக் களின் சத்தம்...

இத்தனை சத்தங்களா...! ஆறு வருடங்களாக அவன் காதுகளில் விழாத சத்தங்கள். உலகம் ஓசைமயமானது என்பது மீண்டும் நினைவிற்கு வந்தது. எத்தனை மனிதர்கள்...அவர்கள் அணிந்திருந்த விதம் விதமான உடைகள். நிறங்கள்! வாகனங்கள், அந்த ஓட்டம், வேகம், பரபரப்பு...இவை எல்லாமே அவனுக்கு மறந்து போயி ருந்தன. அண்ணாந்து பார்த்தால் தென்பட்ட வானமும்' நின்று கொண்டிருந்த பூமியும் தவிர, மற்ற எல்லாம் மறக்கடிக்கப்பட்டு விட்டன. அவை தவிர, திரும்பின இடமெல்லாம் கட்டம் போட்ட உடை, மொட்டைத் தலை-இல்லாவிட்டால், விறைத்து நிற்கும் காக்கி யூனி பாரம், கைத்தடி, இடுப்பில் துப்பாக்கி, அதட்டல், அதிகாரம்...

வர்ணமயமான இந்த உலகத்தின் ஒதுக்கப்பட்ட மூலையில் அப்படியும் ஓர் உலகம்...ஒரு சின்ன பெருமூச் சுடன் ஆழமாய் காற்றை இழுத்து சுவாசித்தான். ஒரு முறை சுற்றிப் பார்த்து சுதந்திரத்தை அனுபவிக்க முடியுமா என்று ஆராய்ந்தான். மீண்டும் ஒரு தரம் ஜெயில் கட்டடத்தைப் பார்த்து விட்டு மெல்ல நடந்து மேட்டில் ஏறி, 'சென்ட்ரல் ஜெயில்-மத்திய சிறைச்சாலை' என்கிற வளைவைக் கடந்து தார்ச் சாலையில் கால

வைத்ததும், சுரீர் என்று உறைத்தது. தலைக்குமேல் வெயில் பளீரிட்டது. நிமிட நேரத்தில் வியர்வை பெருகி கையடி, கழுத்தெல்லாம் நனைந்தது. சட்டை தெப்பமாகும் என்று தோன்ற அவன் காலை இழுத்து வேகமாக நடக்கமுயன்றான். எங்காவது செருப்புக் கடை இருந்தால் முதலில் கால் சுடாமல் இருக்கச் செருப்பு வாங்க வேண்டும்... பின்னர் ஜெயில் சாப்பாட்டில் மரத்துப் போயிருந்த நாக்கிற்குச் சுவைஊட்ட வேண்டும். ஏதாவது ஒரு நல்ல ஓட்டலுக்குள் நுழைந்து நன்றாகச் சாப்பிட வேண்டும். இட்லி, உப்புமா, கீரைக்குழம்பு, சாதம் இவற்றைத் தவிர வேறு ஏதாவது சாப்பிட வேண்டும். மாறி மாறி இவற்றையே சாப்பிட்டு நாக்கு செத்துக் கிடந்தது. அதை உயிரூட்ட மற்ற சுவைகளை ருசி பார்க்க வேண்டும்...

அவன் வேகமாக நடந்தான். முதலில் செருப்புக் கடையில் செருப்பு வாங்க நினைத்தவன் பின்னர் அந்த நினைப்பை மாற்றிக் கொண்டான். கையில் இருக்கிற பணத்தைப் பார்த்து ஜாக்கிரதையாகச் செலவு பண்ண வேண்டும்...எண்ணி எண்ணி செலவழிக்க வேண்டும். இந்த ஒரு வேளை தவிர அனாவசியமாய் சாப்பிடக்கூடக் கூடாது...ருசிக்கு நாக்கு பழகி விட்டால் பின்பு கஷ்டமாகப் போய்விடும். இந்தப் பணம் தீர்ந்து போனால், அதன்பின் செலவிற்கு என்ன செய்வதென்பது தெரியவில்லை...எங்கே போவது. எங்கு தங்குவது. யாரிடம் சாப்பாடு போடச் சொல்லிக் கேட்பது—எல்லாவற்றிற்கும் மேலாக வருமானத்திற்கு என்ன செய்வது...யார் தனக்கு வேலை தருவார்கள்? இந்த நிலைமையில் வேலை கிடைக்கும் என்று எதிர்ப்பார்ப்பதற்கில்லை. பின்பு-வேலையில்லை என்றால் சாப்பிடுவது எப்படி? சாப்பிட வேண்டுமானால் பணம் வேண்டும்... அதனால் சிக்கனமாகச் செலவு செய்ய முடிவு பண்ணி, பிளாட்பார ஓரத்தில் கடை விரித்திருந்த ஒருவரிடம் மலிவு விலையில் ரப்பர் செருப்பு ஒன்றை வாங்கிப் போட்டுக் கொண்டான். இவன் கொடுத்த பணத்தை நேராக டப்பாவை நீட்டி அதில் போடச் சொன்னார் கடைக்காரர். நான்கு



ரூபாய்க் காசை அதனுள் போட்டபோது, இவன் மனசுக்குள் அவரைக் கெட்ட வார்த்தைகளால் திட்டிக் கொண்டே நகர்ந்தான்.

கால் சுடாததால் தற்போது நடப்பதில் சிரமம்தெரியவில்லை. அதனால் இன்னமும் சிறிது நடந்து லேசாய் களைப்பு ஏற்பட்டதும் சற்றே ஆசுவாசமாய் நின்றான். மணி என்ன இருக்கும் என்பது தெரியவில்லை. சிறைச்சாலைக்குள் இருந்தால் தற்போது என்ன செய்து கொண்டிருப்போம் என்பதை எண்ணிப் பார்த்தான். நிச்சயமாய் அது சாப்பிடுகிற நேரமாக இருக்காது என்று தோன்றியது. ஆனாலும் பசி அதிகமாகத் தெரிய, எங்காவது ஓட்டல் கண்ணில் படுகிறதா என்று பார்த்தான். எதிர் வரிசையில் ஆடம்பரமற்ற சாதாரண ஓட்டல் ஒன்று இருப்பது தெரிய, நீண்ட நாட்களுக்குப் பின்னர் வாய்க்கு ருசி தெரியச் சாப்பிடப் போகிற ஆர்வத்தில் அந்த அகலமான, போக்குவரத்து அதிகமிருந்த தெருவைக் கடந்து, ஓட்டலின் உள்ளே போய் தனியாய் மூலையில் கிடந்த மேஜையில் உட்கார்ந்தான்.

இரண்டிரண்டாகக் கிட்டத்தட்ட ஐம்பது மேஜைகள் போடப்பட்டிருந்தன. முக்கால்வாசி மேஜைகளில் யார் யாரோ உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். எதிர்ப் பக்கக் கண்ணாடிக் கேஸில் பல நிறங்களில் இனிப்பு வகைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்க, அவன் ஒரு வித குழந்தையின் ஆர்வத்துடன் அவைகளைப் பார்த்தான். விறுவிறுவென்று நாக்கில் நீர் ஊறிற்று. சிறைக்கு வருவதற்கு முன் எப்போதாவது தாராபுரமோ, சேலமோ போக நேர்ந்த சந்தர்ப்பங்களில் அவற்றில் ஒரு சில இனிப்பை வாங்கிச் சாப்பிட்டிருக்கிறான். சாமியார் பணம் கொடுத்திருக்கிறார். ''போடா, போய் நல்லா வயிறார சாப்பிட்டு விட்டு வா...'' என்று சொல்லியிருக்கிறார். அவர் பேச்சைக்கூடக் கேட்காமல், அவர் சொன்ன புத்திமதிகளையெல்லாம் காற்றில் பறக்க விட்டுத் தான் செய்த அந்தக்—

''என்ன சார், சாப்பிடுறீங்க?''

எதிரில் வந்து நின்ற சர்வருக்குத் தெரியாத வகையில் மேஜையின் கீழ் கைகளை வைத்து மறைத்தபடி, இனிப்பு அலமாரியின் பக்கம் திரும்பிச் சொன்னான்:

''அந்த இனிப்பு வகைல ஒன்னு கொண்டு வாப்பா...''

''எது வேணும்னு சொல்லுங்க. எடுத்திட்டு வரேன்.''

''என்ன இருக்கு''

''குலாப்ஜாமூன், ஜாங்கிரி, பாதம் கேக், ரஸகுல்லா...''

''குலாப்ஜாமூன்றது எது?''

''அதோ விரல் நீளத்துக்கு சர்க்கரைத் தண்ணில ஊற வச்சிருக்கே...அதான்.''

''என்ன விலைப்பா?''

''ஒன்னரை ரூபா...''

''ஒண்ணா ஒன்னரை ரூபா? அடேங்கப்பா!''

சர்வர் பேசாமல் நின்றிருக்க-இவன்,

''சரி. அதுலவே ஒன்னு கொண்டு வா!'' என்றான்.

''அதுக்கப்புறம் என்ன வேணும்னு சொல்லிடுங்க.''

''வேறு என்ன இருக்கு?''

''பூரி தோசை, மசால் தோசை, ஊத்தப்பம்...''

''ஒரு பூரி, ஒரு மசால தோசை கொண்டு வா! இனிப்பை சாப்பிட்டப்புறம் சூடாகக் கொண்டு வா...''

சர்வர் பதில் பேசாமல் போய் ஒரு கண்ணாடிக் கிண்ணத்தில் இரண்டு குலாப்ஜாமூன்களைக் கொண்டு வந்து மேஜைமீது வைத்துவிட்டு. உள்ளே பூரியும் மசால் தோசையும் கொண்டுவரப் போனான். சர்வர் திரும்ப வருவதற்குள் குலாப்ஜாமூனைச் சாப்பிட்டு விடுகிற அவசரத்தில் ஸ்பூனைப் பற்ற முயல, விரல்களின் குறைவில் அது இயலாமற் போயிற்று. மீண்டும் இவன் முயற்சி செய்து கொண்டிருந்தபோது, எதிரில் வெள்ளைப்



பாண்ட்டும்-ஷர்ட்டும் போட்டு, கையில் சின்ன தோல் பையோடு வந்து உட்கார்ந்த இளைஞன் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தபடி இவனைக் கவனித்தான். வளைந்து குறைந்த விரல்களையும், அந்த விரல்களின் புண்களிலிருந்து ரத்தம் கசிவதையும், முகத்தின் பளபளப்பையும், வியர்வை நாற்றத்தையும், குறைபட்ட மூக்கையும் ஒரு வினாடி பார்த்தவன், சடாரென்று தன் தோல்பையைத் தூக்கிக் கொண்டு கல்லாப்பெட்டி மேஜையடியில் உட்கார்ந்திருந்தவரிடம் ஓடினான்.

அவரிடம் சில வினாடிகள் கோபமாக ஆங்கிலத்தில் பேசினான். கல்லாப்பெட்டியில் உட்கார்ந்திருந்தவர் அவனை சமாதானப்படுத்த முயன்று தோற்றுப் போய், ''சார், சத்தம் போடாதீங்க. தெரியாம உள்ள வந்திருக்காரு இதோ போகச்சொல்லிடறேன். நீங்க போயி வேற மேஜைல உட்கார்ந்துக்கோங்க...'' என்று கெஞ்சினார்.

ஆனால் வெள்ளை உடை இளைஞன் கேட்கவில்லை. அதே கோபத்துடன் வெளியேற, கல்லாப்பெட்டிக்காரர் நேராக இவனருகில் வந்து,

''எழுந்திருப்பா...'' என்று அதட்டினார்.

இவன் ஒன்றும் புரியாமல் ஒரு வாய் குலாப்ஜாமூன் கூட சாப்பிட முடியாத ஏக்கத்தில் எழுந்து நிற்க, எதிரிலிருந்தவர் குரலைத் தழைத்துக் கடுமையாகப் பேசினார்:

''ஏம்ப்பா...உன்னை யாரு உள்ள வரச் சொன்னது? வியாதியஸ்தர்கள் உள்ளே வரக்கூடாதுன்னு தெரியாதா? நீயெல்லாம் ஏன்யா உள்ள வந்து கழுத்தறுக்கிறீங்க... நாலு கஸ்டமருங்க அப்புறம் எப்படி வருவாங்க? ம்... நடய்யா! போய்யா வெளிய...''

இவன் முகம் சிவக்க,

''இதோ, இந்த இனிப்பை மட்டும் சாப்பிட்டுவிட்டு...'' என்று ஆரம்பித்ததும்,

''சாப்பிட்டது போறும், போய்யா...வேற யாரும் பார்க்கிறதுக்குள் முதல்ல நடையைக் கட்டு!'' என்று முடிக்க இவன் அந்த குலாப்ஜாமூனைப் பார்த்துக் கொண்டே மேஜையை விட்டு வெளியில் வர—

அப்போது அந்த சர்வர் அவன் ஆர்டர் பண்ணின தோசையையும், பூரியையும் எடுத்துக் கொண்டு வந்தான். முதலாளி அவனின் மேஜையருகில் கோபமாய் நிற்பதைப் பார்த்துப் பயந்துபோய் வேகமாக ஓடி வந்தான். சர்வரைப் பார்த்ததும் முதலாளியின் கோபம் அதிகரித்தது

''ஏண்டா டேய்... இவன் கையைப் பார்க்கலை? உடனே எழுந்திருச்சு வெளிய போகச் சொல்லக்கூடாது?''

''பார்க்கலே முதலாளி...இவரு கையை மேஜைக்கு அடியில் வச்சுட்டிருந்தாரு...''

''மேஜைக்கு அடியில் வச்சுக்காமல், சீழும்–ரத்தமும் ஒழுகற கையை மேலயா வச்சுப்பான்...? போய்யா... இன்னும் ஏன் நிக்கறே? இனிமேல இந்தமாதிரி வேற எந்த ஓட்டல்லயும் நுழைஞ்சு தொந்தரவு கொடுக்காதே... புரிஞ்சுதா? சாப்பிடற ஆசை இருந்துச்சுன்னா வேற யாரையாவது அனுப்பி வாங்கியாரச் சொல்லி சாப்பிடு... இப்படி உள்ள நுழைஞ்சு உட்காந்துடாதே. வேற யார் கண்ணுலயும் படறதுக்கு முன்னாடி சீக்கிரமா வெளிய போயிடு...''

சிறையை விட்டு வெளியில் வந்ததும் ஏற்பட்ட முதல் அனுபவம் மனதைக் கடுமையாகத் தாக்கிக் காயத்தை ஏற்படுத்த, ஓட்டலை விட்டு வெளியில் வந்த செந்தில் உள்ளுக்குள் பொங்கிப் பொங்கி வந்ததை அடக்க சில வினாடிகள் மௌனமாகக் கண்மூடி நின்றான்.

## 3

''தாராபுரம் போற பஸ் எப்ப சார் வரும்?''



''தாராபுரமா...? இதோ இப்ப வந்துடும். அதோ அந்த இடத்துலதான் பஸ் நிற்கும். நீயும் அங்க போயி நில். சட்டுன்னு ஏறிக்க வசதியா இருக்கும்.

அந்த கண்டக்டர் காட்டிய இடத்தில் போய் நின்றான். அங்கு மரநிழலோ, வேறு கட்டட நிழலோ இல்லை. வெறும் பொட்டைவெளி பஸ்ஸ்டாண்ட் ஆகியிருந்தது. ஆனாலும் செந்திலுக்கு வெயிலின் தகிப்பு அதிகம் தெரியவில்லை.

வெளி வெயிலைவிட உள்ளுக்குள் தகித்த தகிப்பு அதிகமாக இருந்தது. சாப்பிடுவதைத் தடுத்து ஓட்டலிலிருந்து விரட்டப்பட்டது இன்னமும் மனதை சங்கடப்படுத்திக் கொண்டிருந்தது. அதற்குப் பின்னர் ஓட்டலுக்குள் நுழைகிற தைரியம் வரவில்லை பெட்டிக்கடை ஒன்றிலிருந்து இரண்டு வாழைப்பழங்களை வாங்கிச் சாப்பிட்டு விட்டுப் பேசாமல் இருந்தான். அதுபோல் மூன்று வேளைக்கும் வெறும் வாழைப்பழங்களில் உயிர் வாழ்வது சாத்தியமில்லை என்பதால், அடுத்ததாக சொந்த ஊருக்குப் போய்விடுகிற முடிவில் பஸ்ஸ்டாண்டிற்கு வந்து சேர்ந்தான்.

இப்போதும் மனத்திற்குள் மெலிதாக, 'ஊருக்குப் போக வேண்டுமா...? என்கிற கேள்வி நெருடிற்று. அதைவிட, சிறை அதிகாரி சொன்ன மாதிரி ஆஸ்பத்திரியில் போய் சேர்ந்து விட்டால் என்ன என்று தோன்றிய போது, வேகமாக உள்ளே நுழைந்த பஸ் அவனுக்கு மிக அருகில் நின்றது.

இவன் சட்டென்று தன் எண்ணங்களிலிருந்து விடுபட்டவனாக பஸ் கண்டக்டரிடம் தாராபுரம் போகுமா என்று விசாரித்தான்.

''போகும்ப்பா...ஏறிக்க!''

ஏறி ஜன்னல் ஓர ஸீட்டில் ஒதுங்கி அமர்ந்த போது இன்னமும் குழப்பமாகவே இருந்தது. 'ஊரில் தன்னை வரவேற்பார்களா என்கிற சந்தேகம் ஏற்பட்டது. கொலை

காரன், ஜெயிலுக்குப் போனவன் என்பதால் ஓட்டலிலிருந்து விரட்டப்பட்ட மாதிரிவிரட்டப்பட்டுவிட்டால்..?

யார் விரட்டினாலும் நிச்சயம் சாமியார் தன்னை விரட்ட மாட்டார் என்கிற நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கையின் காரணமாகத்தான் துணிந்து இப்போது ஊருக்குக் கிளம்பியிருந்தான். ஒருவேளை, சகுந்தலா அங்கே இருந்தால்...? அவளைப் பார்க்கிற துர்பாக்கியம் ஏற்பட்டால்?

'தான் பார்ப்பது கிடக்கட்டும்...அவள் தன்னை எப்படிப் பார்ப்பாள்? ரத்தமும், சீழும் வடிகிற இந்தக் கை கால்களையும், அசட்டுப் பளபளப்பில் மின்னுகிற முகத்தையும், லேசாய் வியாதி தின்னத்தொடங்கிய மூக்கையும், காதுமடல்களையும் பார்வையால் மேய்ந்து, வேணுண்டா உனக்கு...' என்கிற அலட்சியப் புன்னகையை வீசுவாளோ? அல்லது, 'மாமா' என்னை மன்னிச்சுடு. என்னாலதானே உனக்கு இந்தக் கஷ்டம்...' என்று மன்னிப்புக் கேட்பாளா? இல்லாவிட்டால்...''

''என்னப்பா...டிக்கெட் வாங்கிட்டியா?''

''தாராபுரம் ஒண்ணு கொடுங்க...''

—ரூபாய் நோட்டை நீட்டிய கைகளைப் பார்த்தார் கண்டக்டர். கால் வினாடிக்குப் பின்—

''எழுந்திருச்சு அதோ அந்த தனி ஸீட்டுல போய் உட்காரய்யா...உனக்கும் வசதியாக இருக்கும்; மற்றவங்களுக்கும் தொந்தரவு இருக்காது.''

அத்தனைப் பார்வையும் பரிதாபமாகவும், அருவருப்பாகவும் உடம்பில் மேய, அவன் எழுந்து போய் கண்டக்டருக்கான தனி இருக்கையில் அமர்ந்து கொண்டான். மீதிச் சில்லறையை வாங்கிக் கொண்டு வெளியில் பார்க்கத் தொடங்கினான். பார்வைதான் வெளியில் இருந்ததே தவிர, மனது மௌனமாய் ஹிம்ஸைப் பட்டது. இத்தனையும் அவளால்—சகுந்தலாவால்—ஒரு பெண்ணால்



CONNEMARA PUBLIC LIBRARY
3 1 MAR 2004
CHENNAI-600 008

ஏற்பட்டது என்பதை நினைக்க நினைக்க ஆத்திரம் வந்தது. ஊரில்தான் இருக்கிறாளோ அல்லது கல்யாணமாகி வேறு எங்காவது போய்விட்டாளோ?

தன்னை இவ்வாறு நாய் மாதிரி அலைய வைத்து விட்டு அவள் மட்டும் நிம்மதியாக, சுகமாக வாழ்வாள் என்றால் அது கூடாது என்று தோன்றியது. பற்களை நறநறவென்று கடித்தான். உள்சீற்றம் 'புஸ்புஸ்' என்று மூச்சுக்காற்றாகச் சீறியது. முகச்சிவப்பு இன்னும் கூடி உடல் நரம்புகளைத் தாக்கவே, வலுவிழந்து கண்களை மூடிக் கொண்டான். பசியும், தளர்ச்சியும், மன அயர்வும் சேர்ந்து, பஸ் ஓட்டத்தில் வீசிய காற்றிற்குத் தூக்கத்தை வரவழைத்தது. தற்காலிகமாக அத்தனை கவலைகளையும் ஒதுக்கிப் போட்டுவிட்டு எதிர் கம்பியில் முகத்தை சரித்துக் கொண்டு தூங்க ஆரம்பித்தான்.

வழியில் ஓரிடத்தில் காப்பிக்காக பஸ்ஸை நிறுத்தின போதுகூட அவனின் தூக்கம் கலையவில்லை. அவன் கீழே இறங்கவில்லை. எல்லாரும் இறங்கி டிபன் பண்ணி, காப்பி குடித்துவிட்டு வந்து ஏறிக்கொண்டதும் பஸ் மீண்டும் கிளம்பிற்று. வேறு எங்கும் நிற்காமல் தாராபுரம் வந்தபோது இருட்டுகிற நேரத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போதும் அவனது தூக்கம் கலையாததால், கண்டக்டர் அவன் அமர்ந்திருந்த இருக்கையைப் பலமாகப் பலமாகத் தட்டி எழுப்பினார்.

''எழுந்திரய்யா, தாராபுரம் வந்திடுச்சு...''

பஸ்ஸை விட்டு இறங்கி மீண்டும் இன்னொரு பஸ் பிடித்து கண்ணபுரம் வந்து, கிராமத்தை நோக்கி நடந்த போது நன்றாக இருட்டியிருந்ததில் அவனுக்கு மிகுந்த ஆறுதல் ஏற்பட்டது. சொந்த மண்ணை மிதிக்கப் போகிற சந்தோஷமும், பரபரப்பும் வந்தது. கூடவே ஒரு படபடப்பும், பயமும் இருந்தது.

வேண்டுமென்றே ஒழுங்கான மண்பாதையைத் தவிர்த்து கொல்லையில் இறங்கி குறுக்குவழியில் நடந்தான். அந்த

நேரத்திற்குக் குறுக்கு வழி ஆள் அரவமற்றிருந்தது. விளக்கு வெளிச்சமற்ற இருட்டில்கூட அவனால் சீராக நடக்க முடிந்தது...இதெல்லாம் அவன் ஓடி விளையாடின இடங்கள். பையைத் தோளில் தொங்கவிட்டுக் கொண்டு பள்ளிக் கூடத்திற்காகக் கடந்த இடங்கள். பத்து வயதிலிருந்து பழகிய இடங்கள். சின்னப்பிள்ளையாய் அரை நிக்கர் போட்டுக் கொண்டு போன நாட்களிலிருந்து இது வரை சிறிதுகூட மாறாமல் கொல்லை வெளியும், சவுக்குத் தோப்பும், மாந்தோப்பும் அப்படியே இருந்தது ஆச்சரியப்படுத்தியது. இந்த ஆறு வருடங்களில்கூட எந்த மாறுதலும் இல்லை. அதேமாதிரி மனிதர்களும் மாறாமல் இருப்பார்களானால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்துப் பார்த்தான்.

அப்படி மனிதர்களிடம்மாறுதல்ஏற்படாத பட்சத்தில் சகுந்தலாவும் மாறியிருக்க மாட்டாள்...அவள் மாறாது இருந்திருந்தால் இவன் சிறைக்குப் போயிருக்க நேர்ந்திருக்காது. இப்படி கைகால் விரல்கள் முடங்கி திரும்பி வந்திருக்க வேண்டாம். யார் கண்ணிலும் படாமல், இருட்டில் ஒதுங்கி நடந்து திருடன்மாதிரி ஊர்எல்லையை மிதித்திருக்க வேண்டாம். சின்ன வயதிலிருந்து சோறு போட்டு வளர்த்த அத்தையின் வீட்டை விட்டு சாமியார் வீட்டைத் தேடிக் கொண்டு போக வேண்டிய அவசியமில்லை...

ஆனால், இவையெல்லாம் நிகழாது போனால் ஆண்டவனுக்குப் பொழுது எப்படிப் போகும்? தன் பொழுதைக் கடக்கத்தானே மற்றவர்களின் மனதையும், எண்ணங்களையும், நினைப்பையும், நெஞ்சையும் மாற்றி—நிறம் மாறவைத்து விளையாடுகிறான்! அந்த விளையாட்டில் சிக்காமல், சிந்தனையைச் சிதறவிடாமல்,பொருள் பற்றில்லாமல் சாமியார் மாதிரி திடமாக நிற்பவர்கள் இல்லாமல் போகவில்லை...சரி,இன்று இவ்வளவு யோசிக்கிற தான் அன்று இதில் சிறிதளவு யோசனைக்கு இடம் கொடுத்திருந்தால்? சகுந்தலா மீதுவைத்திருந்த அன்பை சாதாரண



மாக்கிக் கொண்டிருந்தால்? அவளது மனமாற்றத்தை உதறித் தள்ளுகிற பக்குவம் பெற்றிருந்தால்...?

எல்லாவற்றையும் தடுத்திருக்கலாம்...ஊரில் இருக்கும் மற்ற இளைஞர்களைப்போல சாதாரணமாக வாழ்ந்திருக்கலாம். இந்த சகுந்தலா இல்லாவிட்டால் இன்னொருத்தி என்று வேறு எவளையாவது கல்யாணம் பண்ணிக் கொண்டு சொந்தமாகவே ஒரு பட்டறை வைத்து, இதற்குள் இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனாகி...

கற்பனை சுகமாக இருந்தது. நிம்மதியைத் தந்தது. அந்த நிம்மதியிலும், சுகத்திலும் நடந்ததில் சீக்கிரமாக தூரத்தைக் கடக்க முடிந்தது. குளத்தங்கரையைத் தாண்டி புதர் வழியாக வந்து சாமியார் வீட்டை நெருங்கினபோது மனது படபடத்தது. வீட்டு வாசலில் மங்கல விளக்கு எரிய திண்ணையிலேயே அவர் உட்கார்ந்திருப்பது கண்ணில் பட்டது. எதிரில் யாரோ கைகட்டி நின்று பேசிக் கொண்டிருந்ததால் இவன் நகர்ந்து இருட்டில் ஒதுங்கினான். சிறிதுகூட மாறாமல் சாமியார் அப்படியே இருந்ததில் ஆச்சரியப்பட்டான்.

அதே இரட்டைநாடி சரீரம். சிவப்புத் துணியில் வேஷ்டி. மேலே சிவப்பு வஸ்திரம். நீளமான தாடி. அன்பாய் ஆதரவாய், சின்னக் குழந்தையாகப் பார்க்கும் பார்வை. கள்ளமற்றச் சிரிப்பு. முகத்தின் சாந்தம். வெறும் சாந்தம் மட்டுமின்றி ஓர் ஆகர்ஷண சக்தியும் இருப்பதை இவன் கவனித்திருக்கிறான்... இவனைச் சிறு பிள்ளையாக விட்டு விட்டுப் பெற்றவர்கள் காலமானதிலிருந்து சில காலம் சாமியாரிடம் வளர்ந்திருக்கிறான். சாமியார்தான் பின்னர் மாமாவிடமும், அத்தையிடமும் ஒப்படைத்தவர். பக்கத்து ஊரில் இருந்த அவர்களை இங்கே வரவழைத்தவர். அப்போது இவன் அந்த வீட்டிற்குப் போனபோது சகுந்தலா கைக்குழந்தை. அவளை விட்டுத் தூளி ஆட்டியிருக்கிறான்.

"டேய் செந்தில், பாப்பாவைப் பார்த்துக்கடா...ஒரே நடைகுளத்துக்குப்போய் தண்ணி மொண்டாந்துடறேன்."

—என்று அத்தை அவளைப் பத்து வயதுப் பையனான இவனிடம் விட்டுவிட்டுப் போவாள். இவன் வெள்ளை வெளேறென்றிருக்கும் அதன் குண்டுக் கன்னங்களில் முத்த மிடுவான். வழவழவென்றிருக்கும் கைகால்களைத் தடவிக் கொடுப்பான். செப்பு மாதிரிச் சிவந்திருக்கும் வாய்க்குள் விரலை விட்டுக் கடிக்கச் சொல்லி சந்தோஷப்படுவான். கையில் தூக்கி வைத்து விளையாட்டுக் காட்டுவான். மேலே சிறுநீர் கழித்தால்கூட அசிங்கப்பட்டுக் கொள்ள மாட்டான். அதைப் பார்த்து அத்தை சிவகாமி சிரித்துக் கொள்வாள்.

"போய் உடுப்பை மாத்திக்கிட்டு வாடா" என்பாள்.

"இருக்கட்டும் அத்தை...யாரு, நம்ம சகுந்தலா தானே இருந்திச்சு..."

"அட...அவ்வளவு ஆசையடா அவ மேல? அப்போ பெரியவளானதும் நீயே கட்டிக்கிட்டு... எனக்கும் மாப்பிள்ளை தேடற கஷ்டமிருக்காது!"

இவன் முகம் அந்த இனம்புரியாத வயதிலேயே அதைக் கேட்டு பிரகாசமாகும். கண்கள பளபளவென்று மின்னும்.

"நிஜமாவா சொல்றீங்க அத்தை?"

"நெசமாத்தான்டச் சொல்றேன்..."

"அப்புறம் வாக்கு மாறக்கூடாது."

"படவா! இந்த வயசுலேயே இந்தப் பேச்சா பேசற...? ஏன்டா, அண்ணன் பேரு சொல்ல — அவுரு வம்சம் விருத்தியாக இருக்கிற உன்னை விட்டுட்டு வேற யாருக்குடா கொடுப்பேன்?"

"நீங்க அண்ணன் மகன்னு சொல்றீங்க...ஆனா, மாமா என்ன சொல்லுவாரோ?"



"இதப் பாருங்க இவன் பேசறதை...சகுந்தலாவை இவனுக்குத்தானே கட்டித் தரப்போகிறோம். சொல்லி டுங்க..."

வெளியிலிருந்து உள்ளே நுழைந்த அவர் முற்றத்து வாளியிலிருந்து செம்பால் நீர் எடுத்து காலைக் கழுவிக் கொண்டே அவனைப் பார்த்து புன்னகைப்பார்.

"இத பாரு செந்தில்...நீ நல்லாபடிச்சு பி.ஏ. பாஸ் பண்ணியானால் சகுந்தலா உன்னைக் கட்டிக்கும். என் கடை உனக்குக் கிடைக்கும். படிக்காம மாந்தோப்பையும், சாமியார் வீட்டையும் சுத்திக்கிட்டு வந்தால் சகுந்தலா வக்குப் படிச்ச மாப்பிள்ளையா பார்த்துக் கட்டி வச்சிடு வேன். என்ன சொல்ற?"

"வேணாம் மாமா! சகுந்தலாவை எனக்கே கட்டிக் குடுங்க...மாமா...நான் நல்லாப் படிக்கிறேன் மாமா..."

சொல்கிறபோதே இவன் கண்களில் நீர் நிறைந்து கன்னங்களில் வழியும். அந்த வயதிலேயே சகுந்தலாவை வேறு யாரும் திருமணம் செய்து கொள்ளக்கூடும் என்கிற நினைப்பே நெஞ்சை எரிக்கும். நிலைகொள்ளாமல் தவிக்க வைக்கும். உப்புக் கரிப்பாக இறங்கும். வெறுப்பாக ஆக்கிரமித்துத் தவித்துப் போவான். நிலைகொள்ளாமல் பேச்சாக இறக்கி வைக்கப் பார்ப்பான்.

"அத்தை, சொல்லுங்க அத்தை...நான் நல்லா படிக் கிறேன்னு மாமாகிட்ட சொல்லுங்க... சகுந்தலாவை எனக்கே கட்டித்தரேன்னு சொல்லச் சொல்லுங்க. அப்பத் தான் சாப்பிடுவேன். இல்லாட்டி எத்தனை நாளானா லும் சாப்பிடாமலே செத்துப் போவேன்..."

"செத்துப் போவியா...? கம்மனாட்டி! என்னடா பேசற...போடா! போயி சாப்பாடு போடச் சொல்லி சாப்பிடு!"

"நீங்க சரின்னு சொல்லுங்க மாமா சாப்பிடறேன்."

"எதுக்குடா சரி சொல்லணும்?"

''சகுந்தலாவை எனக்கே தரேன்னு சொல்லணும்...''

''சரி, தரேன். போ!''

''நிஜம்மா...''

''நிஜம்மாத்தாண்டா!''

''சத்தியமா?''

''சத்தியமாத்தான்''

''அப்ப சரி, போறேன்.''

அவன் குதித்துக் கொண்டு எழுந்து ஓடுவான். மறு நாள் பள்ளிக்கூடம் போகிறபோது சாமியாரைப் பார்த்துச் சொல்லுவான் :

''சாமி...சகுந்தலாவை எனக்கே கட்டித் தரேன்னு மாமாவும், அத்தையும் சொன்னாங்க...''

''என்ன...என்ன...?!'' என்று தன் கனிவான பார்வையால் அவனைத் தடவிக் கொடுப்பார் அவர். பின் உள்ளே திரும்பி மனைவிக்குக் குரல் கொடுப்பார் :

''கோமதி...கொஞ்சம் இங்கே வா. இவன் என்னவோ சொல்றான், கேளு!''

ஃ ஃ ஃ

சாமியார் என்றால் அவர் சந்நியாசி இல்லை...பரம் பரையாகக் குருக்கள் தொழில் செய்பவர். அதிலிருந்து விலகி இவர் வெறும் யாகங்கள் மட்டுமே செய்தார். கோயம்பத்தூர் மில்முதலாளிகளின் வீட்டில் ஹோமம் நடத்தினர். பெரிய பெரிய கோவில்களில் சண்டியாகம் செய்து கொடுத்தார். சிலநாட்களில் இவர் வீட்டு வாச லில் காராக நிற்கும். சேலம், கோயம்புத்தூர் என்றுசுற்றி யுள்ள ஊர்களைத் தவிர—திருச்சி, தஞ்சாவூர், சென்னை என்று பெரிய பெரிய பட்டணங்களிலிருந்தெல்லாம் கூட காரைப் போட்டுக் கொண்டு வந்து இவரை அழைத் துப்போவார்கள். வீடு, தொழிற்சாலை, மில், வியாபார



ஸ்தலங்களில் சாந்தி செய்யச் சொல்வார்கள்...பூஜை போட வைப்பார்கள். அவர் ஒருமுறை வந்து போனால் அந்த இடம் செழிக்கும் என்கிற நம்பிக்கை இருந்தது. வியாபாரம் பெருகும் என்பது நிஜமாயிற்று. அங்கு வரு கிற எல்லாரும் சாமியாரின் காலடியில் பணத்தைக் கொட்டத் தயாராக இருந்தார்கள். அந்தச் சின்ன வீட்டை இடித்துப் பெரிதாக வீடு கட்டிக் கொடுக்க முன் வந்தனர். சாமியாரைக் கேட்காமலே பிளான் போட்டு இன்ஜினியர்களை அழைத்தும் வந்துவிட்டனர்...

ஒருநாள் காலையில் இரண்டு பெரிய அம்பஸிடர் கார் களிலிருந்து நிறைய ஆட்கள் இறங்கி திபுதிபுவென்று உள்ளே நுழைந்தனர். பின்னாலேயே ஒரு லாரி நிறைய சிமெண்ட் மூட்டைகளும், இன்னொன்றில் செங்கற்களும் வந்தன.

உள்ளே நுழைந்த ஆட்களை ஒன்றும் புரியாமல் பார்த்தார் சாமியார்.

''சாமி...எழுந்திருங்க! அம்மா, நீங்க-குழந்தைகள் எல்லாம் கொஞ்ச நாளைக்கு நம்ம வீட்ல வந்து இருக் கணும்...''

—பேசினவரின் அவசரத்தையும், பதட்டத்தையும் பார்த்து குழந்தையாகச் சிரித்துக் கொண்டே கேட்டார் அவர் :

''அவ்வளவுதானே... வந்து இருந்துட்டாப் போச்சு! ஆமாம்; என்ன, இவ்வளவு அவசரமா கூப்பிடறீங்க?''

''அவசரம்தான் சாமி... இன்னிக்கே சாமான்களை நகர்த்திட்டு வீட்டை இடிக்க ஆரம்பிச்சுடுவாங்களே...''

''வீட்டை இடிக்கப் போறீங்களா? எந்த வீட்டை?''

''நம்ம வீட்டைத்தான் சாமி...''

"நம்ம வீடுன்னா...இதையா?"

"ஆமாம் சாமி!"

அரண்டுபோய் விட்டார் அவர். இந்த வீட்டை இடிப்பதா...?' காலம் காலமாய் தொன்று தொட்டு வருகிற இதையா? முன்னோர்கள் வசித்ததெல்லாம் போகட்டும்...தற்போது தேவிவாசம் செய்வதாக நம்புகிறாரே இதையா? முக்கால்வாசி நாட்கள் கனவில் சின்னஞ்சிறு சிறுமியாக பளிச்சென்ற முகமும், சிரிக்கிற உதடுகளும், சுரீரென்று மனசைத் தொடுகிற பார்வையுமாக, பட்டுப் பாவாடை சட்டையுடன், உடம்பு கொள்ளாத நகைகள் பளபளக்க மெல்ல முன்பாவாடையை லேசாய் தூக்கி மெத்தென்ற பாதங்களால் அடிவைத்து வந்து அவரைத் தொட்டு எழுப்பி...

"என்னப்பா...நான் வந்திருக்கேன். இன்னுமா தூங்கறே?"

உதறிப்போட்ட மாதிரி எழுந்து உட்காருவார் அவர், கண்ணெதிரில் தெரிகிற கருணை மின்னலுக்குக் கைகூப்புவார். அந்த மின்னல் சிரித்துக் கொண்டே சொல்லும்:

"ம்...இன்னும் தூக்கம் கலையலையா...? எழுந்து போய் குளிச்சிட்டு வந்து பூஜை பண்ணு! வா. நான்போய் உள்ளே உட்கார்ந்துக்கறேன்..."

சலங்கை சப்திக்க, கொலுசு சப்திக்க, பாதங்களும், முகமும் கைகளும் பளீரென்று இதமாய் கண்களைத் தொட, சிவப்புப் பட்டுப்பாவாடை சரசரக்க நடந்து பூஜை அறைக்குள் நுழைந்து சட்டென்று மறைந்து போக—

இவர் தன்னுணர்வு பெற்றவராக, 'அம்மா..அம்மா..' என்று அரற்றிக்கொண்டே, பெற்ற தாயின் புடவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு ஓடுகிற குழந்தையாகப் பின் பக்கம் போய், சரசரவென்று இரண்டு வாளித் தண்ணீர் இழுத்து தலையில் ஊற்றிக் கொள்வார். அப்படியே



ஈரம் சொட்டச் சொட்ட உள்ளே வந்து, "இதோ வந்துட்டேம்மா...இதோ வந்துட்டேன்..." என்று சொல்லிக் கொண்டே விபூதி பூசி குங்குமம் இட்டுக் கொள்வார்.

"கோமதி...அம்மா கோமதி எழுந்திரும்மா! அம்பாள் வந்திருக்காள்! பூஜை பண்ணச் சொல்லி எனக்கு ஆக்ஞை இட்டிருக்காள்...நான் பூஜை பண்ணப் போறேன். நீ நைவேத்தியத்திற்கு ஏதாவது பண்ணி ஆற வச்சுக் கொண்டு வா..."

—சொல்லிவிட்டு அவர் பூஜை அறைக்குள் நுழைய, அந்தம்மாளும் அந்த நேரத்திற்குக் குளித்து மடியாகப் பாயசமோ, சர்க்கரைப்பொங்கலோ பண்ணி விசிறிக் கட்டையால் விசிறி ஆறவைத்துக் கொண்டு வந்து வைப்பாள். அவர் பூஜை முடிந்து, "அம்மா...அமுது செய்யம்மா...கோமதி. அம்பாள் சாப்பிடறாடி...இந்த ஏழையின் வீட்டுக்கு வந்து சாப்பிடறா பாருடி...!" என்று உருகிக் கண்ணீர் விட்டுத் தாங்க முடியாமல் அழுவார்.

கோதியம்மாளின் கண்களுக்கு அம்பாள் கடாட்சமளித்ததில்லை என்றாலும், கொண்டு வந்து வைக்கும் பாயாசமோ, சர்க்கரைப்பொங்கலோ கணிசமாகக் குறைந்திருப்பதையும் கண்ணெதிரில் குறைவதையும் பார்த்து அப்படியே ஆணியடித்த மாதிரி நின்றிருக்கிறாள்.

"என்னம்மா...தாயே...போயிடாதேம்மா..."

—அவர் அதே சந்தோஷமும், துக்கமும் கலந்த குரலில் கெஞ்ச...

"ம்ஹூம்...நான் போகமாட்டேன். இங்கே இந்த இடத்திலேயே இருப்பேன். அப்பப்போ வெளியில போயிட்டு வந்துடுவேன், என்ன...? கதவை சாத்திண்டு போ. நீயும் கொஞ்ச நாழி தூங்கு. நானும் தூங்கறேன்..."

"அம்பாள் தூங்கட்டும். வா கோமதி! சத்தப் படுத்தாமல் கதவை சாத்திண்டு வா..."

பூஜையறைக் கதவை ஒருக்களித்து மூடிக் கொண்டு வந்து படுத்துக் கொள்வார்.

அப்படி ஒரு நாளா, இரண்டு நாளா? எத்தனை நாள்கள், எந்தெந்த மாதிரியெல்லாம் அம்பாள் விளையாட்டு காட்டியிருக்கிறாள்... "இந்த வீட்டை இடிப்பதா? புதிதாய்க் கட்டுவதா? இது என்ன சோதனை தாயே... நீயே என்னை சோதிக்கிறாயம்மா? நான் ஆசைகளுக்கும், வசதிகளுக்கும் அடிபணிகிறேனா என்று பார்க்கிறாயம்மா... இதுவும் உன் விளையாட்டுகளில் ஒன்றா? இதில் வெற்றி பெறப்போவது நான்தானே தவிர, நீயில்லையம்மா!"

அவர் ஆசைகளால் தொடப்படாத தன் இதயத்தை நிமிர்த்தி அவர்களை இயல்பான புன்னகையோடு பார்த்தார்.

"இதோ பாருங்கபுருஷோத்தமன்... நீங்க என் வீட்டை நன்னா கட்டித் தரணும்னு ஆசையா ஓடி வந்திருக்கீங்க! உங்க ஆசையை ஏற்றுக்கணும்னு எனக்கும் ஆசையாகத் தான் இருக்கு. ஆனால் அம்பாள் வேற விதமா ஆசைப் படறாளே..."

"சரி. அம்பாளுக்கு எப்படி ஆசையோ, அப்படியே செய்திடலாம் சாமி!"

"நிஜமாகத்தானே சொல்றீங்க?"

"சத்தியமாச் சொல்றேன் சாமி..."

"அப்படின்னா, வீடு இப்படியே இருக்கட்டும்!"

"என்ன... என்ன?"—இப்போது வந்தவர் அதிர்ந்து நிற்க, சாமியார் பேசினார்:

"இந்த வீடு இப்படியே இருக்கணும். இதை இடிக்கவோ, மாற்றவோ கூடாதுன்னு அம்பாள் அபிப் பிராயப்படறா... அதனால இப்படியே இருந்துட்டுப் போகட்டும்...!"



வீடு மட்டுமில்லை; கோயம்புத்தூர் மில் முதலாளி கொடுத்த காரையும் அதுபோலவே திருப்பியனுப்பினார். தட்டில் பணம் வைத்து யார் கொடுத்தாலும் தொட மாட்டார்:

"பழக்கமில்லீங்க.... இப்படியெல்லாம் பணத்தைத் தொட்டுப் பழக்கமிலலிங்க. தேவைக்கு அதிகமா சேர்த்து வைக்கிறது பழக்கமில்லாமப் போச்சு. பழம் வையுங்க—சாப்பிடறேன். பூ வையுங்க—அம்பாளுக்கு சாத்தறேன். இந்தக் கவரை மட்டும் எடுத்திட்டுப் போயிடுங்க..."

இப்படி ஆசைகளே அற்றுப் போனதால்தான் அவரை சாமியார் என்று கூப்பிடுகிறார்களோ என்று நினைத்திருக்கிறான் செந்தில். அல்லது அந்த தாடியையும், சிவப்பு வேட்டியையும், தேஜஸையும், கண்களின் கருணையையும், சிரிப்பின் கபடமற்ற குழந்தைத்தனத்தையும் பார்த்து சாமி என்று கூப்பிடத் தோன்றியிருக்க வேண்டும்... மற்றபடி அவர் சந்நியாசி இல்லை. மனைவியும்—குழந்தைகளும் உண்டு. கல்யாணி என்றொரு பெண்ணும், கருணாகரன் என்ற பையனும் உண்டு. கணவனின் பின் செல்லும் சாது மனைவி. அதிர்ந்து பேசி அறியாத குழந்தைகள். சின்ன வீடு. பெரியபூஜை அறை இவ்வளவுதான்.

இன்னும் அந்தக் கிராமத்து மக்களுக்கு அவரது பெயர் என்னவென்று தெரியாது. பூர்வாசிரமம் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்தது அவர் சாமிதான்... அவர் சொல்கிற வார்த்தைகள் மந்திரம்தான்!

ஃ ஃ ஃ

அப்படிப்பட்டவரிடம் ஓடிப்போய் தன் எண்ணத்தை, ஆசையை வெளியிட்டவுடன்—அது நிறைவேறி விட்டதாகவே நினைத்தான் செந்தில்.

"சாமி... சகுந்தலாவை எனக்குக் கட்டிக் கொடுக்கிறதா மாமாவும்—அத்தையும் சொன்னாங்க..."

உள்ளேயிருந்து வந்த அவர் மனைவி கோமதியம்மாள் காதிலும் விழ இன்னொரு தரமும் சொன்னான்.

"அப்படியா...ரொம்ப சந்தோஷம்டா குழந்தே!'"

—அந்த அம்மாள் அதே சந்தோஷத்துடன் சிரிக்க, அவன் மீண்டும் சாமிகளின் முகத்தைப் பார்த்தான்.

"ஆனால், நான் நல்லா படிக்கணும்னு மாமா சொன்னாங்க. அப்பத்தான் சகுந்தலாவைக் கட்டிக் கொடுத்து, மளிகைக் கடையையும் என் பேருக்கு மாற்றித் தருவாராம்."

''அவர் சொன்னதில் தப்பு என்னடா குழந்தே...? நன்னாப் படி. மளிகைக் கடை, சகுந்தலா ரெண்டையும் கட்டி ஆளு! ராஜா மாதிரி இரு...''

அந்த அம்மாள் சொல்லிவிட்டு உள்ளே போய்விட, அவன் சாமியார் அருகில் போய் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்டான்:

',ஏன் சாமி, நீங்க ஒண்ணும் சொல்லலை?''

அவர் சிரித்துக் கொண்டே அவனது தலையை வருடினார். ''நான் சொல்ல என்ன இருக்குப்பா? அம்பாள் நினைக்கிறபடி எல்லாம் நடக்கும். இதுல மனசை அலைய விடாமல் முதல்ல படியப்பா...இந்த வயசில படிப்புதான் முக்கியம்."

அவன் அதைக் காதில் போட்டுக் கொள்ளாதவனாக வெளியில் ஓடிவிட்டான்.

# 4

அதெல்லாம் பேசி முடிவு பண்ணி, சகுந்தலா செந்திலுக்குத்தான் என்று தீர்மானித்து கிட்டத்தட்ட சில வருடங்கள் ஆயின. இப்போது சகுந்தலா ஓரளவு விவரம் தெரிந்த பெண். பதினோரு வயதில் பதினைந்து வருட



வளர்ச்சி உடலில் தெரிந்தது வெள்ளை வெளேரென்று நிறம். மூக்கும், கண்களும் நல்ல அழகு. உயரம். சற்றே சதைப் பிடிப்பான தேகம். அதனாலேயே பெரிய பெண்ணாகத் தெரிந்தாள். தாவணி அணிந்து செந்திலை இன்னமும் கட்டிப் போட்டாள்

அவன் பள்ளி இறுதிவகுப்பு படித்துக் கொண்டிருந்தான். லேசாய் மீசை கருமை ஓடத் தொடங்கி, வெடவென்று வளர்நதிருந்தான். அவனும் நிறம்தான். ஆனால் சகுந்தலா மாதிரி நிகுநிகுவென்ற நிறமல்ல. பள்ளிக்கூடத்திற்கு நடந்து போய் வருவதால் வெயிலில் கறுத்திருந்தான். தினமும் சாயந்திர நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் மாமாவின் கடைக்கு ஓடுவான், கணக்கு சரிபார்ப்பான். கடைப் பையனை எதிர்பார்க்காமல் மடமடவென்று பொட்டலம் கட்டுவான். கை கணிசமாகப் பொருட்களை எடுக்கும், ஒரு பருப்பு கீழே சிந்தாது. கடுகு நிறத்தால்கூட சிந்தாது. அநத நேர்த்தியிலும், லாவகத்திலும் துரைசாமி வெளியில் காட்டிக் கொள்ளாமல் உள்ளுக்குள்ளேயே சந்தோஷப்பட்டுப் போயிருக்கிறார்.

"நாமில்லா விட்டாலும் பயல் பிழைச்சுப்பான்! நல்ல சுறுசுறுப்பு. கெட்டிக்காரன்...இவனைவிட நல்ல மாப்பிள்ளையாக சகுந்தலாவிற்கு எங்கிருந்து கிடைக்கப் போகிறான்?'

ஆனாலும் அவரின் அடிமனதிற்குள் ஒரு நெருடல் இருந்தது. 'சகுந்தலாவிற்கு இவனைப் பிடிக்குமோ' என்கிற சந்தேகம் தோன்றியது. செந்தில் அவளைச் சீண்டுகிறபோதெல்லாம் கவனிக்காத பாவனையில் கவனித்திருக்கிறார் அவர்.

''சகுந்தலா, இங்க கொஞ்சம் வாயேன்!''

அவள் அருகில் போகாமல் இருந்த இடத்திலிருந்தே திருப்பிப் பார்த்து கேட்பாள் :

''என்ன?''

''கிட்டத்தான் வந்து கேளேன்!''

''வேணாம்...இங்கேயே நிக்கறேன். சொல்லு...''

''அப்ப, நான் எழுந்திருச்சு வரட்டுமா?''

''வேணாம்...வேணாம். அங்கிருந்தே சொல்லு...''

''எதுக்கு இப்படி வெட்கப்படறே? அப்புறம் என் பக்கத்துலதானே காலம் பூரா இருக்கணும்...நான் தானே உன்னைக் கட்டிக்கப் போறவன்...''

''ஐய...ஆசையைப் பாரு! உன்னைக் கட்டிக்கிறதா? அப்படியெல்லாம் வேற நினைச்சுட்டிருக்கியா...?—அவள் முகத்தைக் கோணி அழகு காட்டுவாள்.

அதையும் ரசிப்பான் அவன்.

''நான் மட்டுமல்லே ... அத்தையும் — மாமாவும் கூட அதையேதான் நினைக்கிறாங்க.''

''நினைச்சால் அவங்கதான் கட்டிக்கிடணும்!''

''ஏய்...எனக்குத் தெரியும். வெட்கப்பட்டுத்தானே இப்படிப் பேசறே?''

''ஆமாம்! வெட்கப்படறாங்க...உன்கிட்ட என்னா வெட்கம் வேண்டிக் கிடக்கு? நீ என்ன அந்நியமா...புதுசா வந்தவனா? சின்னப்பிள்ளையிலேருந்து பார்த்து வளர்ந்தவன்தானே?''

''அதனால...? தோட்டத்துக் கீரைன்னால் பறிக்க மாட்டாங்களா, சமைக்கமாட்டாங்களா?''

''யார் சமைப்பாங்களோ...எனக்குப் பிடிக்காது; ருசி இருக்காது...''

—இந்த மாதிரி அவள் பேசுவதை நிறைய தரம்கேட்டிருக்கிறார் துரைசாமி. அதை விளையாட்டாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. மகளைக் கூப்பிட்டுக் கேட்டுவிட



வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த போதுதான் அது நிகழ்ந்தது...

அன்று சேலம் போய் கணிசமாக சரக்கு பிடித்துக் கொண்டு வந்திருந்தார். சேலத்தில் இரண்டு நாட்கள் தங்க நேர்ந்ததால் தங்கிவிட்டே வந்திருந்தார். நல்ல வெயிலில் ஒரு பெரிய சாக்கு மூட்டையை சைக்கிளின் பின்னால் வைத்துக் கட்டி மிதித்துக் கொண்டு வந்ததில் லேசாகத் தலைசுற்றுகிறதோ என்றுநினைத்து, சைக்கிளை நடையில் ஏற்றி ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி, மூட்டையைக்கூட இறக்காமல் பெஞ்சில் வந்து சரிந்து விட்டார். அப்போது வீட்டில் சகுந்தலா இல்லை. உள்ளே உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்த செந்தில் அத்தையின் குரல் கேட்டு ஓடிவந்தான்.

''என்ன அத்தை, எதுக்கு சத்தம் போடறீங்க?''

''இதப் பாருடா...சேலம் போய் வந்தவரு, கண்ணு இருட்டுதுன்னு பெஞ்சில சரிஞ்சுட்டாரு...''

இவனும் பதறிப் போய் மாமாவிடம் ஓடினான். அவர் முகத்தைத் திருப்பி, ''என்ன செய்யுது மாமா?'' என்று கேட்டான். அவரிடமிருந்து பதில் வரவில்லை.

''அத்தை, ஓடிப்போய் ஒரு டம்ளர் தண்ணி கொண்டு வாங்க...''

அவன் தண்ணீர் கொண்டு வருவதற்குள் அவருக்குக் கண்கள் செருகி தலை தொய்ந்தது. ஏதோ பேச முயற்சி பண்ணின குரல் இழுத்துக் கொண்டே போய் சட்டென்று எல்லாமே அடங்கி விட்டது. அது புரியாத செந்தில் முகத்தில் கை கையாய் தண்ணீர் ஊற்றி அடித்தான். 'மாமா...மாமா' என்று கூப்பிட்டுப் பார்த்தான். பதில் வராமற் போகவே,

''இருங்க அத்தை...நான் போயி சாமியாரைக் கூட்டிட்டு வரேன்'' என்று ஓடினான்.

சாமியார் வந்து பார்த்த உடனே அவருக்குப் புரிந்து போயிற்று. துரைசாமியின் உடலை நேராக்கி, கைகளை மார்பின் குறுக்காக மடித்து வைத்து, கண்களை மூட—

சிவகாமி, ''ஐயோ...போயிட்டீங்களா...?'' என்று அவர் உடலின்மேல் விழுந்து கதறத் தொடங்க-

வெளியில் போயிருந்தசகுந்தலா உள்ளே நுழைந்தாள்.

## 5

**ப**த்து நாள் காரியமெல்லாம் முடிந்து அத்தை மூலையில் முடங்க, சகுந்தலா சமையல் வேலை பார்க்க, செந்தில் படிப்பை நிறுத்திவிட்டு கடைக்குப் போய் கல்லாப்பெட்டியடியில் உட்கார்ந்தான். முதல்நாள் அப்படி உட்கார்ந்தபோது அழுகை குமுறிக் குமுறி வந்தது.

'டேய், நீ படிச்சு பி.ஏ. பாஸ்செஞ்சயான்னா சகுந்தலா, கடை இரண்டும் உனக்கு...இல்லாட்டி போனா படிச்ச பையனாப் பார்த்து சகுந்தலாவுக்குக் கட்டி வச்சிடுவேன்...''

அவர் ஆசைப்பட்ட மாதிரி அவனால் படிக்க முடியவில்லை. அதற்கு அவரே காரணமாகிப் போனார். அவருக்குப் பின்னால் கடையைக் கவனிக்க வேண்டிய பெரிய பொறுப்பு இருந்தது. வேறு யாரை நம்பியும் கடையை ஒப்படைக்க முடியாது. சரியாக வியாபாரம் நடைபெறாது. நடைபெற்ற வியாபாரத்திற்கும் கணக்கு வராது. வந்த பணம் வீடு வந்து சேராது. அவன் ஒருவன் மட்டும்தான் என்றால் கவலை இல்லை. கடையைப் பற்றின பொறுப்பு இல்லை. இழுத்து மூடி பூட்டைத் தொங்க விட்டு விட்டு சாமியாரிடம் போய் சேர்ந்து விடுவான்...

'சாமி, கருணாகரன் மாதிரி என்னையும் இன்னொரு பிள்ளையா நினைச்சுக்குங்க...' என்று உரிமையோடு கேட்டு விடுவான். அங்கேயே சாப்பிட்டு, அங்கேயே தங்கி, அவரையே பணம் கட்டச் சொல்லிப் படிப்பையும் முடித்து விடுவான்.



இப்போது அப்படியெல்லாம் செய்யமுடியாது. அவன் தனிமனிதனில்லை. அத்தையும், சகுந்தலாவையும் காப்பாற்ற வேண்டும்... அவர்களைப் பசியாமல் பார்த்துக் கொள்வதோடு குறையில்லாமலும் வைத்துக் கொள்ள வேண்டும்...மாமாவின் இடத்தை நிரப்ப வேண்டும்.

இவை அத்தனையும் நிறைவேற வேண்டுமானால் அவன் சுயநலமாகச் சிந்திக்க முடியாது. படிப்பு ஒன்றையே நினைத்துக் கொண்டிருக்க முடியாது. தன் படிப்பைவிட சகுந்தலாவின் படிப்பு முக்கியம். பெண்கள் பள்ளிக்கூடத்தில் ஒன்பதாவது படிக்கிற அவளை +2 முடிக்க வைத்து விட வேண்டும், எந்தக் காரணத்தினாலும் அவளது படிப்பு தடைபட்டு விடக் கூடாது. அவளது ஆசை நிறைவேறாமல் போகக்கூடாது. தன் சகுந்தலா அவள்... தனக்கே உரித்தான சகுந்தலா...தனக்கு மட்டுமே சொந்தமான சகுந்தலா!

சகுந்தலா...சகுந்தலா...சகுந்தலா...!

உள்ளே இழுக்கும் மூச்சுக்காற்று சகுந்தலா...வெளிவிடும் மூச்சிலும் சகுந்தலா!

அவளுக்காகவே அவன் கடைக்குப் போனான். கணக்கு எழுதினான். கல்லாப்பெட்டியினடியில் உட்கார்ந்தான். காசு சேர்க்க ஆசைப்பட்டான்.

மாமா போனபின் மூலையில் முடங்கிக் கிடந்த அத்தையை சந்தோஷப்படுத்துகிற விதமாகப் பேசினான்:

''அத்தை, இப்படியே அழுதுகிட்டிருந்தா எப்படி? எத்தனை நாளைக்கு இந்தமாதிரி முடங்கிக் கிடக்கிறது...? எழுந்திருங்க அத்தை...மாமா விட்டுப்போன அத்தனைப் பொறுப்பையும் நான் நிறைவேத்தறேன், மாசம் நூறு ரூபாய் மிச்சம் பிடிச்சு சகுந்தலாவுக்கு ஒவ்வொரு நகையா செய்து போட்டுடறேன். முதல்ல அது ஒரு ஜிமிக்கிக்கு ஆசைப்படுது. அதை வாங்கிக் கொடுத்துடறேன். அப்புறமா வளையல், சங்கிலி எல்லாம் செய்துக்கலாம். அது படிப்பை முடிச்சிடட்டும். கல்யாணத்தை வச்சுக்கிடலாம், என்ன?...''

மூலையை விட்டு எழுந்து உட்கார்ந்தாள் அவள். கண்களைத் துடைத்துக் கொண்டே பேசினாள்:

''படிப்பு எதுக்கப்பா பொம்பளைப் பொண்ணுக்கு? அவரோட திவசம் முடிந்த கையோட கல்யாணத்தை வச்சுக்கிடலாம்...''

''இல்லே அத்தை...அது படிக்கணும்னு ஆசைப்படுது. படிக்கட்டுமே...''

''படிச்சு என்ன செய்யப் போவுது?

''அப்படியா? இது படிச்சுச்சுன்னா குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்கும்...அதுகளை நல்லா முன்னேற வைக்கும்.''

''என்னமோப்பா...நான் சொல்றதை சொல்லிட்டேன். அப்புறம் உன் இஷ்டம், அவ இஷ்டம்!''

அவள் பெருமூச்சுடன் எழுந்து போக, இவன் கடைக்குக் கிளம்பினான்.

## 6

அதுவரை பிசிறில்லாமல் போய்க் கொண்டிருந்ததில் இந்த இடத்திலிருந்தே லேசாய் தடம் புரளத் தொடங்கிற்று. அன்று, அந்தப் புது வாத்தியாரைப் பற்றி சகுந்தலா வீட்டில் வந்து சொன்னபொழுதுகூட இவன் சந்தேகம் எதுவும் படவில்லை. சாதாரணமாகத்தான் கேட்டுக்கொண்டான். இரண்டு பேரையும் உட்கார்த்தி வைத்து அத்தை சாப்பாடுபோட்டுக் கொண்டிருந்தபோது சகுந்தலா ஆரம்பித்தாள்:

''எங்க பள்ளிக்கூடத்துக்குப் புதுசா இங்கிலீஷ் வாத்தியார் வந்திருக்காரும்மா...''

''ம்...'' சிவகாமி அசிரத்தையாய்க் கேட்டாள்.

''பட்டணத்துலேருந்து வந்திருக்கார். நிறைய படிச்சிருக்காராம...''



''சரி. நீ இலைய பார்த்து சாப்பிடு. இன்னும் கொஞ்சம் சாதம் வைத்து கொழம்பு ஊத்றட்டுமா?''

''ம்ஹ்ூம்...வேணாம். போறும். அந்த இங்கிலீஷ் வாத்தியாரு பாண்ட்தான் போடறாரு. கிராப்பை நீளமா வெட்டிட்டிருக்காரு. அசப்புல ரஜினிகாந்த் மாதிரியே இருக்காரும்மா...''

''ஏண்டி, எவன் எப்படி இருக்கான்னு பார்க்க நீ பள்ளிக் கூடத்துக்குப் போறியா, இல்லே படிக்கப் போறியா?''

''ஏம்மா, கண் எதிர்ல வந்து உட்கார்ந்து பாடம் நடத்தற டீச்சரைப் பார்க்காம இருக்க முடியுமா?''

''அவனைப் பார்த்திட்டு அப்படி இருக்கான், இப்படி இருக்கான்னு வேற வந்து சொல்லணுமா?''

மகளைக் காந்தத் தொடங்கினாள் சிவகாமி.

''ஏம்மா...சொல்றது ஒரு தப்பா?''

''தப்பில்லாம ரொம்ப சரியா...? படிக்கிற பொண்ணுன்ற நினைப்பில எதை வேணும்னாலும் பேசிடறதா? உன்னைப் படிக்க அனுப்பறதே எனக்குப் பிடிக்கலை... சொன்னால் அவனும் கேட்க மாட்டேன்றான். வர சித்திரையில நிச்சயம் பண்ணி, ஆவணி மாசத்துலயாவது கல்யாணத்தை முடிச்சிடணும்...''

''என்னத்தை நீங்க...சாதாரண விஷயத்தைப் பெரிசு பண்ணிட்டு நீ கிளம்பு சகுந்தலா! பள்ளிக்கூடத்துக்கு நேரமாயிடுச்சு பாரு...''—செந்தில் முற்றுப்புள்ளி வைக்க, அவள் எழுந்து கை கழுவிக் கொண்டு போனாள். புத்தகங்களை அடுக்கி மார்பில் சரித்து, 'போயிட்டு வரேன்', என்று பொதுவாகச் சொல்லிவிட்டுப் போனாள்

அவள் போனபின் செந்திலும் கடைக்குக் கிளம்பினான். அன்று சரக்கு எடுக்க வேண்டியிருந்ததால் காலையிலிருந்து கடையைத் திறக்கவில்லை. இப்போது போய்த்

திறந்து என்னென்னதேவை என்பதைக்குறித்துக்கொண்டு தாராபுரம் போயாவது வாங்கிக்கொண்டு வரவேண்டும்... கடை சின்னது. கிராம மக்கள் வாங்குகிற நாலணா புளிக்கும், எட்டணா பருப்பிற்கும் அது போதுமானது தேவைக்கேற்ப குறைச்சலாகத்தான் சரக்கு பிடிப்பான். அதற்கே பணத்திற்குத் திண்டாடிப் போவான்.

இப்போதும் அப்படித்தான் திண்டாடினான். கடையில் சுத்தமாகச் சரக்கு இல்லை. யாராவது வந்து பத்துப் பைசா கடுகு கேட்டால்கூட கிடையாது. இன்று சரக்கு வாங்காது போனால் முடியாது. கையில் சரக்கிற்குத் தேவையான பணமில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

சரக்கு வாங்க வைத்திருந்த பணத்தில்தான் போன வாரம் சகுந்தலாவிற்கு அரை சவரனில் குடை ஜிமிக்கி வாங்கித் தந்திருந்தான். ஏற்கெனவே மாமா வாங்கி வைத்திருந்த பொன் தோட்டில் அதை மாட்டிப் போட்டுக் கொண்டு அழகு பார்த்தபோது, அந்த முகம் பூவாக மலர்ந்ததைக் காண இன்னும் சந்தோஷப்பட்டுப் போனான். இன்று காலைகூட அவள் அம்மாவிடம் அடம் பிடித்து அந்த ஜிமிக்கியை வாங்கிப் போட்டுக் கொண்டுதான் பள்ளிக்கூடம் போயிருந்தாள்.

''எதுக்குடி இப்ப ஜிமிக்கி...என்னா விசேஷம் பள்ளிக்கூடத்துல?''

''விசேஷம் ஒண்ணுமில்லேம்மா...என் சினேகிதக்காரப் பொண்ணுங்ககிட்டே காமிக்கணும். அன்னைக்கே மாமா ஜிமிக்கி வாங்கித் தந்ததைச் சொன்னேன். போட்டுட்டு வரச் சொல்லிக் கெஞ்சினாங்க. அதனால போட்டுட்டுப் போறேம்மா..."

''நசுக்கிடப் போறே...ஜாக்கிரதை!'' என்று நூறு ஜாக்கிரதை சொல்லித்தான் கொடுத்தாள் அத்தை.



அதைப் போட்டுக் கொண்டு கன்ன ஓரங்களில் இழையோட அவள் ஓடின சந்தோஷத்திற்கு முன் சரக்கு வாங்கப் பணமில்லாதது மிகச் சிறிய, அற்பமான விஷயமாகப் பட்டது செந்திலுக்கு. தாராபுரம் கடைக்காரர் தெரிந்தவர். கடன் சொல்லி மாதம் கொஞ்சமாகக் கொடுத்துவிட வேண்டியது என்கிற முடிவில் சட்டையைப் போட்டுக் கொண்டு புறப்பட்டபோது,

சின்ன அலுமினிய டிபன் டப்பியைத் தூக்கிக்கொண்டு வந்தாள் அத்தை. அவன் முகத்தை எதிர்பார்ப்பில் ஏறிட, அவன் கேட்டான்:

''என்ன அத்தை?''

"போற அவசரத்தில் சகுந்தலா டிபன் கொண்டுபோக மறந்திடுச்சு. நீ கொஞ்சம் அவ பள்ளிக்கூடம் பக்கம் போய் இதைக் கொடுத்திட்டுப் போயிடேன்...''

''ஓ...இதுக்கா தயங்குனீங்க... கொடுங்கத்தை... கொடுத்திட்டுப் போறேன்...''

அவன் டிபன் டப்பியை வாங்கிக் கொண்டு-தாராபுரம் போய்த் திரும்ப நேரமாகும் என்பதைச் சொல்லிவிட்டு, குடையை விரித்துக் கொண்டு நடந்தான். சகுந்தலாவின் பள்ளிக் கூடம் சற்றுத் தள்ளி இருந்தது. வயல்காட்டின் குறுக்கில் வரப்பில் நடந்து கடலைக் கொல்லையைத் தாண்டி, சவுக்குத் தோப்பைச் சுற்றிக் கொண்டு போக வேண்டும். அப்படிப் போனால பத்து மணி பஸ்ஸைத் தவறவிட நேரிடும். ஆனாலும் அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. தான் போகாது போனால் சகுந்தலா பகல் சாப்பாடு சாப்பிடாமல் பசியாகக் கிடப்பாள் என்கிற எண்ணத்தில் பஸ் தவறுவது பெரிய விஷயமில்லை என்று நினைத்தான். காலை எட்டிப் போட்டு வேகமாக நடந்து சவுக்குத் தோப்பை நெருங்கின போது, சிறிது தூரத்தில் போன பெண் சகுந்தலா மாதிரி இருந்தது. பக்கத்தில் பாண்ட் சட்டை போட்ட இளைஞன், சைக்கிளைத் தள்ளியபடி நடந்து கொண்டிருந்தான். பின்

புறமிருந்து பார்த்தால் அது சகுந்தலாதானா என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை. காலையில் சாப்பிட்டபோது அவள் கட்டிக் கொண்டிருந்த நீலப் பாவாடை, நீலத் தாவணியாகத் தான் தெரிந்தது. காதில் ஜிமிக்கி ஆடுகிறதா என்பதைப் பார்க்க நினைத்தான். தெரியவில்லை.

'சகுந்தலாவாக இருந்தால் கூடப்போகிற இளைஞன் யார்? அவள் சொன்ன இங்கிலீஷ் டீச்சராக இருக்குமோ? அப்படியே இருந்தாலும் எதற்காக அவனுடன் நடந்து போகிறாள்? யாராவது பார்த்தால் தப்பாகப் பேசுவார்களே... இந்தப் பெண்ணிற்கு ஒன்றும் தெரியவில்லையே...'

இவன் வேகமாக நடந்து அவர்களை நெருங்கினான். சகுந்தலாவேதான்! இவனைப் பார்த்ததும் சட்டென்று முகத்தில் ஒரு பயம் வர திடுக்கிட்டாள். பின் சமாளித்துக் கொண்டு, கூட வந்த சைக்கிள் இளைஞனைப் பார்த்துச் சொன்னாள்:

''சார். இவங்கதான் கொஞ்சமுன்னால நான்சொன்ன மாமா. செந்தில்னு பேரு...மாமா, இவரு எங்க இங்கிலீஷ் டீச்சர். பட்டணத்திலேருந்து வந்திருக்காரு. தங்க, நல்லதா ஒரு வீடு பார்த்துத் தரச் சொல்லிக் கேட்டுட்டிருந்தாரு...''

''ஹலோ...'' என்று வசீகரமான புன்னகையில் அந்த இளைஞன் கைநீட்டி செந்திலின் கையைப் பற்றிக் குலுக்கினான்.

''என் பெயர் சிவராமன். எம், ஏ. படிச்சு வேலையில்லாமல் கிடந்து இங்க, இவங்க ஸ்கூலுக்கு வந்திருக்கேன். இப்போ ஹெட்மாஸ்டர் வீட்டுல தற்காலிகமாகத் தங்கியிருக்கேன். அதான் இவங்களை வீடு பார்த்துத் தரச் சொல்லிக் கேட்டேன்...''

இயல்பான அவர்களின் பேச்சும், புன்னகையும் செந்திலுக்கு நிம்மதியைத் தந்தன. 'சீ, பாவம்! சாதாரணமாகத் தான் பேசிக் கொண்டு போயிருக்கிறார்கள்...படித்த



பையன், பட்டணத்துக்காரன். அதனால் சகஜமாகப் பழகுகிறான். இதில் தப்பு என்ன இருக்கிறது? நான்கூட ஓரளவு படித்தவன்தான், இந்தக் கிராமத்துக்காரங்களைப் போல் இதைத் தப்பாக எடுத்துக் கொண்டால் அப்புறம் என்ன வித்தியாசம்?'

செந்திலும் சிரித்தபடி அந்த இளைஞனின் கையைப் பற்றிக் குலுக்கியவாறு பேச ஆரம்பித்தான்;

''அப்படியா...? ரொம்ப சந்தோஷங்க. சகுந்தலா டிபன் டப்பாவை விட்டுட்டுப் போயிடுச்சு. அதைக் கொடுக்கலாம்னு வந்த இடத்துல உங்களைப் பார்க்கிற சந்தர்ப்பம் கிடைச்சுது...வீடுதானே...எங்க கடைக்குக் கொஞ்சம் தள்ளி ஒருவீடு காலியாக் கிடக்கிறதாகச் சொன்னாங்க. விசாரிச்சுச் சொல்றேங்க...இன்னிக்குத் தாராபுரம் வரைக்கும் போறேன். திரும்பிவர நேரமாகும். அதனால் நாளைக்காலை விசாரிச்சு வைக்கறேன். நீங்க சாயந்திரம் ஸ்கூல் விட்டதும், வீட்டுக்கோ – கடைக்கோ வாங்களேன், சொல்றேன்...''

''ஓ...ரொம்ப சந்தோஷம் மிஸ்டர் செந்தில்! உங்க உதவிக்கு எப்படி தாங்க் பண்றதுன்னே தெரியலை...''

''இதுல என்னங்க இருக்கு... ஒருத்தருக்கொருத்தர் இந்த உதவிகூட செய்துக்கலைன்னால் மனுசனாகப் பொறந்து என்னங்க பிரயோசனம்? நீங்க வாங்க, இந்தா சகுந்தலா, டிபன் டப்பா. இப்படியா மறந்து வச்சுட்டுப் போறது...''

அவனிடம் டப்பாவைக் கொடுத்துவிட்டு அவன்விடை பெற, சகுந்தலா பாரம் நீங்கினவனாக நிம்மதி பெருமூச்சு விட்டான்.

மறுநாள் மாலை கடைசி வகுப்பு முடிந்து பள்ளிக்கூட மணி அடித்ததும் சிவராமன் சகுந்தலாவைத் தேடிக் கொண்டு போனான். தன்னைப் பார்த்ததும் அந்த முகம் இன்னும் மலர்ந்து மெருகேறுவதைக் கவனித்துக் கொண்டே கேட்டான்:

"என்ன சகுந்தலா, போகலாமா?"

அவள் ஒரு வினாடி யோசித்தாள், பின்—

"வீட்டுக்கா, கடைக்காங்க?" என்று கேட்டாள்.

அவன் இன்னும் வசீகரமாகப் புன்னகை செய்து, தலையைச் சாய்த்து கவர்ச்சிகரமாகப் பார்த்துச் சொன்னான்:

"நீ எங்கே கூட்டிட்டுப் போனாலும் சரி, வரத்தயார். அது வீடா, காடான்ற பிரச்சினையே இல்லை!"

—அந்த பதிலிலும், பார்வையிலும் பெருமிதமும், குளிர்ச்சியும் அடைந்த அவள்,

"அப்படின்னா, வீட்டுக்கே போகலாங்க..." என்றாள்

"ஓ. எஸ். வா, போகலாம். வீட்டுக்கு வந்தா என்ன தருவே?"

"என்ன வேணும் உங்களுக்கு?"

"வேணும்ன்றதைக் கேட்டால் தந்திடுவியாக்கும்...?"

"நிச்சயமா தருவேன். என்ன வேணும் சொல்லுங்க... டீயா, காப்பியா?"

"ப்பூ... அதான் தருவியா... வேறெதுவும் தர மாட்டியா?"

"வேற என்ன வேணும்னு சொல்லுங்க, தரேன்!"

"நிச்சயமா தருவியா? மறுக்க மாட்டியே...?"

"ம்ஹூம்...மறுக்கமாட்டேன். சொல்லுங்க"

"இப்ப வேணாம். அப்புறமா கேட்கறேன். நல்ல சந்தர்ப்பம் வரட்டும்...கேட்கறேன்!"

"சரி இப்போ நான் முன்னால் நடந்து போறேன். பின்னால் நீங்க சைக்கிள்லவாங்க. ரெண்டு பேரும்சேர்ந்து ஒண்ணாப் போனால் அம்மா திட்டும். ஊர் ஜனங்களும் சும்மா இருக்கமாட்டாங்க..."—ஜாக்கிரதை உணர்வோடு பேசினாள் அவள். அந்த ஜாக்கிரதையைப் பார்த்துச் சிரித்தான் அவன்.



"படிச்ச பெண்ணான நீகூடவா இப்படிப் பேசற? சரி, உன் விருப்பப்படியே செய்யலாம். நீ முன்னால போ, நான் பின்னாலேயே சைக்கிளை மெதுவா ஓட்டிட்டு வரேன்..."

# 7

வீட்டிற்குப் போனதும் சிவகாமி நெஞ்சு பதைக்க எரிந்து விழுந்தாள் :

"ஏண்டி, இவன்கூடவா பள்ளிக்கூடத்துலேருந்து நடந்து வர?"

"மெதுவாய் பேசும்மா...அவரு காதுல விழப் போவுது. நான் ஒண்ணும் கூட நடந்து வரலை. நான் முன்னால வர, அவரு பின்னால சைக்கிள்லதான் வந்தாரு..."

"வந்தாரு... என்னடி வந்தாரு? 'வந்தான்'னு சொல்லேன்..."—அந்த அம்மாள் மேலும் சிடுசிடுத்தாள்.

"ஏம்மா, வாத்தியாரை 'அவன் இவன்'னு மரியாதையில்லாம சொல்லச் சொல்றியா...? மாமா வீடு பார்த்துத் தரேன்னு வரச் சொன்னாரு. இவரு வந்திருக்காரு. அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்றியாம்?"

"வரச் சொன்னா அவனே கூட்டிட்டு வரட்டும். இல்லாட்டி போனா கடைக்குவழி சொல்லி அனுப்பறது... நீ ஏன் உன் கூட கூட்டிட்டு வந்தே?"

"சரி விடும்மா! இதையே பிடிச்சுக்கிட்டு...இனிமேல கூட்டிட்டு வரலை. நான் போயி கடைலேருந்து மாமாவைக் கூட்டிவரேன். நீ அவருக்குக் காப்பி வச்சுக்கொடு..."

பதிலை எதிர்பார்க்காமல் கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு ஓடினாள். அடுத்த பத்தாவது நிமிடம் செந்திலுடன் உள்ளே நுழைந்தபோது சிவராமன் கையில் பத்திரிகை வைத்துப் படித்துக் கொண்டிருந்தான்.

செந்திலைப் பார்த்ததும் சிரித்துக் கொண்டே எழுந்து நின்றான்.

''வாங்க, வாங்க... உட்காருங்க. செட்டியாருகிட்ட வீட்டைப் பற்றி பேசிட்டேன், தனி வீடுன்றதால செட்டியாரு நூறு ரூபாய் வாடகை கேட்கறாரு. வீடு பின்கட்டும், முன்கட்டுமாகப் பெரிசா இருக்குங்க... அவ்வளவு பெரிய வீடு வேணுங்களா உங்களுக்கு?''

''இருக்கட்டும். மெட்றாஸ்லகூட பெரிய வீட்ல இருந்து பழக்கப்பட்டவங்க நான்... இந்தக் கிராமத்துக்கு வாடகை அதிகம்தான். ஆனால் பரவாயில்லீங்க.''

''அப்ப, வீட்டைப் பார்த்துடலாமா?''

''பார்த்துடலாங்க.''

''காப்பி ஏதாச்சும் குடிச்சீங்களா? அத்தை, இவருக்குக் காப்பி குடுங்க!''

சிவகாமி இரண்டு தம்ளர்களில் காப்பி கொண்டு வந்து வைத்தாள். பின் சகுந்தலாவைப் பார்த்து, ''நீ உள்ளே வந்து குடி. அப்படியே இட்லிக்குப் போட்டிருக்கேன். ஆட்டி எடுத்து வச்சிட்டு வா!'' என்றாள்.

''காப்பி மட்டும் குடிச்சிட்டு சகுந்தலாவும் எங்களோடு வரட்டும் அத்தை... வந்து மாவாட்டட்டும்.''

''அவ எதுக்கு அங்கெல்லாம்?'' என்று ஆரம்பித்தவளை இடைமறித்தான் செந்தில்:

''வரட்டுமே அத்தை! நான்தான் கூடப்போறேனே...''

அதற்குமேல் சிவகாமியினால் ஒன்றும் பேச முடியவில்லை. சகுந்தலாவுடன்கூடப் போய் வீட்டைப் பார்த்து, முன் பணம் கொடுத்துவிட்டுத் திரும்பும்போது கேட்டான் செந்தில்:

''எப்ப குடி போறதா இருக்கீங்க?...''



''நாளைக் காலையிலே — ஏன், இப்பவேகூட வந்திடலாங்க... ஒரே ஒரு பெட்டியைத் தவிர வேற சாமான் இல்லை எனக்கு.''

''வேணாங்க. சகுந்தலா, காலைல நீ பள்ளிக்கூடம் போக வேணாம்... இங்க, இந்த வீட்டுக்கு இவரோட வந்து பெருக்கி கழுவி சுத்தம் பண்ணிக் கொடுத்துடு! நம்ம கரீம் பாய் கிட்ட சொல்லி முதல்ல நல்லதா ரெண்டு பாயும், தலைகாணியும் வாங்கிக் கொடு! அப்புறமா நான் ஒரு கட்டிலுக்கு ஏற்பாடு பண்றேன்...''

''அய்யய்யோ... வேணாங்க. உங்களுக்கு எதுக்குங்க வீண் சிரமம்? நீங்க இது செய்ததே அதிகங்க...'' என்று சிவராமன் அவன் கையைப் பற்றிக் கொள்ள—சகுந்தலா தன்னைப்பற்றி உயர்வாகவும், பெருமையாகவும் நினைக்க வேண்டும் என்பதற்காகவும், தன் விசாலமான மனதைப் பாராட்ட வேண்டும் என்பதற்காகவும், அவளையே பார்த்துச் சொன்னான் செந்தில்:

''ஷ்! நீங்க பேசாம இருங்க. என்ன சகுந்தலா செய்து தரியா?''

அவள், ''அம்மா திட்டும்'' என்று தயங்க...

''அத்தைகிட்டே நான் சொல்லிக்கறேன்...'' என்றான் அவன்.

அவன் சொன்ன மாதிரி சிவகாமி ஒப்புக்கொள்ளத்தான் இல்லை.

''இவ எதுக்கு அங்கேயெல்லாம் போகணும்? வேணும்னா, அவன் ஒரு ஆளை வச்சு செய்துக்கட்டும் தம்பீ...'' என்றாள். ஆனால் செந்தில் அதில் பிடிவாதமாக இருந்தான்.

''ஏன் அத்தை, ஒரு வாத்தியாருக்கு இதுகூடவா செய்து தரக்கூடாது? நாங்களெல்லாம் எங்க ஸ்கூல் வாத்தியாருங்களுக்கு எவ்வளவு செய்திருக்கோம் தெரியுமா?''

''நீ செய்யறதும், இவ செய்யறதும் ஒன்னாயிடுமா தம்பி? நீ ஆம்பிள்ளைப்புள்ளை, எதுவும், எங்கேயும் போகலாம். அதுவும் வர்த்தியாரு வயசானவரா இருந்தாலும் பரவாயில்லை...அந்தப் புள்ளை தனியா இருக்கிற வீட்டுக்கு இவ போலாமா?''

''நீங்க ஒன்னு அத்தை. இன்னும் அந்தக்காலம் மாதிரியே பேசிக்கிட்டு...வயசானவங்கள்ளாம் தப்பு பண்ண மாட்டாங்க; இளம் வயசானால் தப்பு பண்ணிடுவாங்கங்கற நினைப்பை விடுங்க...அவரு நல்லவராத்தான் தெரியறாரு...எல்லாத்துக்கும் மேல எனக்கு சகுந்தலா கிட்ட நம்பிக்கை இருக்கு. அவ நாளைக்குப் போய் வீட்டை சுத்தப்படுத்திக் கொடுத்திட்டு வரட்டும்."

''சரி, அப்படின்னா நான் கூட துணைக்குப் போறேன்...''

''சீ! வேணாம் அத்தை' அது அவங்க ரெண்டு பேரையும் அவமானப்படுத்தறதா ஆயிடும்...அவரு படிச்சவரு. சட்டுனு புரிஞ்சுப்பாரு. அப்புறம் வெளிய சொல்லலைன்னாலும் மனசுக்குள்ள வருத்தப்பட்டுப்பாரு. வேணாம் அத்தை! நீங்க கூட போக வேணாம்..."

ஆனால் மறுநாள் காலையில் சகுந்தலாவோ, சிவராமனோ செந்திலின் நம்பிக்கையைக் காப்பாற்றுகிற விதமாக நடந்து கொள்ளவில்லை. வீட்டைப் பெருக்கி, துடைத்துக் கொண்டிருந்த சகுந்தலாவின் அழகும், உடல் அசைவுகளும், வேலையின் கவனத்தில் எதேச்சையாக விலகின தாவணியும் சிவராமனைத் தடுமாற வைக்க—அவன் உட்கார்ந்திருந்த ஜன்னல் ஓரத்தைவிட்டு எழுந்து அவளருகில் வந்தான். கீழே குனிந்து துடைத்துக் கொண்டிருந்தவளின் பின் பக்கமாக நின்று, துடைத்துக் கொண்டிருந்த துணியைப் பறித்து தூரப் போட்டு...

பதறிப்பயத்தோடுஎழுந்தவளைமிருதுவாகஅணைத்து, அவள் முகத்தைத் தன் முகத்திற்கு நேராகத் திருப்பினான்.



அவனது ஸ்பரிசமும், அணைப்பும், நெருங்கி அந்த கவர்ச்சிகரமான முகமும் நெஞ்சிலும், உடம்பிலும் குபீரென்று உஷ்ணத்தை வாரி வீச அவள் தடுமாறினாள். அதே நேரத்தில வன்மையாக அவனைத் தடுக்கவோ, திமிறவோ கையை உதறிவிட்டு ஓடவோ செய்யாததால் அவன் இன்னமும் தைரியம் பெற்றவனாக,

''சகுந்தலா...'' என்று தன்னோடு சேர்த்து உடம்பை இறுக்க,

''என்னங்க...வேணாங்க...'' என்று தலைகுனிந்தாள் அவள். குனிந்த அந்த முகத்தை நிமிர்த்தி கண்களுக்குள் பார்த்துக் கொண்டே கேட்டான்:

''ஏன், சகுந்தலா...நேத்து ஸ்கூல்ல வேற என்ன வேணுமோ கேளுங்க—தரேன்னு சொன்னியே...அது பொய்யா?'' தலைமுடியை மிருதுவாய் வருட; கொஞ்ச கொஞ்சமாகத் தன் உடம்பு அவனது மென்மையிலும், தன்னை நாடிய வித்தின் நளினத்திலும் குழைவதை உணராதவளாக மெல்ல முணு முணுத்தாள் அவள்:

''ம்ஹூம்...பொய்யில்லே...''

''நிஜம்தானே?''

''ம்...''

''எதுவானாலும் கேளுங்க—தரேன்னுசொன்னது...?''

''ம்...''

''கேட்கட்டுமா?''

''ம்...''

''இப்படி ஊமை மாதிரி 'உம்'கொட்டாமல் வாயைத் திறந்து கேளு சகுந்தலா!''

''என்ன...கேட்...க...ணும்?''

''என்ன வேணும்னு கேளு?''

''என்ன...வே...ணு...ம்?''

''நீ!''—அவன் தன் வலதுகை ஆள்காட்டி விரலால் அவளது நெஞ்சைத் தொட்டுச் சுட்டிக்காட்ட, அவளது தேகம் சிலிர்த்தது. மெல்ல நடுங்கிற்று. அந்த நடுக்கத்தில் அவள் மௌனமாக இருக்க...அவன் முன்னைவிட நிதான மாக அவள் நெஞ்சிலிருந்து தன் கையை விலக்கி, அணைப் பிலிருந்தும் லேசாய் விலகியபடி பேசினான்:

''சரி. உனக்கு என்னைப் பிடிக்கலேன்னா வேணாம்.''

''ம்ஹூம்...'' சடாரென்று அவன் கையைப் பற்றி னாள் அவள், அவன் அதற்கும் நிதானமாக நின்று கேட் டான்:

''என்ன?''

''எனக்கு உங்களைப் பிடிச்சிருச்கு...''

''பொய் சொல்றே நீ...''

''இல்லீங்க. நிஜமாகத்தான் சொல்றேன்...''

''நான் நம்பமாட்டேன்.''

''சத்தியமாங்க...''

''எங்கே...அப்படியானால என்னைக் கட்டிக் கன்னத் துல முத்தம் கொடு பார்க்கலாம்...''

அவள் தயங்கினாள்.

''பார்த்தியா...உனக்கு என்னைப் பிடிக்கத்தான் இல்...''

அவளை அதற்குமேல் பேசவிடமேல் மென்மையாய் அவனது கை முதுகை வளைததன. கன்னததில் உதடுகள் குவிந்து அழுந்தின.

மறுவினாடி, சரேலென்று அவளை இறுக அணைத்து- தலை, முகம், நெற்றி, கண்கள், கன்னம், உதடு என்று அதன் வாய் கழுத்துவரை இறங்கி...பின் மெல்ல அவளை நடத்தி அழைத்துப் போய் உள் அறையில் படுக்கவைக்க—



''வேணாங்க... வேணாங்க... பயமா இருக்குங்க...'' என்ற அவளது கெஞ்சலைப் பொருட்படுத்தாமல் சிரித்தான் அவன்.

# 8

அதன் பின் தினமுமே அந்த வீட்டில் அவர்கள் சந்திப்பது வழக்கமாகி விட்டது. அம்மாவிடம் ஏதோ ஒரு பொய் சொல்லிவிட்டு ஓடி வருவாள் அவள். அவளின் வருகைக்காகக் காத்திருப்பான் சிவராமன். வாசல் வழி யாக நுழையாமல் கொல்லைப் படலைத் திறந்து கொண்டு நுழைபவளின் தோளில் கைபோட்டு உள் அறைக்கு அழைகதுப் போவான். கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கும் மேலாக, யாருக்கும் தெரியாமல் தொடர்ந்த இந்த உறவில், அந்த மாதம் வெளித்தாழ்வாரத்தில் சகுந்தலா ஒதுங்கா மல போகவே, சிவகாமி மகளைக் கூப்பிட்டு மெதுவாக விசாரித்தாள்:

''என்னடி, இந்த மாசம் இன்னும் நீ உட்காரலை?''

பளீரென்று அடிவயிற்றில் பயம் பந்தாகக் கிளம்பி, நெஞ்சை அடைக்க சகுந்தலா தலையாட்டினாள்.

''தெ...தெரியலைம்மா...''

''என்னடி தெரியலை...? இன்னியோட முப்பதும் பத்தும நாற்பது, அதோட எட்டு நாளைக்கூட்டிக்கிட்டா நாற்பத்தெட்டு நாளாகப் போவுது...நான் கணக்கு வச்சுக் கிட்டேதானே வரேன், என்ன விஷயம் சொல்லும்... ஏன் தள்ளிப் போவுது?''

''தெ...தெரி...யா...து...''

'என்னடி திருட்டு முழி முழிக்கற? ஏதாவது தப்பு நடந்து போச்சாடி...பாவிப் பொண்ணே, சொல்லுடி... என்ன நடந்தது?''

சிவகாமி பிடித்து உலுக்கின உலுக்கில் சகுந்தலாவிட மிருந்து உண்மைகள் ஒவ்வொன்றாக உதிரத் தொடங்க, விறகுக் கட்டையாலும்— துடைப்பைக்கட்டையாலும் விளாசி விட்டாள் அவள். தன் தலையிலும், மார்பிலும் அடித்துக் கொண்டு யாருக்கும் கேட்காத வகையில் கதறினாள். செந்தில உள்ளே நுழைந்ததும் வாசல் கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, அவன் கையைப் பற்றித் தரதரவென்று சமையலறைக்குள் இழுத்துப்போய் அடுத்த வீட்டுக்குக் கேட்காமல் குமுறினாள்.

''இதோ பாருப்பா...இவ செய்திருக்கிற காரியத்தைப் பாரு...அன்னிக்கே அந்தப் பாவியோட வீட்டை இவ என்ன சுத்தம் செய்யறதுன்னு நான் கேட்டதுக்கு என்னைப் பட்டிக்காடுனு திட்டுனியே...இப்போ இவ தன்னைக் குப்பையாக்கிட்டுவந்து நிக்கறாளே..என்னப்பா செய்யப் போறே? நான் கூடத் துணைக்குப் போறேன்னு சொன்னப்ப இது அவங்க ரெண்டுபேரையுமே அவமானப் படுத்தற மாதிரி அத்தை—வேணாம்னு தடுத்தியே... இப்போ, இவ அவமானப்பட்டு—நம்பளையும் அவமானப் படுத்த வந்து நிக்கறாளே. இதுக்கு என்ன பதில் சொல்லப் போறே...அந்தப் பையன் படிச்சவன், நல்லவன்னு சொன்னியே...இவமேலே எனக்கு நம்பிக்கை இருக்குன்னியே...இப்போ ரெண்டு பேருமா சேர்ந்து அந்த நம்பிக்கையைக் குலைச்சு துரோகம் பண்ணிட்டாங்களே..இதுக்கு என்ன செய்யப் போறே?''

ரத்தக் கீறல்களுடனும், பிடித்து இழுத்து அலங்கோலப் படுத்தப்பட்ட தலைமுடியுடனும், சமையலறை மூலையில் சுருண்டு கிடந்த சகுந்தலாவையும்—சிவகாமியையும் சில வினாடிகள் ஒன்றும் புரியாதவனாகப் பார்த்தான் செந்தில். பின்னர் குரல் தடுமாறக் கேட்டான்:

''என்ன அத்தை சொல்றீங்க?''

''என்ன சொல்றேனா...? இவ இப்ப முழுகாம இருக்காடா...கிட்டத்தட்ட ஒன்னரை மாசமாயிடுச்சு...''



''என்...ன...!''

''என்னன்னு என்னைக் கேளு...வீடு பார்த்துக் குடி வச்சியே நல்லபாம்பு...அதைப் போய் கேளு! அது கடித்த விஷத்தை அதுவே உறிஞ்சப் போவுதா இல்லையான்னு கேட்டுக்கிட்டு வா!''

சில வினாடிகள் பேச்சற்று அதிர்ச்சி, அவமானம், ஏமாற்றம் எல்லாம் ஒன்றாய்த் தாக்க உறைந்துபோன செந்தில், பின் கண்களை மூடி உதட்டை இறுகக்கடித்துத் தன்னை அடக்க முயன்று அப்படியே நின்றான். ஒருமுறை சகுந்தலாவை வெறுப்பாகப் பார்த்துவிட்டு, சிவராமனைத் தேடிக் கொண்டு போனான்.

இவன் போனபோது சிவராமன் உள்ளே சகுந்தலாவிற்காகக் காத்திருக்க, இவன் கதவைத் தட்டினான். கதவைத் திறந்தவன், அந்த நேரத்தில் செந்திலை எதிர்பார்க்காததால் முதலில் அதிர்ச்சியடைந்து பின்னர் சமாளித்துக் கொண்டு உள்ளே அழைத்தான்:

''வாங்க...வாங்க. நீங்க வருவீங்கன்னு எதிர் பார்க்கலை...''

செந்தில் உள்ளே நுழைந்து கதவை மூடித் தாளிட்டவாறு அவனை உற்றுப் பார்த்துச் சொன்னான்:

''சகுந்தலாவை எதிர்பார்த்துக் காத்துக்கிட்டிருந்திருப்பீங்க...அவளுக்குப் பதிலா நான் வந்தது ஏமாற்றமாகத்தான் இருக்கு இல்லே?''

''சகுந்தலாவா...என்ன சொல்றீங்க?''

அத்தனை நேரமும் அடக்கி வைத்திருந்த குமுறல் நெருப்பாகப் பரவ செந்தில், சிவராமனை உக்கிரமாகப் பார்த்தான்.

''நான் கிராமத்து ஆளாக இருக்கலாம்...படிக்காதவனாக இருக்கலாம். ஆனால், உன்னைமாதிரி அயோக்கிய

னில்லை...துரோகியில்லையடாபாவி! சரி, எப்போ வச்சுக்கலாம் கல்யாணத்தைச் சொல்லு?''

''கல்யாணமா...? யாருக்கு?''

''வேற யாருக்கு? உனக்கும், சகுந்தலாவுக்கும்தான்!

''சகுந்தலாவுக்கும், எனக்கும் கல்யாணமா...என்ன சொல்ற நீ?''

''என்ன சொல்றேன்னு என்னைக் கேட்காதே...அவ வயத்துல வளர்ற குழந்தையைப் போயி கேளு!''

''குழந்தையா...சகுந்தலா வயத்...என்ன சொல்றேன்னு தெரிஞ்சுதான் பேசறியா நீ?''

—இப்போது சிவராமனின் முகத்தில் பதில் தாக்குதலுக்குத் தயாராகிவிட்ட பாவனை தெரிந்தது. ஆனால், அதைக் கண்டு மிரளாமல் பேசினான் செந்தில்.

''நான் விளையாட இங்க வரலை...வெட்டிப் பேச்சு பேச வரலை. எப்ப கல்யாணத்தை வச்சுக்கலாம்னு கேட்கத்தான் வந்தேன்?''

''கல்யாணமா...எனக்கா? சட்டப்படி ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிறது குற்றம்னு உனக்குத் தெரியாமல் இருக்கலாம்...ஆனால், என் பெண்டாட்டிக்குத் தெரியும் மிஸ்டர் செந்தில்!''

''பொண்டாட்டியா? அப்படின்னா, ஏற்கெனவே கல்யாணமானவனா நீ?''

''வேணும்னா, பெட்டியில் என் பெண்டாட்டியும்—நானும் சேர்ந்து எடுத்துக்கிட்ட போட்டோ இருக்குது. காட்டட்டுமா? இதோ பார். அவ எழுதின லெட்டர். இன்னும் ஒரு வாரத்துல இங்க வரேன்னு எழுதியிருக்கா... படிச்சுப் பார்க்கறியா? இங்கிலீஷ் படிக்க வருமா?''

''அடேய் அயோக்கியா...ஒரு கல்யாணம் போறாதுன்னு சகுந்தலாகிட்ட வேற ஏண்டா பழகின?''



''யாரு பழகினாங்க...? நீயா, நானா? நீதானே அவளைக் கட்டிக்கப் போறவன்னு ஊர் சொல்லுது...''

''அதுக்கு முன்னாலதான் அவளை அணில் கடிச்ச பழம் மாதிரி ஆக்கி வச்சுட்டியேடா பாவி!''

''அட...கடிச்ச அணில் நீ இருக்க, இங்க வந்து ஏன் சத்தம் போடற? பேசாம கழுத்துல தாலிகட்டிச் சேர்த்துக்கிறதை விட்டுட்டு எதுக்காக இங்க வந்து மிரட்டறே?''

''என்னடா சொன்னே எச்சக்கலை நாயே...''

ஒரே பாய்ச்சலாக அவன்மீது பாய்ந்து அவன் குரல்வளையை செந்தில் நெறிக்க முயல, தன் பலம் கொண்ட வரை அவனை உதறித் தள்ளிவிட்டு ஓடப் பார்த்தான் சிவராமன். செந்தில் விடவில்லை. பின்கட்டில் அவனை மடக்கி, மேற்கூரையில் செருகியிருந்த இரும்புக்கட்டையால் ஓங்கி ஓங்கித் தன் ஆத்திரமும் ஆவேசமும் அடங்குகிற வரை அவன் மண்டையில் போட்டு—ரத்தமும், மண்டை ஓடும், முகமும் சிதறி அறை முழுவதும் தெறிக்க...

அதன் பின்னரே அவனுக்குத் தான் செய்தது என்ன என்பது புரிந்தது... சிவராமனின் தலையைத் தூள் தூளாகச் சிதறடித்துக் கொலை செய்து விட்டிருப்பது தெரிந்தது. ஆனால் அவன் அதற்காகப் பயந்துபோய் விடவில்லை. அதிர்ச்சியடையவில்லை. சில நிமிடங்கள் அமைதியாக உட்கார்ந்து என்ன செய்ய வேண்டும் என்பதை யோசித்து முடிவு செய்த பின்னர் பின்பக்க வழியாக இருட்டில் நடந்து வீட்டிற்குப் போனான். கதவைத் தட்டி—அவனது சட்டையிலும், கைகளிலும் தெறித்திருந்த ரத்தத்தைப் பார்த்து மிரண்டுபோன அத்தையிடம் முழு விவரத்தையும் தெரியப்படுத்தினான்.

''நான் போய் போலீஸ்ல சரணடையப் போறேன் அத்தை...ஒருபோதும் எதுக்காக நான் சிவராமனைக் கொலை செய்தேன்ற விஷயத்தை மட்டும் சொல்லாதீங்க

...சகுந்தலா விஷயம் வெளில வரவேகூடாது அவ நிலைமை யாருக்கும் தெரியக்கூடாது அத்தை...எப்பிடியா வது கலைச்சு, வேற இடத்துல கல்யாணம் பண்ணிக் குடுத் துடுங்க...கொலைகாரனைக்கூட சமூகம் ஏத்துக்கும். நடத்தை தவறின பொண்களை மட்டும் ஏத்துக்கவே ஏத்துக்காது. அதனால அதை யாருக்கும் தெரியவிட மாட் டேன்னு சத்தியம் பண்ணிக் குடுங்க...'' என்று சத்தியம் வாங்கிக் கொண்டான். பின்னர்,

''சகுந்தலாவுக்கு சிவராமன் பேசிய எந்த விஷயமும் தெரிய வேணாம்...நான் ஏமாற்றத்துல கொலை பண் ணிட்டதாகவே நினைச்சிட்டிருக்கட்டும். அவள் மனசுல அவனைப்பற்றி இருந்த உசந்த எண்ணம் அப்படியே இருந்துட்டுப் போகட்டும அத்தை! நான் வரேன்..."

நேராகத் தாராபுரம்வரை நடந்தே போய் நடுராத்திரி யில் போலீஸில் சரணடைந்தான் அவன். கொலைக்கான காரணம் பணவிவகாரம்தான் என்பதை உறுதிப் படுத்தினான். வக்கீல் வைத்து தன் பக்கம் வாதா டக்கூடாது என்று மறுத்துவிட்டான். நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டு ஏழாண்டு தண்டனை விதிக்கப் பட்டு, நன்னடத்தை காரணமாகவும்-வியாதியின் முற்றிப் போன நிலை காரணமாகவும் ஒரு வருடம் முன்னரே விடுதலை செய்யப்பட்டு ஊர் வந்து சேர்ந்திருந்தான் செந்தில்...

# 9

எதிரில் கைகட்டி நின்று மரியாதையாகப் பேசின அந்த மனிதரை அனுப்பிவிட்டு எதேச்சையாகத் திரும்பின சுவாமிகள், சற்று தூரத்தில் காட்டுப் புதரின் அடியில் தயங்கி நின்றிருந்த செந்திலைப் பார்த்துவிட்டார். புதர் பகுதி முழுதும் இருட்டாக இருந்ததால் யார் என்பதை உடனடியாக அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. அதனால் தன் கம்பீரமான குரலில்,



''யார் நிக்கறது அங்கே?" என்று கேட்டார்.

அவர் தன்னைத்தான் கேட்கிறார் என்பது புரிந்தும், உடனே பதில் சொல்ல இயலாமல் குரல் இறுகித் தொண் டையை அடைத்துக் கொள்ளப் பேசாமல் இருந்தான் செந்தில். அவர் விடாமல் மீண்டும், ''யார் அங்கே...புதர் பக்கத்துல நிக்கறது?'' என்று கேட்டதும், அதற்கு மேல் மௌனமாக இருக்க இயலாமல்,

''நான்தான் சாமி...'' என்று குரல் கொடுத்தான்.

''நான்தான்னா யாருப்பா? இப்படி வெளிச்சத்துக்கு வாயேன்...''

''வெளிச்சத்துல வரக் கூசித்தான் இங்கேயே நிக்கறேன் சாமி!''

சடாரென்று அந்தக் குரலை இனம் கண்டுபிடித்து பர பரப்படைந்தார் அவர்.

''செந்தில்... செந்தில்தானேப்பா...?''—திண்ணையை விட்டு இறங்கி, படிகளில் கால் வைத்தபோது, செந்திலே புதரடியை விட்டு அவரெதிரில் வந்து நின்றான்.

''நானேதான் சாமி..."

''என்னப்பா, எப்படி இருக்..." 'கே' என்று கேட்க வாயெடுத்தவர் சடாரென்று நிறுத்திக் கொண்டார். அந்த மங்கல் வெளிச்சத்திலும் அவனது கைகளும்—கால் களும் தெரிந்து, வியாதியின தன்மையைப் புலப்படுத்த அதிர்ந்து போனார் அவர்.

''என்னப்பா இது... இப்படி வந்து நிக்கறே?''

அதற்குமேல் தாங்க முடியாதவனாகக் குலுங்கிக் குலுங்கி அழுதான் செந்தில்.

''சாமி...இன்னு காலைல விடுதலை ஆனேங்க. நல்ல நடத்தை காரணமா முன்னாலேயே விட்டுட்டாங்க..இந்த வியாதியோட வேற எங்கேயும் இருக்க முடியாதுன்னு

தான் இங்கேயே வந்துட்டேங்க. நான் இங்கேயே இருக் கேன் சாமி...இந்த ஊர்லேயே இருக்கேன்...''

''இருப்பா... தாராளமா இரு. உன்னை யாரு வேணாமனு சொன்னது? நம்ம வீட்டிலேயே இரு...ஆமா, சாப்பிட்டியா?''

''சாப்பாடு கிடக்கட்டுங்க. அப்புறமா சாப்பிடறேன். முதல்ல அத்தையும், சகுந்தலாவும் எங்கே இருக்காங்கன்னு சொல்லுங்க...''

—அந்தக் கேள்விக்கு உடனே பதில் சொல்லவில்லை அவர். ஒரு வினாடி மௌனமாக இருந்தார். பின்னர், ''முதல்ல சாப்பிடுப்பா! ரொம்ப களைச்சுப் போயி தெரி யற...அப்புறமா எல்லாம் பேசலாம். எல்லாரையும்பற்றிச் சொல்றேன்...'' என்று உள்ளே திரும்பினவரை,

''சாமி...'' என்ற குரல் தடுத்து நிறுத்தியது. சின்னத் தெரு வீராசாமி நின்று கொண்டிருந்தான். வந்தவன் ஒரு வினாடி எதிரில் நின்ற செந்திலைக் கூர்மையாகப் பார்த்து விட்டு, ''டேய்...நீ செந்தில் இல்லே?'' என்று கேட்டான். செந்தில் பதில் பேசாமல் தலைகுனிய,

''அட, கொலைகாரப் பாவி! பணத்துக்காக அப்படியா ஒரு மனுஷனை சிதறுதேங்காய் உடைக்கிற மாதிரி அடிச்சுப் போடுவே...உன் செய்கையால ஒரு குடும்பமே நாசமாயிப் போய்டுச்சேடா பாவி உன்மேல உசிர வச்சிட் டிருந்த அந்தப் பொண் சகுந்தலா பெரிய கிணற்றில் குதிச்சு தற்கொலை பண்ணிக்கிடுத்து... அந்த அதிர்ச்சி தாங்காமல் அவ அம்மாவும் போயிட்டாளேடா...நீ ஒரு கொலையா செய்தே? மூணு கொலையில்லே செய்திருக்கே ...உன்னை எப்படிடா ஜெயில்லேருந்து விட்டாங்க? இல்லே, நீயா தப்பிச்சுக்கிட்டு ஓடியாந்துட்டியா?''

''சகுந்தலா கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டு விட்டாளா? அத்தையும் அதிர்ச்சி தாங்காமல் செத்துப் போயிட்டாங்களா?''



அவன் நெஞ்சும், உடம்பும் பதற சாமியாரைப் பார்த் தான்.

''ஏன் சாமி... நிஜமா? வீராசாமி சொன்னதெல்லாம் நிஜமா...? சகுந்தலா தற்கொலை பண்ணிக்கிடுச்சா?''

சாமியார் ஓர் சின்ன பெருமூச்சுடன் அவனை இரக்க மாகப் பார்த்தார்.

''ஏப்பா செந்தில், அப்படிக்கூடவா ஆத்திரமும் கோபமும் வரும்? மனுஷனைக் கொலைபண்ற அளவுக்கா? அந்த நிமிஷத்துல நீயே எல்லாம்னு, உனக்காகக் காத்துக் கிட்டிருந்த அந்தப் பொண்ணு சகுந்தலாவை நினைச்சுப் பார்த்தியா? அவளையும், உன்னையும் நம்பி வாழ்ந்திட்டி ருந்த அந்தம்மாவை நினைச்சியா? அவங்களையெல்லாம் மறந்துட்டு கேவலம் ஒரு ஆயிரம் ரூபாய் பணத்துக்காக நிதானம் தவறிட்டியே... உன்செய்கையால ஒருகுடும்பமே அநியாயமா அழிந்து போயிடுச்சேப்பா...''

சட்டென்று செந்தில் அழுவதை நிறுத்தி அவரை ஏறிட்டுப் பார்த்தான். அப்படியானால் சாமியாருக்குக் கூட உண்மை தெரியவில்லை... அத்தை தனக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி விட்டாள். யாரிடமும் எந்த விஷயத்தையும் சொல்லவில்லை. தான் வெராமனைக் கொன்றதற்கான நிஜமான காரணம் ஊரில் யாருக்கும் தெரியாது... சகுந்தலா கர்ப்பவதியான விஷயமே தெரியாது...'

அத்தனை வருத்தத்திலும் சற்று நிம்மதி ஏற்பட்டது. ஆனால் அதை வெளிக்காட்டாமல் நின்று கொண்டிருக்க, வீராசாமி ஆவேசம் தணியாதவனாகக் குறுக்கிட்டான்:

''ஏன் சாமி... இப்போ எதுக்காக, இன்னும் யார் யாரைக் கொலை செய்யறதுக்கு இவன் ஊருக்குள்ளே நுழைஞ்சிருக்கான்?''

''ஷ்... வீராசாமி... கொஞ்சம் அமைதியா இரு...'' —சாமியார் அதட்டினார்.

''என்ன சாமி அமைதியா இருக்கிறது...இதுவரை நம்ம ஊர்ல ஒருத்தன் பேர்ல ஒரு தப்பு விழுந்திருக்கா? யாராவது போலீஸ் ஸ்டேஷன்வரை போயிருக்காங்களா? ஒரு கேஸு உண்டா? ஒருத்தன் திருடினான், அடாத வேலை செய்தான்ற பழி உண்டா? அத்தினி நல்ல பேரையும் இந்தப்பாவி கெடுத்துட்டானுங்களே...பாவம், அந்தப் பொண்ணு—கன்னிப் பொண்ணு—உங்ககிட்ட ஓடியாந்து கண்ணால ஜலம் வுட்டது, இப்போகூட அப்படியே கண் முன்னால நிக்குதுங்களே...இவனோட தண்டனையைக் கேட்டு எப்பிடி கதறி அழுதுச்சு? அந்த அவமானம் தாங்க முடியாமல்தானே மறுநாளே கிணத்றுல குதிச்சு தற்கொலை பண்ணிக்கிடுச்சு. அந்தம்மா மகராசி-பொண்ணு பின்னாலேயேபோய்ச்சேர்ந்துடலை? போலீஸ்கேஸுன்னு ஆகவிடாம சாமிதானே ரெண்டு பொணங்களையும் தகனம் பண்ணினீங்க...அத்தினி கோரத்தையும் இவன் கிட்ட சொல்லுங்க சாமி...இப்போது இவன் எதுக்காக இந்த மண்ணை மிதிச்சிருக்கான்னு கேளுங்க. ஊர் ஜனங்களுக்குத் தெரிஞ்சா இவனைச் சும்மா விட மாட்டாங்க சாமி...கையளவு தண்ணி குடிக்கக்கூட அனுமதிக்க மாட்டாங்க சாமி!''

''ஏதோ ஒரு வேகத்துல தப்பு பண்ணிட்டான் வீராசாமி! இப்போ அதுக்கான தண்டனையை அனுபவிச்சு மனம் திருந்தி வந்திருக்கான்...''

''மனம் திருந்தறதா...கொலைகாரனுக்கு ஏது சாமி மனசு? இவன் செய்தது மூணு கொலைங்க சாமி... சகுந்தலாப் பொண்ணும், அவங்கம்மாவும் செய்துக்கிட்டது தற்கொலைன்னாலும், அதுக்குக் காரணம் இவன்தான் சாமி! ஆனால் இவன் அனுபவிச்ச தண்டனை ஒரே ஒரு கொலைக்கு மட்டும் தான். இன்னும் ரெண்டு கொலைக்கான தண்டனை பாக்கியிருக்கே சாமி...''



—அந்தப் பேச்சைக் கேட்டு செந்திலைவிட சாமியாரே அதிகம் துடித்துப் போனார்.

''பாவம்ப்பா...இப்படிப் பேசாதே; இவனே ரொம்ப மனசு ஒடிஞ்சு போய் வந்திருக்கான். ஜெயில்ல இருந்ததில் இந்த வியாதியை வேறு சம்பாதிச்சு, முற்ற வச்சிட்டு வந்திருக்கான்...உடம்பெல்லாம் புண்ணாக்கிட்டு வந்திருக்கிறவனை இப்படிப் பேசி மனசையும் புண்படுத்தாதே...''

அப்போதுதான் அவனைத் தெளிவாகப் பார்த்தான் வீராசாமி. வளைந்த விரல்களும், சீழும் புண்களும், ரத்தமும் கண்களில் பட்டன. ஆனாலும் மனமிரங்காதவனாகப் பேசினான் :

''என்ன சாமி பாவம்... இவனுக்கெல்லாம் பாவம் பார்த்துக்கிட்டு...உங்க மனசு, எல்லாத்தையும் விட்ட மனசு— பார்க்கறீங்க! எங்களால முடியுமா சாமி... ஆண்டவனே பாத்து என்ன தண்டனை கொடுத்திருக்கான் பாருங்க? வேணும் சாமி இவனுக்கு! ஏதோ பழகின தோஷத்துக்கு சோறு போட்டு திருப்பி அனுப்பிடுங்க... அவனை இங்க வச்சுக்க ஊர் ஜனங்க சம்மதிக்க மாட்டாங்க. சொல்லிட்டேன் சாமி...நான் வரேன்!''

''எங்கே வந்தே, உடனே போறேன்ற...?''

''இல்லீங்க. ஒரு நல்ல காரியம் பேசலாம்னு வந்தேங்க. சகுனத்தடையா இவன் நிக்கறான்...அப்புறம் வரேங்க.''

வீராசாமி திரும்பிப் போனதும் சாமியார் செந்திலைப் பார்த்துச் சிரித்தார்.

''அவன் பேசினதை மனசுல வச்சுக்காதே செந்தில்.... வா, உள்ள போய் சாப்பிடலாம்.''

செந்தில் உடனே உள்ளே போய்விடவில்லை. சில வினாடிகள் தீவிர யோசனையோடு நின்றான். அதைப் பார்த்த சாமியார்,

''என்ன யோசனை?'' என்றார்.

''ஒண்ணுமில்லீங்க...வீட்ல அம்மா, குழந்தைங்க யாருமில்லீங்களா?''

''இல்லைப்பா...சொந்தக்காரங்க வீட்டுல கல்யாணம் கோயம்புத்தூர் போயிருக்காங்க. உள்ள வாப்பா...''

அவன் தயங்கினான்.

''இல்ல சாமி...இதை நீங்க வீடா வைக்கலை. கோவிலா வச்சிருக்கீங்க. நான் நேரா ஜெயில்லேருந்து ஊரெல்லாம் சுற்றிக்கிட்டு வந்திருக்கிறவன். இப்படியே உள்ள நுழைய விருப்பப்படலீங்க...இப்படியே போய் குளத்துல முழுகிட்டு வந்துடறேங்க.''

அவன் சொன்னது சரி என்று பட்டாலும் யோசித்து கேட்டார் அவர்,

''குளத்துக்கா போகப் போற குளிக்கிறதுக்கு? உள்ள போய் குளியலறையில் குளிச்சுட்டு வாயேன்...''

''வேணாம் சாமி...குளத்துக்கே போயிடறேன்.''

''அப்படின்னா, பார்த்துப் போப்பா...வழக்கமா போற பாதையில் போகாதே. இப்போதெல்லாம் அந்தப் பக்கம் யாரும் போறதில்லே. வழியில் நல்லபாம்பு ஒண்ணு புத்துக்குள் குடியிருக்கு...அது முட்டை யிட்டிருக்குப் போல இருக்கு. அடைகாக்க 'புஸ் புஸ்' ஸுன்னு சீறுது... ஒருத்தரையும் அந்த வழியில் போகவிடறதில்லை. அதனால் நீ சுற்றிக்கிட்டு கொய்யாத் தோப்பு வழியில் போ...''

அதைக் கேட்டு ஒரு விநாடி அப்படியே நின்றான். மனதிற்குள் எதையோ யோசித்தான். திடமானதோர் தீர்மானத்திற்கு வந்தவனாக, ''சரி சாமி...'' என்று நடந்தான்.

அவனுக்கு இலை போட்டு காரியரில் வந்திருந்த உணவை எடுத்து வைக்க சாமியார் உள்ளே போனார்.

# 10

சாமியார் வீட்டை விட்டு சிறிது தூரம் போனதும் நின்று திருப்பிப்பார்த்தான் செந்தில். சாமியார் அங்கேயே நின்று தன்னைக் கவனிக்கிறாரோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருந்தது. ஆனால் அவர் உள்ளே போய் விட்டிருப்பது தெரிய, ஒருவிநாடி அவரது அன்பை நினைத்து நெகிழ்ந்து போனான். இப்படி அன்பாக இருப்பதைத் தவிர வேறு எதுவும் தெரியாமல் ஒரு பிறவி இருக்க முடியுமா என்று யோசித்தான். அவருக்காகவாவது உயிர் வாழலாம் என்கிற சபலம் லேசாய் மனதிற்குள் எழுந்து, சற்று முன்பு ஏற்பட்டிருந்த வைராக்கியத்தையும், மனத்தின் திடத்தையும் அசைக்கத் தொடங்கியதும், உடனே மீண்டும் பிடிவாதமாகக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

'கூடாது—முடிவு பண்ணினதை எக் காரணம் கொண்டும் மாற்றிக் கொள்ளக்கூடாது. அத்தையும் சகுந்தலாவும் போனபின் தான் மட்டும் உயிர்வாழ்வதில் எந்த அர்த்தமும் இல்லை. வாழ்க்கையில் பிடிப்பு எதுவும் இல்லை. பந்தபாசமில்லை தன்னிடம் இரக்கமும், அன்பும் காட்டக்கூடிய ஒரே பிறவியான சாமியாருக்கும் தன்னால் சிறு உதவிகூட இருக்க முடியாது...துடைப்பம் பிடித்துப் பெருக்குவதற்குகூட லாயக்கற்றவன். உழைத்து சம்பாதித்து சாப்பிடுகிற லக்கற்றவன். சாமியார் வீட்டில் சாப்பிடுவதானாலும் அவருக்கு ஏதாவது ஒரு வழியில் உபயோகப்படுபவனாக இருக்க வேண்டும்...இந்த உடல் நிலையில் எதற்கும் உபயோகமற்று அவருக்கும் கஷ்டம் கொடுக்கக்கூடாது. தன்னை வைத்துக் கொண்டால் அவரும் ஊராரின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். ஏற்கெனவே வீராசாமி தன்னைத் திருப்பி அனுப்பும்படி சொல்லிவிட்டுப் போயிருக்கிறான்...அதை மீறி அங்கு பிடிவாதமாகத் தங்கி அவரை உபத்திரவப்படுத்துவதை

விட, சற்று முன்னால் முடிவு செய்தமாதிரி செயல்படுவது தான் விவேகம்...இதனால் தனக்கும் தொந்தரவில்லை; மற்றவர்களுக்கும இல்லை. இந்த முடிவுதான் சரி. இதுதான் விமோசனம். இதை விட்டால் வேறு வழியில்லை...'

அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டான். சிறிது தாமதித்தாலும் மனம் வேறுவிதமாக முடிவெடுத்து விடும் என்பதால், மேலே யோசிக்காமல் பாம்புப் புற்றிருந்த பாதையில் சடாரென்று திரும்பி நடந்தான், பத்தடி போவதற்குள்ளாக அடைகாக்கிற பாம்பின் 'புஸ்புஸ்' ஸென்ற சீற்றம் கேட்டது. இவன் பயப்படவில்லை. புற்றை நெருங்கி கண்களை மூடி ஒருமுறை சாமியாரை நினைத்தான். சகுந்தலாவை நினைத்துக் கொண்டான். அத்தையை நினைத்தான். பின் சட்டென்று தன் வலது காலால் ஓங்கி புற்றை ஓர் உதை உதைக்க, படமெடுத்து நின்ற பாம்பு தலையைக் குனிந்து அந்தக் காலைக் கொத்தியது. அது கொத்துவதைப் பார்த்த இவனுக்கு குபீரென்று ஒரு சந்தோஷம் ஏற்பட்டது. அந்த சந்தோஷத்தில் மீண்டும் இடது காலை ஓங்கினதில் அதில் ஒருகொத்து...பின் வலதுகையை வீசி அதில் ஒரு விஷத்தை இறக்கிக் கொண்டு, இடது கையையும் வீசினவன்,

அதற்குமேல் தாக்குப்பிடிக்க முடியாவனாக சந்தோஷத்துடன் சாமியாரிடம் செல்வதற்காகத் திரும்பி ஓடி வந்தான்.

'சாமி...என்னைப் பாம்பு தீண்டிடுச்சு...நான் போறேன் சாமி...யாருக்கும் பாரமில்லாமல் அத்தையையும், சகுந்தலாவையும் பார்க்கப் போறேன்...'

குறுக்குப்பாதையை விட்டு வெளியில் ஓடி வந்தவன் பிரதானச் சாலைக்குச் சற்று முன்பாகவே கீழே விழுந்தான். வாயில் நுரை தள்ளி கண்கள் செருகிற்று. நினைவு தடுமாறியது. கடைசி நிமிடத்தில் குழந்தை முகம் தெரிய...

ஓய்ந்து போனான்.

# 11

செந்தில் போய் நீண்ட நேரமாகியும் திரும்பி வராததால், சாமியாரின் மனதை சந்தேகம் வருடிற்று. வீராசாமியின் பேச்சால் அவன் புண்பட்டுப் போனதைப் புரிந்து கொண்டிருந்தார். அத்தையும், சகுநதலாவும் மறைந்த அதிர்ச்சியால் இன்னமும் பாதிக்கப்பட்டிருந்ததும் தெரிந்தது...இதன் காரணமாக அவன் ஒருவேளை ஊரைவிட்டுப் போய்விட முடிவு செய்திருப்பானோ என்றுதான் தோன்றிற்று.

'அப்படிப் போனால் அவன் என்ன செய்வான்? கை கால்கள் சரியற்ற நிலையில் சாப்பிட வழி ஏது? கையேந்தி சாப்பிடுவதைவிட தன் வீட்டில் இருக்கச் சொல்லலாம... தாங்கள் சாப்பிடுவதைப் பகிர்ந்து கொள்ளலாம். கோமதியோ, குழந்தைகளோகூட இதற்கு ஆட்சேபிக்க மாட்டார்கள். தன்னிடம் இருப்பதை விட்டு எதற்காக இந்தப் பைத்தியக்காரன் ஊரை விட்டு ஓட முடிவு செய்தான்.

அவர் தவித்துப் போனார். இந்த ராத்திரி நேரத்தில் பஸ் கிடையாது என்பதாலும், நீண்டதூரம் அவன் போயிருக்க முடியாது என்கிற தைரியத்திலும் வெளியில் வந்து பக்கத்துவீட்டு ஆண்களை அழைத்து விஷயத்தைச் சொன்னார். அதற்குள் தெரு முழுதும் சுணிசமாகக் கூடிப் போயிற்று.

"போகட்டும் சாமி... விடுங்க. அந்தக் கொலைகாரப் பாவிக்காக ஏன் இப்படித் தவிக்கிறீங்க...?" என்பதுதான் நிறைய பேரின் பதிலாக வந்தது. ஆனாலும் அவர் விடவில்லை.

"பாவம்பா! ஏதோ ஆத்திரத்துல தப்புப் பண்ணிட்டானே தவிர செந்தில் நல்லவனப்பா... அதுக்கு முன்னால எந்த வம்புக்காவது வந்திருக்கானா? அதுவுமில்லாம— நம்ம ஊர்க்காரன், இந்த மண்ணுல பிறந்து வளர்ந்தவன் ...அவனை நாம விரா' டிட்டதா இருக்கக்கூடாது. அதுவும்

இந்த ராத்திரி நேரத்தல அனுப்பக்கூடாது. ஜெயில்லேருந்து விடுதலையாகி நேரா நம்மைத் தேடி, களைச்சுப் போய் பசிச்சு ஓடிவந்தவனை ஒருவாய் சாப்பாடுகூடப் போடாமல் அனுப்பினது மகாபாவம். நாம தேடிப்போய் கூப்பிட்டால் நிச்சயம் வந்துடுவான். வாங்கப்பா போகலாம்...''

''ஏன் சாமி, நாம அவனை அனுப்பலியே..அவனாகத் தானே போயிருக்கான்?''

''இருக்கலாம். ஆனாலும் போய் கூட்டிட்டு வந்துடலாம். வாங்க...''

சாமியாருடன் நாலைந்து பேர்கள் கையில் லாந்தர் விளக்குடன் கிளம்பினார்கள். சிறிது தூரம் போய் குளத்திற்கான ஒற்றையடிப்பாதையை நெருங்கினதும், ஒருவன் லாந்தரைத் தூக்கிப் பார்த்துச் சொன்னான்:

''சாமி! குளத்தங்கரைப் பாதையில் யாரோ விழுந்து கிடக்காங்க...''

அடுத்த நிமிடம் செந்திலைத் தூக்கி வந்து வீட்டுத் திண்ணையில் கிடத்தி விளக்கைப் போட்டு முகத்தில் தண்ணீர் அடித்தார்கள். மறு வினாடி லேசாய் கண் திறந்த அவன் தண்ணீருக்காக செய்கை காட்ட, யாரோ ஓடிப்போய் தண்ணீர் கொண்டு வந்தார்கள். அதற்குள் அவனைப் பரிசோதித்த சாமியார் பாம்பினால் தீண்டப் பட்டிருப்பதைப் புரிந்து கொண்டார். மனம் பதைக்க வாய்விட்டு அரற்றினார்:

''அடப்பாவி! அந்தப் பக்கம் போகாதேன்னு சொல்லியனுப்பினேனேடா... வேணும்னே போய் நல்லபாம்பு விஷத்தை இறக்கிட்டு வந்திருக்கியே... சாகணும்கிற வெறியில் இந்தக் துணிச்சல் கூடவா வரும்?''

—அவர் அரற்ற அரற்ற ஒருவன் கேட்டான்:

''ஏன் சாமி, நல்லபாம்பு கடிச்சா இன்னமும் உயிரோட இருக்கான்...?''

அவருக்கும் அந்தச் சந்தேகம் தோன்றியது. இன்னமும் செந்தில் உயிரோடு இருப்பதன் காரணம் பிடிபட



வில்லை. உடம்பு முழுதையும் பரிசோதித்ததில் கை, கால்களில் கடிவாய் தென்பட்டது. 'இத்தனை இடங்களில விஷம் இறங்கின பின்பும் இவன் சாகாதது கிடக்கட்டும்... நினைவோடு வேறு இருக்கிறான்—தண்ணீர் கேட்கிறான்.. இது எப்படி சாத்தியமாயிற்று?'

அவர் யோசித்துக் கொண்டிருந்தபோதே மீண்டும் கண்விழித்த செந்தில் மறுபடியும் தண்ணீர் கேட்டான். பாம்பு கடிக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடாது...அதுவும் நல்ல பாம்பு கடிக்குத் தண்ணீர் ஆகாது என்பது தெரிந்ததும் தம்ளர் தம்ளராகத் தண்ணீர் ஊற்றிக் கொடுத்தார் அவர். ஒரு செம்பு தண்ணீர் முழுதையும் குடித்த செந்தில் மீண்டும் நினைவிழக்க—

அந்தத் திண்ணையில் அதேநிலையில் மூன்று நாட்களாகக் கிடந்தான் செந்தில். மூன்று நாட்களும் சாமியார் திண்ணையை விட்டு அகலாமல் சோதித்துக் கொண்டு இருந்தார். மூச்சு மட்டும் ஏறி இறங்கிற்று. இருதயத் துடிப்பு கேட்டது. மூன்று நாளான பின்பும் நல்லபாம்பு கடித்து ஒருவன் உயிரோடு இருப்பது ஊர் மக்களுக்கு ஆச்சரியமான செய்தியாகப் பட, அத்தனை பேரும் வந்து அவனைப் பார்த்தனர். திண்ணையைச் சுற்றிக் கூட்டம் போட்டனர்.

''இது என்னடி அதிசயமாயிருக்கு...நல்லபாம்பு கடிச்சுமா உசிரு ஓடுது...?''

''அதில்லேக்கா...அந்த விஷத்தைவிட இவன் ஒடம்புல அதிக விஷமிருந்திருக்கு...''

சடாரென்று சாமியாருக்கு விஷயம் பிடிபட்டது. எதனால் அவன் இன்னமும் உயிரோடு இருக்கிறான் என்பதற்கான காரணம் தெரிந்தது. அவன் உடலிலிருந்த வியாதியின் விஷம் நல்லபாம்பு விஷத்தைத் தாக்காமல் செய்திருக்கிறது...

நாலாவது நாள் காலையில் சாமியார் பார்த்தபோது, அவனது கை...கால்களில் சீழும் ரத்தமும் வடிவது நின்று புண்கள் லேசாய் காயத் தொடங்கியிருந்தன. செந்தில்

நன்றாகக் கண்களைத் திறந்து அவரைப் பார்த்தான். ஒரு வினாடி அவரது முகம் கனவு மாதிரி தோன்றியது. பின்னர் மெல்ல, ''சா...மி...'' என்று கூப்பிட்டபோது, மடமடவென்று எல்லாம் நினைவிற்கு வந்தன. 'தான் இன்னும் சாகாமலா இருக்கிறோம்?'' என்ற கேள்வி எழுந்து மருட்டிற்று.

சாமியார் சந்தோஷத்தினாலும், நெகிழ்ச்சியினாலும் மெல்ல அவனது தலையை வருடிக் கொடுத்தார். அது புரிந்த அவன் இன்னமும் அசதி மாறாதவனாக மெது வான குரலில் கேட்டான்:

''ஏன் சாமி...நான்...இன்னுமா...உசி...ரோட இருக் கேன்?''

மெலிதாய் புன்னகை செய்து கொண்டே சொன்னார் அவர்:

''அதுமட்டுமில்லே...உன் கை—கால் விரல்களையெல் லாம் பார்த்தியானா இன்னும் சந்தோஷப்படுவே...''

''என்னசாமி ஆகியிருக்கு...?''—கேட்டுக் கொண்டே மெல்ல எழுந்து சுவரில் சாய்ந்து உட்கார்ந்தவன் ரத்தமும், சீழும் உறைந்து காய்ந்து கருகிக் கொண்டே வந்த புண்களைப் பார்த்து ஒரு வினாடி பேச்சற்றிருந்தான். பின்னர் உதடுகள் துடிக்கச் சாமியாரை ஏறிட்டபோது கண்களிலிருந்து கண்ணீர் கன்னங்களில் வழிந்தது. கைகால்களில் லேசாய் உதறலெடுத்தது.

''சா...மி சா...மி...'' என்று தடுமாறினான்.

''ஒண்ணும் பேச வேணாம். இந்தா... இதை முதல்ல சாப்பிடு!'' என்று நீர்மோர் குவளையை அவன் கையில் திணித்தார் சாமியார்.

ஐந்தாம் நாள் காலையில் அவன் கை—கால்கள் புண் களில கருகல்கள் முற்றிலும் தானாக உதிர்ந்தது. புண்ணிருந்த இடத்தில் வெறும் தழும்புகள் மட்டுமே அடையாளமாக நின்றபோது...

தாங்க முடியாதவனாக செந்தில் குலுங்கிக் குலுங்கி அழு—

அவனாக அழுது ஓயட்டுமென்று மௌனமாக இருந் தார் சாமியார்...

—: முற்றும் :—

PUBLIC LIBRARY 31 MAR 2004 CHENNAI-600 008